


# ஆவி
# ஆத்துமா
# சரீரம்





பாஸ்டர்
மா. ஜான்ராஜ்

# ஆவி
# ஆத்துமா
# சரீரம்

**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**

**சீயோன்கோட்டை**
**சர்வதேச ஊழியங்கள்**

விலாசம்:
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்,**
26/D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி. 626123.
போன்: 0091-4562-230491
சபை: 0091-4562-277209
பேக்ஸ்: 0091-4562-230491
இமெயில்: pastor_m_johnraj@yahoo.com
Website : www.carmel.org.in

**ஆவி, ஆத்துமா, சரீரம்**

| | |
|---|---|
| எட்டாம் பதிப்பு | : செப்டம்பர் 2011 |
| மொத்தப் பிரதிகள் | : 1000 |
| உரிமை | : பாஸ்டர் மா. ஜான்ராஜ் |
| விலை | : ரூ 60/- |
| | : வெளிநாடுகளில் 4 US. டாலர்கள். |


**திறவுகோல் வசனம்**

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

(I தெச: 5:23,24)

# மதிப்புரை

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்ற நமதாண்டவரின் வார்த்தையின்படி ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறித்த சத்தியங்களடங்கிய "திரித்துவ மனிதன்" என்ற இப்புத்தகம் அனேகரை விடுதலையாக்குவது நிச்சயம். இப்புத்தக ஆக்கியோனாகிய பாஸ்டர் **M. ஜான்ராஜ்** அவர்களைக் கொண்டு சென்னை, மதுரை, காரைக்குடி, பம்பாய் போன்ற இடங்களில் இதே தலைப்பில் வேத பாடங்கள் நடத்தும்படியாக தேவன் உதவி செய்தார். அனேகரை வெற்றி வாழ்க்கைக்குள் தேவன் வழி நடத்தினார். ஊழியர்கள், விசுவாசிகள் பக்தி விருத்தியடைந்து ஆத்தும ஆதாயம் செய்ய, ஆண்டவருக்காக குற்றமற்றவர்களாக வாழ ஏவப்பட்டனர்.

பாஸ்டர். **M. ஜான்ராஜ்** அவர்களை பல ஆண்டுகளாக அறிவேன். ஆத்தும பாரமுள்ள, ஆவியினால் நிறைந்த மேய்ப்பனும் போதகருமாக அழைக்கப்பட்ட உண்மையுள்ள தேவ ஊழியன்.

அறியாமையினாலே தேவ ஜனங்கள் சிறைப்பட்டு சங்காரமாகிற இக்காலத்தில் தேவனிடத்திலிருந்து வெளிப்படுகிற சத்தியமாக இப்புத்தகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை குற்றமற்றதாகக் காத்துக் கொள்ளுங்கள், கிருபை பெருகுவதாக.

**S. ஜோசப் பாலச்சந்திரன்,**

**இயேசு ஜீவிக்கிறார். மதுரை - 7.**

# பொருளடக்கம்

**அத்தியாயம் I ஆவி மனிதன்**

2. ஆவி மனிதனின் பிரிவுகள்
   a) ஆவியில் உணர்வு
   b) ஆவியின் ஐக்கியம்
   c) ஆவியின் மனச்சாட்சி
3. ஆவியும் ஆசரிப்புக்கூடாரமும்
4. ஆவியும் பிரமாணமும்
5. ஆவியின் வீழ்ச்சி
6. ஆவியின் மறுபிறப்பு
7. ஆவியின் வளர்ச்சி

**அத்தியாயம் II ஆத்துமா என்றால் என்ன?**

ஆத்துமாவின் பிரிவுகள்
நித்தியத்தில் ஆத்துமா

1. மனம்
2. அறிவு
3. உணர்ச்சி
4. சித்தம்

**அத்தியாயம் III சரீரம்**

1. பாவம்
2. வியாதி
3. மரணம்

**அத்தியாயம் IV ஆத்துமாவின் வியாதியும் விடுதலையும்**

1. மனமடிவு
2. மனவியாகுலம்
3. மனச்சோர்வு

**அத்தியாயம் V ஆவியினால் நடத்தப்படுங்கள்**

1. உலகத்தின் ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்
2. மனுஷ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்
3. தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்

**அத்தியாயம் VI தேவனுக்கென்று ஒரு சேனை**

1. ஆவியினால் உயிரடைதல்
2. ஆத்துமாவில் உயிரடைதல்
3. சரீரத்தில் உயிரடைதல்

**அத்தியாயம் VII ஆத்துமா வாழ்வது எப்படி?**

**அத்தியாயம் VIII மூன்றுவித மக்கள்**

1. ஆவிக்குரிய மக்கள்
2. அறிவு சார்ந்த மக்கள
3. உணர்ச்சி வசப்படுகிற மக்கள்

**அத்தியாயம் IX மூன்றுவித நிறைவுகள்**

# 1 ஆவி
# SPIRIT

## மனிதன் எப்படிப்பட்டவன்?

ஏனெனில் "இவ்விரண்டினாலும்" நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை உண்டு. அது அதிக நன்மையாயிருக்கும்.

அப்படியிருந்தும் நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (பிலி 1:23,24) என்றார் அப்போஸ்தலனாகிய பவுல்.

தேவ மனிதனாகிய பவுல் இந்த வசனங்களில் தனக்குள் இருக்கும் இரண்டு தன்மைகளை, இரண்டு பிரிவுகளைக் குறித்துக் கூறுகிறார். "இவ்விரண்டினாலும்" நான் நெருக்கப்படுகிறேன் என்கிறார். அந்த இரண்டு பிரிவுகளும் என்ன?

தேகம் - எனக்கு (பிலி 1:23)
சரீரம் - நான் (பிலி 1:24)

தேகம் என்ற சரீரத்தில் "எனக்கு" என்று கூறும் பவுல் வாழ்கிறார். சரீரம் என்ற புறம்பான மனுஷனுக்குள் "நான்" என்று கூறும் உள்ளான மனுஷனாகிய பவுல் வாழ்கிறேன் என்கிறார்.

எனவே பவுலுக்குள் 1. புறம்பான மனுஷன் என்ற பகுதியும், 2. உள்ளான மனுஷன் என்ற பகுதியும் உண்டு என்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது. IIகொரி 4:16ல் எங்கள் புறம்பான மனுஷனானது (Out ward man) அழிந்தாலும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் (in ward man) புதிதாக்கப்படுகிறது என்கிறார். பவுல் அப்போஸ்தலனின் புறம்பான மனிதனாகிய "சரீரம்" தேவனுடைய ஊழியத்தில் பலபாடுகள் பட்டு, கப்பல் சேதம், பிரயாசம், கண்விழிப்பு, பசி, பட்டினி, சவுக்கடிகள், வயதின் முதிர்ச்சி இவற்றினால் நாளுக்கு நாள் அழிந்து கொண்டே போனது. முதுமை அடைந்தது. உருவம் மாறிக் கொண்டே இருந்தது.

ஆனால் உள்ளான மனுஷனானது, ஆவிக்குரியவனாய் இருந்தபடியால்

(Spiritual man) சோர்வு அடையவில்லை. ஸ்தோத்திரம், ஜெபம், உபவாசம், அபிஷேகம் ஆகியவற்றால் என்றும் இளமையாக இருந்தான். மேலும் புறம்பான மனுஷனாகிய சரீரம் - உலகில் பிறந்தது. வளர்ந்தது. வாலிபமாகிறது. இளவயதானது. முதுமையானது. கடைசியில் மரித்தது. எனவே புறம்பான மனுஷனாகிய சரீரத்துக்கு மரணம் உண்டு. அழிவு உண்டு. மண்ணானது தான் முன்பிருந்த மண்ணுக்கு திரும்பினது. ஆனால் உள்ளான மனுஷனாகிய "ஆவிக்குரிய மனிதனுக்கு" அழிவு கிடையாது. தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடு வாழ்வேன் என்கிறார். அந்த வாழ்வு நித்தியமானது.

**"பொய் உடம்புக்குள் ஒரு மெய் மனிதன்" வாழ்கிறான். "புறம்பான மனுஷனுக்குள் ஒரு உள்ளான மனிதன்" வாழ்கிறான்.** "சரீரப் பிரகாரமான மனிதனுக்குள் ஒரு ஆவிக்குரிய மனிதன்" வாழ்கிறான். இந்த சரீரத்திற்கும், ஆவிக்கும் போராட்டம் நடக்கிறதாக சொல்கிறார். மாமிசம், ஆவிக்கு விரோதமாகவும் ஆவி, மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டும் என்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக் கொன்று விரோதமாயிருக்கிறது (கலா 5:17)

1. மாம்ச மனிதன் - Body
2. ஆவி மனிதன் - Spirit

என்ற இரண்டு பிரிவுகள் மனிதனுக்குள் இருக்கிறது. அப்போஸ் தலனாகிய பேதுருவும் இதை விவரிக்கிறார். I பேதுரு 3:3ல் "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்கள் அணிந்த உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமா யிராமல்" என்று சொல்லும் இடத்தில் மேலே சொன்ன மூன்று அலங்காரங்களும் சரீரத்திற்குரிய அலங்காரமாயிருக்கிறது.

ஆனால் உள்ளான மனுஷனும் உண்டு என்று அடுத்த வசனத்தில் சொல்லுகிறார். அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலு முள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது என்கிறார்.

எனவே உள்ளான மனுஷன்

* ஆவியாகிய மனிதன் - Spirit man ஆங்கில வேதத்திலும் (KJ)
* அவன் குணத்தை உடைய மனிதன் தமிழ் வேதத்திலும்
* அவன் மறைந்திருக்கிற மனிதன் Hidden Person புதிய மொழிப் பெயர்ப்பிலும் (LV)
* இருதயத்தில் தங்கி இருக்கும் மனிதன் என்று Hidden man of the Heart பழைய மொழி பெயர்ப்பிலும் விவரிக்கப்படுகிறான். (AV)

எனவே உள்ளான மனிதன் ஆவியாகிய மனிதன் என்று வேதம் சொல்லுகிறது. ஆதி 1 : 27ல் மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்.

தேவனுடைய சாயல், என்றால் என்ன? யோவான் 4:24ன் படி தேவன் ஆவியாயிருக்கிறார். எனவே தேவ சாயலில் உருவாக்கப்பட்ட மனிதனும் "ஆவியாய் இருக்கிறான்" ஆதி.2 :7ன் படி தேவன் மனிதனை பூமியின் மண்ணினால் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். "NABHACH" என்ற எபிரேய வார்த்தைக்கு சுவாசம் என்றும், ஆவி என்றும் பொருள்படும் (எசே. 3 :5) எனவே ஜீவ ஆவியை அவன் நாசியில் ஊதினார். அப்பொழுது மனிதன் ஜீவ ஆத்துமாவானான். எனவே உள்ளான மனிதன் ஆவி மனிதனே.

என் நண்பர் ஒருவரின் தகப்பனார் அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஏட்டையாவாகப் பணியாற்றினார். (Head - Constable) அவருக்கு வயது 52. திடீரென ஒருநாள் மாரடைப்பினால் இறந்து போனார். அவரின் அடக்க ஆராதனைக்கு நான் சென்றிருந்தேன். ஏட்டையாவை குளிப்பாட்டி வெள்ளைத் துணியால் சுற்றி சவப்பெட்டியில் வைத்திருந்தனர்.

யாரோ அவரின் உறவினர்கள் வரவேண்டும் என்று வழி மேல் விழி வைத்து காத்திருந்தனர். சவப்பெட்டியை இன்னும் மூடவில்லை. அந்நேரம் வந்தவர் ஏட்டையாவின் தம்பியாவார். அண்ணா! போய்விட்டீர்களே! என்று புலம்பினார். ஏட்டையாவின் சரீரம் எல்லோருக்கும் முன்பாக பெட்டியில் படுத்திருக்கிறது. ஆனால் அவரின் தம்பியோ அண்ணா! போய்விட்டீர்களே! என்று அழுகிறார். எனவே இவர் அண்ணன் என்று அழைப்பது ஆவி மனிதனாகிய ஏட்டையாவைத்தானே தவிர சரீர மனிதனை அல்ல.

தொடர்ந்து தம்பியாரின் மனைவி வந்தார்கள். அத்தான்! போய் விட்டீர்களே! என்று அழுதாள். 6 அடி உயரமுள்ள அத்தான் தனக்கு முன் பெட்டியிலே கிடத்தப்பட்டிருக்கிறார். ஆனால் அத்தான் போய் விட்டீர்களே! என்று அந்தப் பெண் கதறினாள். எனவே இதுவரை அத்தானாக அழைக்கப்பட்டவர் ஆவி மனிதனே. ஆவி பிரிந்த பின்பு சரீரம் மண்ணாக, பிணமாக எண்ணப்படுகிறது. ஆவியை இழந்த அத்தானை அவர்கள் வீட்டுக்குள் ஒருநாள் கூட வைத்திருக்க முடியாது. எனவே நாம் மனிதன் என்று அழைப்பது ஆவி மனிதனையே!

தொடர்ந்து அக்குடும்பத்தின் மகன் வந்தார். பெரியப்பா! போய்விட்டீர்களே! என்று கூப்பாடு போட்டான். அவனின் பெரியப்பா துணியால் போர்த்தப்பட்டவராக பெட்டியில் படுத்திருக்கிறார். ஆனால் இவனோ! பெரியப்பா போய்விட்டீர்களே என்று அழுதான். எனவே இதுவரை இவனின் பெரியப்பாவாக இருந்தவர் 6 அடி உயரமுள்ள சரீரத்திற்குள் இருந்த ஆவி மனிதனே பெரியப்பாவாக இருந்தார். இந்த ஆவி, சரீரத்தை விட்டுப் பிரிந்து பின்பு சரீரம் மண்ணுக்குள் பினமாக நாற்றமெடுக்கிறது. எனவே, ஆவி மனிதனே உண்மையான மனிதன்.


மனிதனுக்கு தேவன் தந்த சுவாசத்தில் தேவன் தமது ஆவியை அவனுக்குள் இருக்க கட்டளையிட்டார் (யோபு 34:14) அந்த ஆவியால் தேவன் தந்த ஜீவன் இருந்தது. (யோபு 27:2) இவ்விதமாய் தேவன் மனிதனுக்கு, சுவாசம், ஆவி, ஜீவன், உயிர் தந்தார் (அப் 17:25) எனவே மனிதன் தேவனால் படைக்கப்பட்டவன். அவன் ஆவியாய் இருக்கிறான்.

மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் அல்ல. மிருகங்களுக்கு சுவாசம் இருக்கிறது. ஆனால் தேவனுடைய ஆவியோ, தேவனுடைய ஜீவனோ, தேவனுடைய குணங்களோ மிருகத்திற்கு கிடையாது.

ஆதாம் தேவனுடைய குமாரன் என்று லூக் 3:38 கூறுகிறது. அந்த அதிகாரத்தில் 77 தகப்பனையும் 77 பிள்ளைகளையும் வம்ச அட்டவனையாய் லூக்கா எழுதுகிறார். அதில் இயேசுவுக்கு தகப்பன் யோசேப்பு என்று ஆரம்பித்து, ஆதாமுக்கு தகப்பன் தேவன் என்று முடிக்கிறார். எனவே தகப்பனைப் போல பிள்ளை இருந்தான். தேவன் ஆவியாய் இருக்கிறார். தேவனுடைய மகனாகிய ஆதாமும் ஆவியாய் இருக்கிறான்.

எனவே மனிதன் ஆவியாய் இருக்கிறான்.
ஆவி மனிதன் ஆத்துமாவை உடையவனாய் இருக்கிறான்.
ஆவி மனிதன் சரீரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.
Man is Spirit
The Spirit has a Soul
He lives in a Body


**திரித்துவ மனிதனின் வரைபடம்**



சரீரம் என்பது ஆவி மனிதன் தங்கி இருக்கும் வீடாக இருக்கிறது. II கொரி 5:1ன் படி அது கூரை வீடாக இருக்கிறது. II கொரி 5:8ன் படி சரீரம் என்பது ஆவி மனிதன் தங்கி இருக்கும் வாடகை வீடு. இந்த வீடு தேவனுக்குச் சொந்தமானது. வீட்டின் எஜமான் நம்முடைய தேவன். எஜமான் வீட்டைக் காலி செய்யச் சொல்லும் போது வீட்டை விட்டு வெளியேறி ஆவி மனிதன் தேவனிடம் செல்ல வேண்டும்.

## ஆவி மனிதனின் பிரிவுகள்

மனிதனுடைய ஆவியில் மூன்று பிரிவுகள் செயலாற்றுவதை பரிசுத்த வேதாகமத்திலிருந்து நாம் அறியலாம். மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது என்று சாலமோன் ஞானி நீதிமொழிகள் 20:27ல் கூறுகிறார். The Spirit of man is the candle of the LORD. என்கிறார். மெழுகுவர்த்தியில் மூன்று பகுதி இருப்பதைப் போல் நமது ஆவியிலும் மூன்று பிரிவுகள் இருக்கிறது.




மெழுகுவர்த்தியில் மூன்று பகுதிகள் இருக்கிறது. அவை முறையே மெழுகு, நூல்திரி, அக்கினியின் வெளிச்சம் ஆகியவை உள்ளன. இதுபோலவே நமது ஆவியில் உணர்வு, ஐக்கியம், மனச்சாட்சி ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன.

## 1. ஆவியில் உணர்வு:

(Intution (or) understanding (or) Revelation)

மனுஷனில் ஒரு ஆவி உண்டு. சர்வ வல்லவரின் சுவாசமே அவனை "உணர்வுள்ளவனாக்கும்" என்று சொல்லப்பட்டுள்ளது. (யோபு 32:8) எனவே மனிதனின் ஆவியில் "உணர்வு" என்ற பகுதி இருக்கிறது. இந்த உணர்வின் மூலமே தேவன் மனிதனோடு பேசுகிறார் யோபு 32:18ல் "வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது. என் உள்ளத்தில் உள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது." என்றான் எலிகூ. எனவே ஆவியில் உள்ள உணர்வின்

மூலம் இந்த உலகத்திற்கு பேசும்படியான வார்த்தைகள், வெளிப்படுத்தலாக கிடைக்கிறது. எலிகூ என்ற வாலிபன் யோபின் நண்பர்களுடைய தவறான போக்குகளை தேவன் பட்சத்தில் இருந்து கண்டித்துப் பேச வேண்டிய வார்த்தைகள் அவனுக்கு ஆவியில் உள்ள "உணர்வின்" மூலம் கிடைக்கிறது என்கிறான்.

## (a) மோசேயின் உணர்வு:

தேவனுடைய மனிதனாகிய மோசே இஸ்ரவேல் சபைக்குள் இருந்தவன். நம்முடைய முற்பிதாக்களுக்கு கொடுக்கும்படியாக ஜீவ வாக்கியங்களைப் பெற்றவன் (அப் 7:38). மோசேயோடே ஆண்டவர் மறை பொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசினார் (எண். 12:6). எனவே தான், ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்ற ஐந்து ஆகமங்களையும் மோசே எழுதினார். மோசே மூலமாய் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தையும், கட்டளைகளையும், தழுவியே உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து நாடுகளின் சட்ட புஸ்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்விதம் சபைக்கும் குடும்பத்துக்கும், தேசத்துக்கும், அரசியலுக்கும், வேண்டிய பல ஆயிரக்கணக்கான சட்ட திட்டங்கள் மோசேக்கு எப்படி கிடைத்தது? மோசேயின் ஆவியில் உள்ள உணர்வின் மூலமே தேவன் பேசினார், போதித்தார், வெளிப்படுத்தினார். (யாத் 4:15)

**நீ ஆரோனோடு பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்.(யாத் 4:15)**

எனவே மோசேயின் உணர்வின் மூலம் தேவன் பேசின விதம் எவ்வளவு மேன்மையாயிருக்கிறது ஆச்சரியமாயிருக்கிறது!

**ஆவியின் பிரிவுகள்**



### (b) வேத புருஷர்களின் உணர்வு:

II தீமோ 3:16ல் வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமம் 40க்கும் மேற்பட்ட பரிசுத்த ஊழியக்காரர்களின் மூலம் சுமார் 1500 வருடங்களாக எழுதப்பட்டது. அத்தனை வேத வாக்கியங்களும் வேத புருஷர்களின் உணர்வின் மூலமே வெளிப்படுத்தப்பட்டது.

II கொரி 4:1ல் எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்றும் தேவ இரகசியங்களின் உக்கிராணக்காரர் என்றும் எண்ணிக் கொள்ளக்கடவன் என்கிறார். எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவில்லை. காது கேட்டகவுமில்லை. அவைகள் மனுஷருடைய இருதயத்தல் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலேயே “வெளிப்படுத்தினார்” என்கிறார். எனவே ஆவியில் உள்ள உணர்வின் மூலம் “வெளிப்படுத்தல்” பெற்று பரிசுத்த வேதம் முழுமையும் எழுதப்பட்டது. எனவே மனித ஆவியின் உணர்வு எவ்வளவு மேன்மையுள்ளது.

### (c) தீர்க்கதரிசிகளின் உணர்வு:

தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். எனவே தீர்க்கதரிசனம் அசரீரி சப்தம் மூலம் (Audio Voice) கொடுக்கப்படவில்லை. பதிலாக ஆவியின் ஏவுதலால் (inner voice) ஏவப்பட்டு, உணர்த்தப்பட்டே பேசினார்கள். எனவே ஆவியில் உள்ள உணர்வு ஒரு மனிதனுக்கு செம்மையாய் செயல்படுமானால் முக்காலங்களையும் அறிகிறவனாய் இருப்பான். அவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. கடந்த காலத்தைக் குறித்து கவலைப்பட மாட்டான். நிகழ்காலத்தைக் குறித்து திகைக்க மாட்டான். எதிர்காலத்தைக் குறித்து பயப்படமாட்டான். கிளி ஜோசியம், எலிஜோசியம், நட்டஜாதகம் பார்க்கவுமாட்டான். பொருத்தம், பெயர் ராசி இவைகள் மேல் சிந்தை வைக்க மாட்டான். அவன் பேதையாயிருந்தாலும் திசை கெட்டுப் போக மாட்டான் (ஏசா 35:8) அல்லேலுயா! ஏதாவது ஒரு பெரிய ஊழியக்காரருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு “கர்த்தர் என்ன வெளிப்படுத்துகிறார்” சொல்லுங்கள் என்று ஆவிக்குரிய ஜோசியம் பார்க்கவும் மாட்டான். ஏனெனில் அவனுக்குள் இருக்கும் உணர்வின் மூலம் அவன் தேவனிடம் நேரடியான வெளிப்படுத்தல் பெறுகிறவனாய் இருப்பான். அந்த வெளிப்படுத்தல்களை வேத வசனங்களின் படி ஒப்பிட்டு தன்னை சீரான பாதையில் நடத்திச் செல்வான்.

### (d) ஆதாமின் உணர்வு:

தேவ பிள்ளையாகிய ஆதாமின் ஆவியில் "உணர்வை" உடைய வனாய் இருந்தான். அந்த உணர்வின் மூலம் இரண்டு பிரமாணங்களை அவன் பெற்றிருந்தான்.

1. நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். (ஆதி 2:16)

2. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.(ஆதி 2:17)

## 2. ஆவியின் ஐக்கியம்:

மனித ஆவியில், ஆவியாய் இருக்கிற தேவனோடு ஐக்கியம் கொள்ளும் தன்மையிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக! (IIகொரி 13:14) என்ற வசனத்தின் கடைசியில் "ஆவியில் - ஐக்கியம்" இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்.

கர்த்தராகிய இயேசுவும் நமது ஆவியில் தான் தங்கியிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. சகோதரரே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை "உங்கள் ஆவியுடனே" கூட இருப்பதாக! ஆமென் (கலா 6:18) எனவே நமது ஆவியில் தேவனோடு தொடர்பு கொள்ளும் "ஐக்கியம்" என்ற பகுதி இருக்கிறது.

### (a) ஆதாமின் ஐக்கியம்:

தினமும் பகலில் குளிர்ச்சியான வேளையாகிய மாலை 3 மணி முதல் 4 மணி வரை தேவனை சந்தித்து, தேவ சமுகத்தை உணர்ந்து, தேவனை ஆராதித்து, தேவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு தேவனுக்கு ஆராதனை நடத்தினான் (ஆதி 3:8) தேவன் ஆவியாய் இருக்கிறார். எனவே அவரைத் தொழுது கொண்ட ஆதாம் தன் ஆவியில் உள்ள ஐக்கியத்தின் மூலமே தேவனோடு தொடர்பு கொண்டான்.

### (b) அப்போஸ்தலர்களின் ஐக்கியம்:

பின்பு இயேசு ஒரு மலையின் மேல் ஏறி (மாற்கு 3:13) தமக்குச் சித்தமானவர்களை வரவழைத்தார். அவர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அவர்கள் 70 பேர் என்று (லூக்கா 6:13) லூக்கா கூறுகிறார். பின்பு அவர் 12 பேரைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். இந்த 12 பேரைத் தெரிந்து கொண்டதின் நோக்கம் என்ன? அவர்கள் தம்மோடு கூட இருக்கும்படியாக "ஐக்கியம்" கொள்ளும் படியாகவே தெரிந்து கொண்டார் (அப் 6:2-4) சபையில் பிரச்சனைகள்

உண்டானதற்கு காரணத்தைக் கண்டுபிடித்த அப்போஸ்தலர்கள் அந்த பிரச்சனைகளில் ஜெயம் பெற அவர்கள் எடுத்த தீர்மானம் என்ன? "நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள். எனவே அப்போஸ்தலர்களை தேவன் எதற்காகத் தெரிந்து கொண்டார்? அப்போஸ்தலர்கள் ஆவியில் உள்ள ஐக்கியத்தின் மூலம் தேவனோடு ஐக்கியம் கொள்ளும்படியாகத் தானே!

### (c) நமது ஐக்கியம்:

தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (Iகொரி 1:9). எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. (யோவான். 1:3)

எனவே நமது ஆவியில் இரண்டாவதாக "ஐக்கியம்" என்ற பகுதி இருக்கிறது என்று தெளிவாக அறியலாம்..

## 3. ஆவியின் மனச்சாட்சி:

நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே கூட சாட்சியிடுகிறார் என்கிறார் பவுல். (ரோமர் 8:16) நம்முடைய ஆவியில் ஒரு சாட்சி இருக்கிறது என்கிறார். அந்த சாட்சி என்ன? அதுதான் நம்முடைய மனச்சாட்சியாகும்.

நான் சொல்கிறது பொய்யல்ல. கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்கிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனசாட்சியும் சாட்சியாய் இருக்கிறது (ரோமர் 9:12) என்கிறார். நமது ஆவியில் உள்ள சாட்சிக்குப் பெயர் "மனச்சாட்சி" என்று தெளிவாக பவுல் கூறுகிறார். எனவே நமது ஆவியின் மூன்றாவது பகுதி மனச்சாட்சி (conscience) என்பதாகும்.

1. லத்தீன் மொழியின் படி மனிதனுடைய மனதும், தேவனுடைய மனதும் இணையும் போது வரும் சாட்சிக்குப் பெயர்தான் மனச்சாட்சி (together knowledge) என்று லத்தீன் மொழி பெயர்ப்பு கூறுகிறது.

2. மனிதன் தவறு செய்யும் போது மனிதனுடைய மனதில் வேதனையும், வாதிப்பும் வருமானால் அதுவே நல் மனச்சாட்சி என்று ஒரு தேவ மனிதன் கூறுகிறார்.

3. நமது மனச்சாட்சியானது ஆவி மனிதன் மேல் தேவ பிரசன்னமாகிய ஒளியை வீசச் செய்யும் "ஜன்னலாக" இருக்கிறது என்று வாட்ச்மேன் நீ கூறுகிறார்.

4. மனச்சாட்சி என்பது ஒரு வீட்டின் முன் கட்டப்பட்டிருக்கும் "நாய்"

போன்றது. அந்நியர்களைக் காணும் போது நாய் சத்தமிடுவது போல் மனிதனுக்குள் பாவம் பிரவேசிக்கும் போது மனது படபடவென்று அடித்துக் கொள்ளுமானால் அதுவே மனச்சாட்சி.

5. மனச்சாட்சி என்பது ஒரு "நீதிபதியைப் போன்றது" நீதிபதி சட்ட நியாயங்களை சுட்டிக்காட்டிப் பேசுவது போல் நமது மனச்சாட்சியும், தேவனுடைய உயர்ந்த உன்னத நீதி எது? என்று சுட்டிக் காட்டுவது தான் மனச்சாட்சி (வாரன் வயர்ஸ்பி-டெல்லி) சொல்கிறார்.

எனவே மனித ஆவியில் உள்ள மனச்சாட்சி மூலம் தேவனுடைய உயர்ந்த, உன்னத நீதி ஆதாமின் ஆவியில் அடங்கியிருந்தது. இவ்விதமாய் ஆதாமின் ஆவியில்.

a) உணர்வு - Intution

b) ஐக்கியம் - Communion

c) மனச்சாட்சி - Conscience

ஆகிய மூன்று பிரிவுகள் இருந்தது என்று தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

இன்னும் இதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்றால் பழைய ஏற்பாட்டில் உள்ள ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி சற்று தியானித்துப் பார்க்க வேண்டும்.

## 3. ஆவியும் ஆசரிப்புக் கூடாரமும்:

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் நீங்கள் அறியீர்களா? (Iகொரி 3:16) என்று பவுல் கூறுகிறார். இந்த வசனத்தின்படி மனிதன் தேவாலயத்திற்கு மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், பிரகாரம் என்று மூன்று பிரிவுகளாக இருக்கிறது போல மனிதனும் ஆவி, ஆத்துமா சரீரம் என்று மூன்று பிரிவுகளை உடையவனாய் இருக்கிறான்.

இதிலே மகா பரிசுத்த ஸ்தலத்தில் மூன்று முக்கியமான ஆராதனைப் பொருட்கள் இருந்தது.

1. உடன்படிக்கை பெட்டி
2. கிருபாசனம்
3. கற்பலகைகள் (எபி 9:4) இருந்தது.

இது போலவே மனித ஆவியில் மூன்று பகுதிகள் இருப்பதை ஒப்பிட்டு அறியலாம்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் சித்தீம் மரத்தினால் ஒரு பெட்டியை உண்டு பண்ணக்கடவர்கள் (யாத் 25:21,22) அந்தப் பெட்டியின் மீது கிருபாசனத்தை வைத்து, சாட்சிப் பிரமாணத்தை பெட்டிக்குள்ளே வைப்பாயாக! என்றார்

தேவன்.

1. உடன்படிக்கைப் பெட்டி
2. பெட்டியின் மிது கிருபாசனத்தை வைத்து
3. சாட்சிப் பிரமாணத்தை பெட்டிக்குள்ளே வைப்பாயாக

இந்த மூன்றிலும், மூன்று செயல்பாடுகளையும் ஆண்டவர் சொன்னார்.


1. உடன்படிக்கைப் பெட்டி - கிருபாசனத்தின் மீதிலும் சாட்சிப் பெட்டியின் மேல் நிற்கும் இரண்டு கேரூபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்கு கற்பிக்கப் போகிறவைகளெல்லாம் உன்னோடே சொல்லுவேன். அதுவே நமது ஆவியில் உள்ள உணர்வு என்பதாகும்.

2. கிருபாசனம் - அங்கே உன்னை சந்திப்பேன் என்றார். இது நமது ஆவியில் உள்ள மனச்சாட்சி என்பதாகும்.

3. சாட்சிப் பிரமாணத்தை பெட்டிக்குள்ளே வைப்பாயாக. இதுவே நமது ஆவியில் உள்ள மனச்சாட்சி என்பதாகும்.

எனவே உடன்படிக்கைப் பெட்டி மனித ஆவியில் உள்ள உணர்வையும், கிருபாசனம் என்பது நமது ஆவியில் உள்ள ஐக்கியத்தையும், கற்பலகைகள் நமது ஆவியில் உள்ள மனச்சாட்சியையும் வெளிப்படுத்துகிறது.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய மகிமை தங்கியிருந்தது போல நமது ஆவியில் கர்த்தருடைய பிரசன்னமும், பரலோக மகிமையும் தங்கியிருக்கிறது. அல்லேலூயா!



## 4. ஆவியும் பிரமாணமும்:

மனித ஆவியில் உள்ள உணர்வின் மூலம் ஆதாமுக்கு தேவன் இரண்டு பிரமாணங்களைக் கொடுத்திருந்தார்.

1. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். (ஆதி 2:16)

2. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் (ஆதி 2:17) என்றார்.

மனித ஆவியில் உள்ள உணர்வில் ஆதாமுக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் இரண்டு. இதுபோலவே இன்றும் நமக்கு கொடுக்கப்பட்ட வேதம் இரண்டு பிரிவுகளை உடையது. 1. பழைய ஏற்பாடு. 2. புதிய ஏற்பாடு.

வேதாகமும் இரு புறமும் கருக்குள்ள பட்டயம் என்று பவுல் கூறுகிறார். (எபி. 4:12) 1. கிருபை 2. சத்தியம். எனவே இந்த இரண்டு பிரமாணங்களையும் மனதிலே வைத்து ஆதாம் வேத வாக்கியங்களைக் கைக் கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமானது! இந்த இரண்டு வசனத்திலும் ஆதாம் தவறினான். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிவதை விட்டு விலகி, பிசாசின் வார்த்தைகளை நம்பி பிசாசுக்கு கீழ்ப்படிந்து விலக்கப்பட்ட விருட்சத்தைப் புசித்தார்கள். அதன் மூலம் தேவ பிரமாணத்தின்படி நீ "சாகவே சாவாய்" என்று தேவன் சொன்னபடியே இரண்டு வித சாவு மரணம் ஆதாமை சந்தித்தது. ஆதாம் பாவம் செய்தபோது அவன் ஆவியில் முதலாவது மரித்தான். மனித ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அந்த தீபம் அணைந்து போனது. எனவே ஆதாமின் ஆவியில் இருள் மூடினது. ஜீவியத்திலும் இருள் வந்தது. உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோமர் 1:21) இதுவே ஆதாமின் ஆவியில் வந்த மரணம்.

இரண்டாவதாக நீ மண்ணாய் இருக்கிறாய். மண்ணுக்கு திரும்புவாய் என்றார் தேவன். ஆதி 8:19ன் படி ஆதாம் சரீரத்தில் 930 வருடத்திற்கு பின்பு சரீரத்திலும் மரித்தான் (ஆதி 5:3,4)

எனவே ஆதாமின் வீழ்ச்சியினால் அவன் தன் ஆவியில் மரித்தான். அதாவது ஆவியில் இருள் வந்தது. தீபம் அணைந்து போனது. உணர்வு, ஐக்கியம், மனச்சாட்சி மூன்றையும் இழந்து போனான். ஆவி இல்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது. (யாக் 2:25) என்ற வசனத்தின்படி பாவியாகிய மனிதன் சரீரத்தில் உயிரோடு இருந்தாலும் ஆவியில் செத்திருந்தான்.

### ஆவியின் மரணம்:

மனித ஆவியில் உணர்வு, ஐக்கியம், மனச்சாட்சி என்பவைகளைக்

கொண்டு தேவனோடு தொடர்பு கொண்டிருந்தது போலவே அவன் ஆவியில் உள்ள சுவாசம் அவனுடைய சரீரத்தோடு தொடர்பு கொண்டிருந்தது. யோபு 27:2ன் படி "என் சுவாசம் என்னிலும் தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்கு மட்டும் என் உதடுகள் தீமையைச் சொல்வதில்லை" என்கிறார் யோபு. எனவே ஆதாம் தன் ஆவியில் உள்ள உணர்வு, ஐக்கியம், மனச்சாட்சியை இழந்தான். ஆனால் அவன் ஆவியில் உள்ள சுவாசம் இருந்தது. எனவே தான் சரீரத்தில் 930 வருடம் உயிரோடு வாழ்ந்தான்.

தேவன் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாக திருப்பினாராகில் அவனுடைய ஆவியையும், சுவாசத்தையும் இழுத்துக் கொள்வார். எனவே ஆதாம் பாவம் செய்த போது ஆவியை இழந்தான். ஆனால் சுவாசத்தை இழக்கவில்லை. 930 வருடத்திற்கு பின்பு மரித்த போது அவன் சுவாசத்தை இழந்தான்.

அப் 17:25 எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிற தேவன், தமக்கு யாதொன்று தேவையானது போல மனுஷர் கைகளால் அவர் பணிவிடை கொள்கிறதுமில்லை. இந்த வசனத்தின்படி ஆதாமுக்கு 1. ஜீவன் இருந்தது. 2. சுவாசம் இருந்தது. ஆதாம் பாவம் செய்த போது ஜீவனை இழந்தான். அதாவது நித்திய ஜீவனை இழந்தான். தேவனோடு வாழும் பாக்கியத்தை இழந்தான். ஆனால் அவனுக்குள் சுவாசம் இருந்தது. எனவே தான் ஆதாமும், ஆதாமுக்குள் அனைத்து மனிதரும் தேவ ஆவியை இழந்து போனபடியால் அப்பொழுது கர்த்தர் "என் ஆவி என்றைக்கும் மனுஷரோடு போராடுவதில்லை. அவன் மாம்சம் தானே" (ஆதி 6:3) என்றார். ஏனென்றால் இப்பொழுது மனுஷன் தன் ஆவியை இழந்த மாம்ச மனுஷனாய் இருக்கிறான்.

எனவே மனிதன் சரீரத்தில் வாழ்ந்தாலும் தேவனுடைய பார்வையில் ஆவியின் படி செத்தவனே.

**அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மனிதன் மரித்திருக்கிறான். (எபே 2:1)**

**சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்.(1தீமோ 5:6)**

வெளி 3:1,2ல் சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் "நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாய் இருக்கிறாய்" என்றார் நம் ஆண்டவர். எனவே ஆவியில் மரணம் என்பது மனிதன் பாவத்துக்குள் ஜீவிப்பது தான். பாவத்திற்குள் மரித்துக் கிடக்கும் மனுக்குலத்தை உயிர்ப்பிக்கிறவர் கர்த்தராகிய இயேசு ஒருவரே. ஏனெனில் பிந்தின ஆதாமாகிய இயேசு உயிர்ப்பிக்கிற ஆவியானவர் (I கொரி 15:45)

## 5. ஆவியின் வீழ்ச்சி:

ஆதாம் பாவம் செய்த போது அவனை நியாயந்தீர்க்கும் முன்னே அவனுக்கு இரக்கம் காட்ட தேவன் அவனைத் தேடி வந்தார். நோவாவின் காலத்தில் ஜலத்தினால் உலகம் அழியும் முன்னே நோவாவை பேழைகட்டச் சொல்லியும், நீதியைப் பிரசங்கித்தும் தேவனுடைய இரக்கத்தை உலகத்துக்கு தேவன் வெளிப்படுத்தினார். அது போலவே இன்றும் தேவனுடைய நியாயத் தீர்ப்பு வரும் முன்பு தம்முடைய ஊழியர்கள் மூலமும் சபையின் மூலமும் தேவன் உலகுக்கு இரக்கம் காட்ட விரும்புகிறார். இதை வாசிக்கும் அருமையான சகோதரனே சகோதரியே தேவனுடைய இரக்கம் இன்று உன்னை சந்திக்கிறது இப்பொழுதே நீ மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று அபிஷேகம் பெற்று உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு, கர்த்தர் உன்னைத் தேடி வரப் போகிறார்.

ஆதாமை தேவன் தேடினார். நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் கேட்டார். ஆதாமின் பாவங்களை மன்னிக்க தேவன் விரும்பினார். ஏனென்றால் தேவன் ஆதாமிடம் வந்ததும் அவனுக்கு நியாயத்தீர்ப்பைச் சொல்லவில்லை. நியாயந்தீர்க்கும் முன்னே தேவன் அவனோடே பேசினார். எதற்காக? மன்னிப்புக் கொடுக்கும்படியாக! கிருபை கொடுக்கும்படியாக! இப்போதும் இந்த புத்தகத்தின் மூலமும் தேவன் பேசவிரும்புகிறார். அருமை நண்பா! நீ இன்றே உன் பாவங்களை உணர்ந்து அறிக்கை செய்து விட்டு விடு. இரக்கம் பெறுவாய்.

பாவங்களை மன்னிக்கிறதில் தயை பெருத்தவர் அவனை மன்னிக்கும்படி விரும்பினார். ஆதாம் தன் பிழைகளை உணர்வானா? என்று தேவன் பொறுமையோடு பேசினார். அவனோ தன் பாவங்களை, பிழைகளை உணரவில்லை. தன் பிழைகளை உணர்கிறவன் யார்? (சங் 19:12) புசிக்க வேண்டாம் என்று நான் விலக்கின விருட்சத்தின் கனியை நீ புசித்தாயோ? என்று குறிப்பாய் ஆதாமை உணர்த்தினார். ஆதாம் தன் பிழைகளை உணர்ந்து, பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டிருக்கலாம். அவனோ தன் பிழைகளை உணரவும் இல்லை. மன்னிப்புக்காகக் கெஞ்சவும் இல்லை. பதிலாக தேவனையே குற்றம் சாட்டினான்.

என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் கனியை எனக்குத் தந்தாள். நான் புசித்தேன் என்று தன் வீழ்ச்சிக்குக் காரணம் ஸ்திரீயைப் படைத்த தேவனே! என்று உணர்வில்லாமல் பேசினான். உணர்வுள்ளவன் பாவத்தை அறிக்கை செய்து விட்டு விடுவான். உணர்வில்லாதவன் எதிர்த்துப் பேசுவான்.

கர்த்தர் ஸ்திரீயை நோக்கி...நீ ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்க அவளும் தன் பிழைகளைக் குறித்து சற்றும் உணர்வில்லாமல், "சர்ப்பம்

என்னை வஞ்சித்தது" என்று தேவனுடைய சிருஷ்டியைக் குறைகூறி அதைப் படைத்த தேவனையே குற்றம் சாட்டுவது போல் பேசினாள். இவ்விதமாக வீழ்ச்சியடைந்த மனித ஆவியில் உணர்வு இல்லை. உணர்வில்லாத அவனுடைய இருதயம் இருளடைந்தது.

ஏசாவின் வாழ்க்கை பாழானது ஏன்? ஏசா, மனம் மாறுதலைக் காணாமற் போனதற்கு காரணம் என்ன? ஏசா தேவனின் ஆசீர்வாதத்திலிருந்து முற்றிலும் தள்ளப்பட்டதற்கு காரணம் என்ன? தீர்க்கதரிசி பதில் சொல்கிறார். ஏசாவிற்கு உணர்வேயில்லை (ஒபதியா 1:7)

இஸ்ரவேல் ஜனங்களுடைய சவங்கள் வனாந்திரத்தில் ஏன் விழுந்து போயிற்று? அவர்கள் ஏன் கானான் தேசத்தை சுதந்தரிக்க முடியவில்லை. தேவன் அவர்களை ஏன் அரோசித்தார். மோசே பதில் சொல்கிறார். (உபா. 32:28) இஸ்ரவேலர் யோசனை கெட்ட ஜாதி. அவர்களுக்கு உணர்வே இல்லை.

நோவா காலத்தில் சுமார் 400 கோடி ஜனங்கள் ஜலப்பிரளயத்தில் அழிந்தார்கள் என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய அழிவுக்கு காரணம் என்ன? பரிசுத்த இயேசுவானவர் பதில் சொல்கிறார். (மத் 24:37) "ஜலப்பிரளயத்திற்கு முன்னான காலத்தில் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும் பெண் கொண்டம், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து வாரிக் கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள். ஆ! இந்த உணர்வு எவ்வளவு முக்கியமானது. உணர்வில்லாத 400 கோடி ஜனங்கள் அழிந்து போனார்களே!

இன்றைக்கும் சுமார் 500 கோடி ஜனங்கள் உலகில் இருக்கிறார்கள். அதில் 90 கோடிப் பேர் நமது இந்திய தேசத்தில் இருக்கிறார்கள். இவர்களின் முடிவு என்ன? இயேசு கிறிஸ்து தீர்க்க்தரிசனம் சொல்லியிருக்கிறார். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும் (மத் 24:37) என்றார். எனவே இதை வாசிக்கும் அருமையான சிநேகிதரே நீங்கள் உணர்வுடையவர்களாய் இருந்தால் மன்னிப்புக் கிடைக்கும். உணர்வில்லாத உலக மக்களுக்கு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. இந்திய தேச மக்களுக்கு தேவனே உணர்வைத் தாரும் ஆமென்!

**"உணர்வுள்ளவனுக்கு மன்னிப்பு**
**உணர்வற்றவனுக்கு நியாயத்தீர்ப்பு"**

என்று கர்த்தர் சொல்கிறார்.

இரண்டாவதாக ஆதாம் தன் ஆவியில் உள்ள ஐக்கியத்தையும் இழந்திருந்தான். தினமும் குளிர்ச்சியான வேளையில் பகலில் 3 மணி முதல்

4மணி வரைக்கும் தேவ சமூகத்தில் தேவனைப் பாடி, ஆராதித்து, தேவ சத்தம் கேட்டு, தேவனோடு ஐக்கியம் கொண்டவன். இன்று பாவம் தன் ஜீவியத்தில் வந்ததால் தேவ சந்நிதியை விட்டு விலகி (ஆதி 3:8) தோட்டத்தின் விருட்சங்களுக்குள் போய் ஒளிந்து கொண்டான். ஏனெனில் அவன் ஆவியில் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை இழந்திருந்தான். பின்பு தேவன் மனுஷனைத் துரத்திவிட்டார். (ஆதி 3:24). ஏதேன் என்ற தேவனுடைய தோட்டத்தை விட்டு தேவ சமூகத்தை விட்டு ஆதாம் துரத்தப்பட்டான். இன்றைக்கும் பாவிகளின் நிலைமை அதுதான். பாவிகள் நீதிமான்களின் சபையிலே நிலைநிற்பதில்லை. (சங் 1:5) பாவத்திற்கு இடங்கொடுத்தவர்கள் கர்த்தருடைய சபை கூடிவருதலை முதலாவது இழப்பார்கள் (எபி 10:25). பின்பு ஊழியக்காரர்களை கண்டால் ஓடி ஒளிவார்கள். தேவனுடைய பிள்ளைகளைக் கண்டால் பக்கத்து தெருவிலே போய் பதுங்குவார்கள். மேலும் தேடிக் கண்டுபிடித்து ஆராதனைக்கும், சபைக்கும், ஜெபக் கூட்டத்திற்கும் அழைத்தால், ஆதாமைப் போல் குற்றம் சாட்டி, குறை பேசும் ஆவிகளை உடையவர்களாய் இருப்பார்கள். எந்த சபையும் சரியில்லை. ஊழியர்கள் எல்லாம் மோசம் என்பார்கள். இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய ஜனங்களே உங்களுக்கு தேவனோடும், தேவனுடைய சபையோடும், தேவ பிள்ளைகளோடும் நல்ல ஐக்கியம் உண்டா? (I கொரி9:1; I யோவான் 1:3, அப் 2:42)

மூன்றாவதாக, ஆதாம் பாவம் செய்த போது மனச்சாட்சியை இழந்தான். ஏவாள் விலக்கப்பட்ட விருட்சத்தைக் கொடுத்தபோது அவன் மனச்சாட்சி அவனோடு பேசியிருக்கும். இப்படிச் செய்யாதே! என்று அவனைத் தடுத்து நிறுத்தியிருக்கும். இது தவறு என்று அவனோடு போராடியிருக்கும் அவனோ மனச்சாட்சியின் கடிந்து கொள்ளுதலுக்கு இடங்கொடாமல், மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்து வேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தான் (ஆதி 3:17)

இன்றைக்கும் சபையின் நிலைமை என்ன? இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளையே! உங்கள் மனச்சாட்சி சுத்தமாய் இருக்கிறதா? கூர்மையானதாய் இருக்கிறதா? சிலர் இந்த நல் மனச்சாட்சியைத் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள். (I தீமோ 1:19) நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

இவ்விதமாக ஆதாம் தன் ஆவியில் உள்ள உணர்வு ஐக்கியம், மனச்சாட்சி இம்மூன்றையும் இழந்தான். எனவே தான்.

**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். (லூக் 19:10)**

என்று நம் ஆண்டவர் இயேசு சொன்னார்.

## 6. ஆவியின் மறுபிறப்பு:

ஆதாமும், ஆதாமுக்குள் சகல மனுஷரும் ஆவியில் மரித்திருக்கிறார்கள் என்பதை தெளிவாய் அறிந்தோம். எனவேதான் இயேசு,

**ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்றார். (யோவா 3:3-5)**

நிக்கதோமு இதைக் கேட்ட போது அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நிக்கதோமு ஒருமுறை தாயின் வயிற்றில் தோன்றி, பிறந்து வளர்ந்து முதுமையடைந்து விட்டான். இனி திரும்ப ஒருமுறை தாயின் வயிற்றில் பிரவேசித்து பிறப்பது எப்படி? என்று கேட்டான்.

### ஆவியில் பிறப்பது எப்படி:

இயேசு இதற்கு தெளிவாய் பதில் சொன்னார். மாம்சத்தின்படி பிறப்பது மாம்சமாய் இருக்கும். ஆவியின்படி பிறப்பது ஆவியாய் இருக்கும் என்றார். அதாவது நிக்கதோமு ஒருமுறை பிறந்தது மாம்சத்தின்படியான பிறப்பு, அது தாய், தகப்பன் மூலம் பிறந்தான். இனி பிறக்க வேண்டியது மறுபிறப்பு. அது ஆவியில் பிறக்க வேண்டியது. ஏனென்றால் நிக்கதோமுவின் ஆவியில் ஜீவனில்லை. சுவாசம் மட்டும் இருக்கிறது. ஆனால் தேவனுடைய ஆவி அங்கே இல்லை. தேவனுடைய ஜீவன் அங்கே இல்லை. எனவே, தேவனுடைய ஆவி நிக்கதோமுவின் மரித்திருக்கிற ஆவியை உயிர்ப்பிக்க வேண்டும். அதுவே மறுபிறப்பு.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? குமாரனை உடையவன் ஜீவனை உடையவன் (I யோ 5:18) தேவனுடைய குமாரன் (இயேசு) இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். எனவே நிக்கதோமு தன் இருதயமாகிய ஆவியில் இயேசு வந்து தங்க இடமளித்தால், இயேசு வரும்போது பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானவர் (I கொரி 15:45) என்ற வசனத்தின்படி நிக்கதோமுவின் ஆவியை உயிர்ப்பிப்பார்.

காற்றானது இன்ன இடத்திலிருந்து புறப்பட்டு இன்ன இடத்தை நோக்கி வீசுகிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால் மரம் செடி, கொடிகள் ஆடுவதால் காற்று அடிக்கிறது என்று நாம் அறிகிறோம். அப்படியே ஆவியினால் பிறக்கிறவனும் இருக்கிறான். தேவ ஆவியானவர் அசைவாடும் இடத்தில் மனிதன் வந்து முழங்கால் படியிட்டு தேவ வார்த்தை மனிதன் காது வழியாக இருதயத்தில் தங்க அவன் இடங்கொடுக்கும் போது அவன் மறுபிறப்படைந்து விடுகிறான்.

ஆவியே உயிர்ப்பிக்கிறது. நான் உங்களுக்கு (யோவான் 6:63) சொல்லும் வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. தேவ வார்த்தையானது

உயிர்ப்பிக்கிற வார்த்தையாக இருக்கிறது. தேவ வார்த்தையை ஒரு மனிதன் கேட்டு, அதற்கு இடங்கொடுக்கும் போது அக்கிரமத்திலும், பாவத்திலும் மரித்துக் கிடக்கிற மனுஷ ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது. ஏனென்றால் தேவனுடைய வார்த்தையானது ஜீவனைப் பிறப்பிக்கும் வார்த்தையாயிருக்கிறது. இவ்விதமாக

**1. உயிர்ப்பிக்கிற தேவ வார்த்தையும் (யோவான் 6:63)**
**2. உயிர்ப்பிக்கிற இயேசு கிறிஸ்துவும் (I கொரி 15:45)**

மனுஷ ஆவியில் மறு பிறப்பு அடையச் செய்கிறார்கள். இதை மறுபிறப்பு என்றும், மறு ஜென்மம் என்றும், இரட்சிப்பு என்றும் புது சிருஷ்டி என்றும் வேதம் பல்வேறு வார்த்தைகளால் வருணிக்கிறது.

எனவே நீங்கள் மறுபிறப்பு அடைந்திருக்கிறீர்களா? ஆவியின்படி பிறந்திருக்கிறீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## ஆவியின் உயிர் மீட்சி:

ஆவியில் மனிதன் மறுபிறப்படையும் போது ஆதாம் இழந்து போன உணர்வு, ஐக்கியம், மனச்சாட்சி இவைகளைத் திரும்பவும் பெறுகிறான்.

1. ஒருவன் மறுபிறப்பு அடையும் போது முதலாவது அவனுக்கு உணர்வு வருகிறது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும் உணர்கிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருகிறான். எனவே வசனத்தைக் கேட்டவன் உணர்வடையும் போது,

**1. தான் ஒரு பாவி என்று உணர்வான் (சங் 19:12)**
**2. தனக்கு ஒரு இரட்சகர் தேவை என்று உணர்வான்.**

3. பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:8).

இவ்விதம் பலத்த உணர்வுடன் மனந்திரும்புதல் உண்டாகும்.

2. இரண்டாவதாக, ஆதாம் இழந்து போன ஐக்கியத்தை திரும்ப பெற்றுக் கொள்வான். எப்படி என்றால் இதோ வாசற்படியில் நின்று கதவைத் தட்டுகிறேன் (வெளி 3:20) ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு அவன் இருதயக் கதவைத் திறந்தால் நான் அவனுக்குள் பிரவேசித்து அவனோடே தங்கி அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் என்றார் இயேசு. எனவே இருதயத்தை திறந்து இயேசுவுக்கு இடங் கொடுக்கும் போது இயேசுவுக்கும் மறுபடியும் பிறக்கும் மனிதனுக்கும் நெருங்கின சிநேகிதமும், ஐக்கியம் உண்டாகிறது.

நாம் யாரோடு உட்கார்ந்து போஜனம் செய்வோம்? நெருங்கிப் பழகும் நண்பர்களோடுதானே! அவ்விதம் இயேசுவின் சிநேகம் அதிகமாக

மறுபடியும் பிறந்தவனுக்கு கிடைக்கிறது. அவன் ஆவியில் உள்ள "ஐக்கியம்" புதுப்பிக்கப்படுகிறது.

3. மூன்றாவதாக மறுபடியும் பிறந்த மனுஷனுக்கு அவன் "மனச்சாட்சியும்" உயிர்ப்பிக்கப்படுகிறது. தான் பாவி என்ற உணர்வடைந்தவன், தேவனுடைய பிரசன்னத்தில் ஐக்கியமாயிருப்பான். அவன் மனச்சாட்சி உயிர்ப்பிக்கப்பட்டு தன் பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கை செய்து மன்னிப்புக் கேட்க ஜெபத்தில் தூண்டப்படுகிறான். அப்பொழுது "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" என்ற வசனத்தின்படி (எபி 9:14) மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சி உயிர்ப்பிக்கப்படுகிறது.

இவ்விதமாக ஆவியில் உள்ள உணர்வும், ஐக்கியமும் மனச்சாட்சியும் திரும்பக் கிடைக்கிற இந்த அநுபவத்தை உடையவர்கள்தான். மனந்திரும்பினவர்கள். மறுபிறப்படைந்தவர்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் அல்லேலூயா!

## 7. ஆவியின் வளர்ச்சி:

மறுபிறப்படைந்த மனிதன், ஆவியில் பூரணமாய் பிறந்திருக்கிறான். என்றாலும் அந்த ஆவி வளர்ச்சியடைய வேண்டியதிருக்கிறது. உதாரணமாக புதிதாய் பிறந்த குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் போது பூரணமாய்த்தான் பிறக்கிறது. ஆனால் அது வாலிபத்தையோ கன்னிப் பருவத்தையோ அடைய வளர வேண்டியதிருக்கிறது; அது போலவே, மறுபடியும் அடைய வளர வேண்டியதிருக்கிறது; அது போலவே, மறுபடியும் பிறந்த ஆவி மனிதன் வளர வேண்டும்.

The Spirit life is perfect

But it can be wait upon matured என்று வாட்ச்மேன் நீ கூறுகிறார். எனவே ஆவியில் வளருவது எப்படி என்று காண்போம்.

ஆவியில் வளருவது என்றால் ஆவியில் உள்ள உணர்விலும், ஐக்கியத்திலும், மனச்சாட்சியிலும் வளர்ந்து பூரணப்பட வேண்டும்.

### உணர்வில் பூரணப்படுவது எப்படி?

**a. வசனம்:** மத்.13:23ல் இயேசு கிறிஸ்து தன் செய்தியில் பேசும் போது வசனத்தைக் கேட்கிறவன் உணர்வடைகிறான். பலன் கொடுக்கிறான் என்று சொல்லியிருக்கிறபடியால், "உணர்வில்" வளருவதற்கு ஆவியினால் நிறைந்த தேவ மனிதர்களின் செய்தியைக் கேட்க வேண்டும். ஆவியினால் நிறைந்த தேவ மனிதர்களின் செயி நமக்கு உணர்வைத் தந்து உணர்வில் வளர்ச்சியைத் தருகிறது.

**b. பரிசுத்த ஆவியின் அபிஷேகம்:** ஏசா 11:2ல் இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார் என்றும் அந்த ஆவியானவர் உணர்வைத் தரும் ஆவியானவராக இருந்தார் என்றும் காண்கிறோம். எனவே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று ஆவியில் நிறைந்து உணர்வில் வளர்வோமாக!

**c. ஸ்தோத்திரம், துதி:** (ரோமர் 1:20) தேவனுடைய மகிமையையும், வல்லமையையும், மகத்துவத்தையும் அறிந்தும் தேவனை மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருள் அடைந்தது. எனவே தேவனை ஸ்தோத்தரிப்பதனாலும், துதிப்பதினாலும் இருதயம் உணர்வடைகிறது. எல்லாவற்றிலும் தேவனை ஸ்தோத்தரிப்போமாக. அப்பொழுது நமது ஆவி உணர்வடைந்து, உணர்வில் வளருவோமாக!

**d. ஜெபம்:** (I இராஜா3 : 10,11,12) சாலொமோன் ராஜா தன் ராஜ்யத்தை ஆளுகை செய்வதற்காக ஞானம் வேண்டும் என்று ஜெபித்தார். தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டு ஞானத்தையும் தந்தார். உணர்வையும் தந்தார். எனவே ஜெபிக்கிற மனிதன், ஜெப ஜீவியம் உள்ளவர்கள் தங்கள் ஆவியில் உணர்வை அடைந்து அந்த உணர்வில் வளருவார்கள்.

எனவே நாம் ஆவியில் நிறைந்த செய்தியைக் கேட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, எக்காலத்திலும் எல்லாவற்றிலும் தேவனை ஸ்தோத்தரித்து அனுதினமும் ஜெபத்தில் தரித்திருந்து ஆவியில் உள்ள உணர்வில் வளருவோமாக! பூரண புருஷராக வளருவோமாக!

## ஐக்கியத்தில் பூரணமடைவது எப்படி?

மனித ஆவியில் உள்ள ஐக்கியத்தில் ஒரு மனிதன் மறு பிறப்படைவதின் மூலமாய் முதலாவது தேவனோடு ஐக்கியம் கொள்ளும் சிலாக்கியம் கிடைக்கிறது. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினாலே மனதிலே சத்துருக்களாயும் இருந்த நம்மை...... அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே தேவனோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:21) முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (எபே 2:13) எனவே மனந்திரும்பி, கிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவப்பட்டு தேவனோடு ஐக்கியப்பட்டு தொடர்ந்து வளருவோமாக! ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ள இரண்டு காரியங்களை தேவன் நமக்கு வைத்திருக்கிறார்.

**a. ஜெபம்:** ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் (மத் 18:20) என்றார் இயேசு. எனவே தேவ பிள்ளைகள் ஜெபத்தின் மூலம் தேவனோடு அதிகம், அதிகமாய் ஐக்கியப்பட முடியும்.

தனியாய் ஜெபித்து, கூட்டமாய் ஜெபித்து அந்தரங்கத்தில் தொடர்ந்து அழுது ஜெபித்து, இடைவிடாமல் ஜெபித்து எல்லா மனுஷருக்காவும் ஜெபித்து, இரவு முழுவதும் ஜெபித்து உபவாசித்து ஜெபித்து, உறுதியாய்த் தரித்திருந்து ஜெபித்து அதிக ஊக்கமாய் ஜெபித்து, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் கர்த்தராகிய இயேசுவைப் போல் ஜெபித்து சோர்ந்து போகாமல் ஜெபித்து, தாழ்மையாய் ஜெபித்து பொருந்தனைகளோடு ஜெபித்து, விசுவாசத்தோடு ஜெபித்து பூரணப்படுவோமாக!

"If a believer fails to pray he fails everything"

என்று வாட்மேன் நீ கூறுகிறார். ஒரு விசுவாசி ஜெபிக்கத் தவறுவாரானால் அவர் எல்லாவற்றிலும் தவறுகிறவராய் தோல்வியடைகிறவராய் இருப்பார் என்கிறார். எனவே தேவஜனமே! ஜெபிப்போம். ஜெயம் பெறுவோம். பூரணமடைவோம்.

**b. ஆராதனை:** நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ள தேவன் நமக்கு ஆராதனையைத் தந்திருக்கிறார். நான் அவர்கள் நடுவே வாசம் பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவாயாக (யாத் 25:8) என்று மோசேயோடு தேவன் சொன்னார். எனவே தேவனை ஆராதிக்கும்படியாக ஆராதனையின் ஆலயத்திற்குள் சென்று தேவன் விரும்புகிறபடியாக கர்த்தரை ஆராதிக்க வேண்டும். பகலின் குளிர்ச்சியான வேளையில் ஏதேன் தோட்டத்தில் உலாவினவர் (ஆதி 3:8) நம்முடைய ஆராதனையில் நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டியிருக்கிற பிரதான ஆசாரியராய் குத்துவிளக்குகளாகிய சபைகளின் நடுவே வந்து உலாவுவார் (வெளி 1:13) தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் (யோவான் 4:24) தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாக இருக்கும்படி தேவன் விரும்புகிறார். தேவனுடைய பிள்ளையே, உங்கள் ஆராதனை ஆவியினால் நிரம்பினதாய், ஆவியானவரால் நடத்தப்படுகிற ஆராதனையாக இருக்கிறதா? சடங்காச் சாரங்களும், பாரம் பிரியங்களும் உங்கள் ஆராதனையை ஆளுகை செய்கிறதா? ஆவியானவர் சபைகளுக்குச் சொல்கிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்ற (வெளி 3:6) திட்டவட்டமான செய்தி பரலோகத்திலிருந்து உங்களுக்கு வருகிறதா?

மாயக்காரர்களின் ஆராதனையை தேவன் வெறுக்கிறார். கடிந்து கொள்கிறார். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது. மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று (மத் 17:7-9) இயேசு கடிந்து கொண்டார்.

உங்களுடைய ஆராதனை எப்படிப்பட்டது? பாரம்பரியமானது தானா? ஆவியினால் நிறைந்ததா? பாவத்திலிருந்து நாம் இரட்சிக்கப்படுவது போல பாரம்பரியங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும்.

நம்முடைய ஆராதனை பரலோகத்திற்கு நிழலாட்டமானது (எபி 8:5) எனவே ஜெப நேரத்தில் பரலோகப் பிரசன்னம் நிரம்பட்டும். பாடல்களின் ஆர்ப்பரிப்புச் சந்தோஷமும் இருக்கட்டும். யாழோடும், தீங்குழலோடும் தேவனைத் துதிக்கட்டும். ஓசையுள்ள கைத்தாளத்தோடும், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் தேவனைப் போற்றட்டும். பெருமழையின் இரைச்சலாக பரிசுத்த ஆவியான பிதாவோடு பேசட்டும். வரங்களும், கனிகளும் வந்திறங்கட்டும். வல்லமை பெற்று சபை செழித்தோங்கட்டும் எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற இயேசு வந்திறங்கி எல்லா விசுவாசிகளையும் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் ஆசீர்வதிக்கட்டும். இவ்விதமாய் ஆராதனையில் தேவனோடு ஐக்கியப்பட்டு பூரணப்படுவோமாக!

**c. மனச்சாட்சியில் பூரணப்படுவது எப்படி?:** இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கும் போது மனச்சாட்சி பரவசமடைகிறது. ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை இவர் (எபி 10:14) ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். எனவே, இயேசுவாகிய பலியின் மூலம் பூரணப் பரிசுத்தமும், பூரணமான சுத்த மனச்சாட்சியும் நமக்கு கிடைக்கிறது.

மனச்சாட்சியில் சுத்தம் உள்ளவர்களுக்கு சிறு அணு அளவு பாவம் வந்தாலும் மனது அடித்தக் கொள்ளும். சமாதானத்தை இழந்து போவார்கள். எனவே பாவத்திற்கு பயப்படுவார்கள். தங்களைக் காத்துக் கொள்வார்கள்.

தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டது. சிறு தவறு செய்கிறார் தாவீது. சவுலின் சால்வையை அறுத்தது சிறிய தவறுதான். அதற்கே தாவீதின் மனது அடித்துக் கொண்டது. இதுவே சுத்த மனச்சாட்சி.

தேவபிள்ளையே, உங்கள் மனச்சாட்சி சுத்தமானதுதானா? மனச்சாட்சி பூரணமானதுதானா?

# 2 ஆத்துமா
# SOUL

## ஆத்துமா என்றால் என்ன?

மனிதன் ஆவியாயிருக்கிறான். அவன் ஆத்துமாவை உடையவனாய் இருக்கிறான். அவன் சரீரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று அறிந்தோம்.

ஆதி 2:7ன் படி தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினால் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். மண்ணான சரீரத்தில் தேவ ஆவி பிரவேசித்த போது இன்னொன்று தோன்றியிருக்கிறது. அதுவே ஆத்துமா. ஆத்துமா மனிதனின் மத்திய பகுதி. இந்த ஆத்துமா நமது ஆவியோடு சேர்ந்து தேவனோடு தொடர்பு கொள்ளும் தன்மையுடையது. அதே சமயம் ஆத்துமா தன் சரீரத்தோடு சேர்ந்து உலகத்தோடு தொடர்பு கொள்வும் முடியும். எனவே ஆத்துமாவில் தெய்வீகத் தன்மையும் காணமுடியும். ஆத்துமாவில் உலகின் தன்மையையும் காண முடியும். எனவே ஆத்துமாவின் பரிசுத்தமாக்குதலை கருத்தோடு கவனிப்போம்.

நாம் மறுபிறப்படையும் போது ஆவியில் மறுபிறப்படைகிறோம். இதன் மூலம் நமது ஆவி பரிசுத்தமடைகிறது. ஆனால் ஆத்துமாவும், சரீரமும் பாவத்திற்குள்ளும் பாவத்தின் தன்மைக்குள்ளும் இருக்கிறது. எனவே ஆவியில் மறுபிறப்பு அடைந்தவர்களுக்குள் ஆத்துமாவிலும், சரீரத்திலும் பாவம் இருக்கிறது. ஆத்துமாவும் சரீரமும் பரிசுத்தமடைவது எப்படி என்று காண்போம்.

## ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை:

மனிதன் மூன்று பிரிவுகளாய் உள்ளான் என்று தெளிவாய் அறிந்தோம். அதில் ஆவியின் இரட்சிப்பைக் குறித்து தெளிவாய் அறிந்து ஆவியில் இரட்சிப்பையும், பூரணத்தையும் பெற்றுக் கொண்டோம். ஆனால் ஆத்துமாவிலும் சரீரத்திலும் இரட்சிப்பு இன்னும் பெறவில்லை.

ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமை உள்ளதாயும் இருக்கிற வசனத்தை சாந்தமாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று யாக்கோபு எழுதுகிறார். (யாக். 1 :21). இவ்வசனத்தின் படி ஆத்துமா இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்று அறிகிறோம்.


யாக்கோபின் நிரூபம் சபைக்கு எழுதப்பட்ட நிரூபம் யாக். 5:14ல் உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக என்கிறார். சிதறியிருக்கிற கோத்திரங்களுக்கும் இதை எழுதுகிறேன். (யாக் 1:1) என்கிறார். ஒவ்வொரு அதிகாரத்திலும் "என் சகோதரரே" என்ற குறிப்பிடுகிறார். (யாக் 1 : 1, 2 : 1, 3 : 1, 4 : 11, 5 : 7) எனவே ஆண்டவருடைய பிள்ளைகள் ஆவியில் மறுபிறப்படைந்து மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் தான் (யாக். 1 : 18) ஆனாலும் இன்னும் ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை. எனவே தான் கொடிய அழுக்கு இருக்கிறது. அதிகமாகப் பேசுகிறார்கள். கோபம் வருகிறது. ஏன்? இன்னும் ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை.

நம்முடைய மறுபிறப்பில் ஆவியில் மறுபிறப்படைகிறோம். அபிஷேகம் பெறும்போது நமது ஆவியில் பெறுகிறோம். வரங்கள், வல்லமைகள் நமது ஆவியில் வந்து தங்கியிருக்கிறது. ஆனால் ஆத்துமா வெறுமையாய் இருக்கிறது. ஆத்துமா இன்னும் இரட்சிக்கப்படவில்லை. எனவே ஆத்துமாவின் இரட்சிப்பையும் கருத்தாய் கவனித்து பூரணபரிசுத்தம் அடைவோமாக!

## ஆத்துமாவின் பிரிவுகள் :

நமது ஆத்துமாவில் 4 பிரிவுகள் உண்டென்று வேதவசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**ஆத்துமாவின் 4 பிரிவுகள்**



## 1. மனம்:

நமது ஆத்துமாவில் முதலாவது மனம் இருக்கிறது. யோபு 10:1ல் யோபு சொல்கிறார். என் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது. நான் என் துயரத்துக்கு இடங்கொடுத்து என் மனச்சஞ்சலத்திலே பேசுவேன் என்றார். யோபு 10:1 இந்த வசனத்தின் மூலம் யோபின் ஆத்துமாவிலே **"மனது" (mind)** இருக்கிறது என்று அறிகிறோம்.

மனிதனுடைய மனம்தான் அவன் சிந்தையின் பிறப்பிடம்.

மனிதனுடைய மனம் மனித வாழ்வின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

மனிதனுடைய மனம் ஒரு வாட்ச்மேனைப் போன்றது. வெளி உலகில் என்னென்ன நடக்கிறது என்று கவனமாய்க் கவனித்துக் கொண்டிருக்கிறது.

மனிதனுடைய மனதில் அவனுடைய ஆளத்துவம் இருக்கிறது.

## 2. அறிவு:

மனித ஆத்துமாவின் இரண்டாம் பகுதி அறிவு (Intellect) (நீதி 19:2) என்பதாகும். ஆத்துமா அறிவில்லாதிருப்பது நல்லதல்ல என்கிறார். சாலோமோன். எனவே ஆத்துமாவின் இரண்டாம் பகுதி அறிவு.

## 3. உணர்ச்சி:

மனித ஆத்துமாவின் மூன்றாம் பகுதி உணர்ச்சி (Emotion) மத். 26:28ல் இயேசு சொன்னார் என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது என்றார். எனவே துக்கம் என்பது ஒருவித உணர்ச்சி. எதிர்மறையான உணர்ச்சி. சங். 35:9ல் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்திருக்கிறது. அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும் என்று தன் ஆத்துமாவைக் குறித்துக் கூறுகிறார். களிகூறுதலும் மகிழ்ச்சியும் நமக்குள் இருக்கும் நல்ல உணர்ச்சி. எனவே மனித ஆத்துமாவின் மூன்றாவது பகுதி உணர்ச்சி என்பதாகும்.

## 4. சித்தம்:

மேலும் மனிதனுடைய ஆத்துமாவில் நான்காம் பகுதியாக "சித்தம்" (Will) இருக்கிறது என்று படிக்கலாம். தேவனோவென்றால் ஒரே மனமாய் இருக்கிறார். அவரைத் திருப்பத்தக்கவன் யார்? அவருடைய "சித்தத்தின்" படியெல்லாம் அவர் செய்வார். இந்த வசனத்தின் ஆங்கில வேதாகமத்தில் Soul ஆத்துமா என்ற வார்த்தை வருகிறது. எனவே ஆத்துமாவின் இரண்டாவது பகுதி "சித்தம்" (Will) இருக்கிறது. "He is in one mind. And who can turn him. And what his "Soul" desireth even that he doeth. எனவே ஆத்துமாவில் நான்காவது சித்தம் இருக்கிறது.

ஆத்துமாவில் மனம், அறிவு, உணர்ச்சி, சித்தம் ஆகிய நான்கு பிரிவுகள் உண்டு. இந்த நான்கு பகுதிகளிலும் நமக்கு இரட்சிப்பு தேவை.

## நித்தியத்தில் ஆத்துமா :

மனிதனுக்கு மொத்தம் மூன்று உலக வாழ்வு உண்டு.

1. தாயின் வயிற்றில் - 10 மாதம் கருவாகி, உருவாகி வளர்ச்சியடைந்து பூலோக வாழ்வுக்காய் ஆயத்தப்படும் வாழ்வு. இதன் காலம் 10 மாதங்கள், இது தாயின் வயிற்றில் வாழும் காலம்.

2. பின்பு குழந்தை இம்மண்ணில் பிறந்து வளர்ந்து ஆறு வயதிலோ, நூறு வயதிலோ, ஐந்து வயதிலோ, ஐம்பது வயதிலோ மனிதன் மரிக்கிறான். இந்த வாழ்வு பூலோக வாழ்வு. இதன் காலம் உறுதியாய்ச் சொல்ல முடியாது. பூலோக வாழ்வு எவ்வளவு சீக்கிரத்தில் முடிவு பெறும் என்று சொல்ல முடியாத உறுதியில்லாத வாழ்வு.

3. பின்பு மனிதனுக்கு கொடுக்கப்படும் வாழ்வு நித்ய வாழ்வு. அது ஒன்றில் மோட்சமாயிருக்க வேண்டும் அல்லது நரகமாய் இருக்க வேண்டும். மோட்சம் நரகம் இரண்டுமே நித்தியமானது. முடிவில்லாதது.

பூலோக வாழ்வு சிறப்படைவதற்கு இந்த ஆத்துமாவே காரணம், நரகம் கொடியதாய் இருப்பதற்கு காரணம் இந்த ஆத்துமாவே, மோட்சம் ஆனந்தமாய் இருப்பதற்கு காரணம் இந்த ஆத்துமாவே.

ஏனென்றால் இவ்வுலகில் ஆத்துமா வாழ்ந்தால் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருப்பாய் என்று (III யோவான் 1:2) சொல்கிறது.

மேலும் நித்தியமாகிய மோட்சத்திற்கோ, அல்லது நரகத்திற்கோ மனிதன் செல்லும்போது நமது உள்ளான மனிதனாகிய ஆவியும், ஆத்துமாவும் சேர்ந்தே செல்கிறது என்று வேதம் தெளிவாய்ச் சொல்கிறது. மனிதனின் மரணத்தோடு அவன் வாழ்வு முடிவதில்லை. கல்லரையோடு மனித வாழ்வு முற்றுப் பெறுவதில்லை.

மரணத்திற்குப் பின்பு மனிதன் நித்தியத்திற்குள் பிரவேசிக்கிறான். ஆவிக்குரிய சரீரத்தோடும், ஆத்துமாவோடும் ஆவியோடும் மனிதன் நித்தியத்தில் பிரவேசிக்கிறான்.

உதாரணமாக இயேசுவின் மரணத்தில் ஏசா 58:12-ல் சொல்லப்பட்டபடி அவர் தமது "ஆத்துமாவை" மரணத்திலூற்றினார் என்று ஏசாயா சொல்கிறார். லூக் 23:46ன் படி இயேசு "பிதாவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று மகா சத்தமாய் கூப்பிட்டு சொல்லி தன் ஜீவனை விட்டார். எனவே இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் இயேசுவின் "ஆவியும், ஆத்துமாவும்" பிதாவிடம் பரலோகம் சென்றன.

அதே போல் ஒவ்வொரு மனிதனின் மரணத்திலும் "ஆவி தன்னைத்

தந்த தேவனிடம் செல்கிறது (பிர 12:7) என்று சாலொமோன் சொல்கிறார். அதே சமயம் லூக் 12:20ல் ஐசுவரியவானைப் பார்த்து மதிகேடனே! இன்று உன் "ஆத்துமா" உன்னை விட்டு எடுபடுமாகில் நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்? என்று தேவன் கேட்டார். எனவே ஒவ்வொரு மனிதனின் மரணத்திலும் "ஆவியும் ஆத்துமாவும் சேர்ந்து நித்தியத்திற்குள் பிரவேசிக்கிறது என்று அறிகிறோம்.

நாம் பரலோகத்தைக் கண்டு பரவசமடைகிறதற்கும், நரகத்தைக் கண்டு நடுக்கம் அடைவதற்கும் காரணம் இந்த ஆத்துமாதான். மரணத்தில் என்ன நடக்கிறது?

மனிதனுடைய ஆத்துமாவில் உள்ள மனம், அறிவு, உணர்ச்சி, ஆகிய நான்கிலும் "சித்தத்தை" (Will) தேவன் மனிதனிடம் இருந்து பறித்துக் கொள்வாரானால் அதுதான் மரணம். மோட்சத்தில் இருக்கும் மனிதனுடைய சுயசித்தம் பறிக்கப்பட்டிருக்கிறது. அதே போல் நரகத்திலும் மனிதனுடைய சித்தம் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆத்துமாவில் உள்ள மற்ற மூன்றும் (மனது, அறிவு, உணர்ச்சி) இருக்கிறது.

எடுத்துக்காட்டாக ஐசுவரியவான், லாசரு சம்பவத்தில் ஐசுவரியவான் பூலோகில் தேவனைத் தேடாமல் பாவத்தில் ஜீவித்து பாவத்தோடு மரித்து பாதாளமாகிய நரகம் சென்றான். (லூக் 16:20). ஆனால் லாசரு என்னும் தரித்திரன் நீதிமானாய் ஜீவித்து பரிசுத்தமாய் மரித்து பரலோகம் சென்று ஆபிரகாமின் மடியில் போய் இளைப்பாறினான்.

முதலாவது நரகத்தில் இருக்கும் ஐசுவரியவானைப் பாருங்கள். அவனுக்கு அறிவு இருக்கிறது. ஏனென்றால் வெகு தூரத்தில் இருக்கும் ஆபிரகாமை நோக்கி "தகப்பனாகிய ஆபிரகாமே" (லூக் 16:23) என்று அழைத்தான். ஆபிரகாமின் வீட்டு எச்சில் இலைகளைப் பொறுக்கின லாசருதான் என்று அறிந்து கொண்டான். "லாசரு தன் விரலின் நுனியில் தண்ணீரைத் தோய்த்து என் நாவைக் குளிரப் பண்ணட்டும்" என்று கேட்டுக் கொண்டான். எனவே பல ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் ஆபிரகாமையும், லாசருவையும் அடையாளம் காண்கிறான் என்றால் நரகத்தில் இருப்பவனுக்கு "அறிவு" இருக்கிறது என்று விளங்கிக் கொள்கிறோம்.

மேலும் நரகத்தில் ஐசுவரியவான் வேதனைப்பட்டான் என்று (லூக். 16:23) வேதம் சொல்கிறது. நான் வேதனைப்படுகிறேன். (16:24, 16:25, 16:27) என்று நான்கு முறை சொல்லப்பட்டுள்ளது. வேதனை என்பது மனிதனின் உணர்ச்சி. நரகத்தில் ஒரே ஒரு உணர்ச்சி தான் உண்டு. அது என்ன? வேதனை. எனவே நரகத்தில் மனித ஆத்துமாவில் "உணர்ச்சி" இருக்கிறது.

மேலும் நரகத்தில் மனிதனுக்கு "மனது" இருக்கிறது. ஞாபக சக்தி சிந்தனை இருக்கிறது. தகப்பனே! எனக்கு பூலோகத்தில் சகோதரர்கள் 5

பேர் உண்டு. அவர்களும் இந்த வேதனையுள்ள இடத்துக்கு வராதபடி லாசரு போய் அவர்களுக்கு பிரசங்கம் செய்யட்டும் என்று ஐசவரியவான் கேட்டுக் கொண்டான் (லூக் 16:27) எனவே ஐசுவரியவானுக்கு மனது இருக்கிறது.

ஆனால் "சித்தம்" மாத்திரம் கிடையாது. சித்தம் பறிக்கப்பட்டிருக்கிறது. ஐசுவரியவான் பாதாளத்தைத் தாண்டி பரலோகம் செல்ல முடியாது, பரலோகத்தில் உள்ள லாசரும் தன் விரலின் நுனியில் ஐசுவரியவான் நாவைக் குளிரப் பண்ணவும் முடியாது. பரலோகத்திற்கும், பாதாளத்திற்கும் நடுவே பெரும் பிளவு இருக்கிறது. எனவே மனிதனுடைய "சித்தம்" பறிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்று உலக வாழ்வில் இருக்கும் சகோதரனே, சகோதரியே! இன்று உனக்கு பூரண சுயாதீன சித்தத்தை தேவன் உனக்குள் வைத்திருக்கிறார். இன்றே அநுக்கிரக காலம். இன்றே இரட்சண்ய நாள். இன்று உன் சித்தம் உன்னிடம் இருக்கிறதே. அதைக் கொண்டு தேவசித்தம் செய்வாயா? இயேசு உனக்கு உதவி செய்வார்.

அப்படியே பரலோகத்திலும் இருக்கிற பரிசுத்தவான்களுக்கும் ஆத்துமாவில் மனது, அறிவு, உணர்ச்சி உண்டு. ஆனால் சுயசித்தம் செய்ய முடியாது.

பரலோகத்தில் இருக்கும் இரத்த சாட்சிகளின் ஆத்துமா தேவனை நோக்கி கூப்பிடுகிறதாம். அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலி பீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் பரிசுத்தமும், சத்தியமும் உள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டார்கள். (வெளி 6:9,10). எனவே தங்களுக்கு உபத்திரவம் கொடுத்து கொலை செய்த மனிதரைக் குறித்து பரலோகத்தில் உள்ள இரத்த சாட்சிகளுக்கு ஞாபக சக்தியும், எண்ணமும், இருக்கிறபடியால் பரலோகத்தில் உள்ளவர்களுக்கு "மனது" இருக்கிறது.

மேலும் பரலோகத்தில் உள்ளவர்களுக்கு "அறிவும்" இருக்கிறது. பரலோகத்தில் உள்ளவர்கள் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிக்கிறவரைத் தொழுது கொண்டு தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து கர்த்தாவே தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக் கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கிறது. (வெளி 4:10,11)

என்று கடந்த கால நிகழ்கால காரியங்களை தெளிவாய் அவர்கள் சொல்லுகிறபடியால் அவர்களுக்கு "அறிவும்" இருக்கிறது.

அது மாத்திரமல்ல. பரலோகத்தில் உள்ளவர்களுக்கு ஒரே ஒரு உணர்ச்சி தான் உண்டு. அது என்ன? சந்தோஷம். களி கூருதல், மகிழ்ச்சி ஆனந்தம். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று ஆவியானவர் சொல்கிறார். எனவே பரலோகத்தில் உள்ள உணர்ச்சி சந்தோஷமே. சமாதானமே.

ஆனால் பரலோகத்திலும் மனிதனுடைய சுயசித்தம் பறிக்கப்பட்டுள்ளது. அவன் பூலோகத்திற்கு திரும்ப முடியாது. பரலோகத்தில் சுயசித்தம் செய்ய முடியாது. அங்கு மனிதன் தூதனைப் போல் இருப்பான்.

எனவே பரலோகத்திற்கு செல்வது நமது ஆவி மாத்திரமல்ல. ஆத்துமாவும் செல்கிறதாய் இருக்கிறபடியால் ஆத்துமாவும் கட்டாயம் பரிசுத்தமடைய வேண்டும்.

நரகத்திலும் வேதனைப்படுவது மனித ஆத்துமாவாக இருக்கிறபடியால் ஆத்துமாவின் மீட்பு அருமையானது. எனவே ஆத்துமாவின் இரட்சிப்பையும் பரிசுத்தமாக்குதலையும் கவனிப்போம்.

## 1. மனம்:

**ஆதாமின் மனம்:** தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாம், ஏவாள் என்பவர்களின் மனம் முதலாவது தூய்மையாய் இருந்தது. அவன் மனதில் தேவனுக்கு மட்டுமே இடமிருந்தது. தேவனுடைய வார்த்தை மனதில் பதிந்திருந்தது. அந்த மனதில் சாத்தான் முதலாவது சந்தேகம் என்ற எண்ணத்தைப் போட்டான். "தேவனாகிய கர்த்தர் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்க வேண்டாம்" என்று சொன்னது உண்டோ? என்று சர்ப்பம் ஏவாளைப் பார்த்துக் கேட்டது. இந்த கேள்வி ஏவாளின் மனதில் விழுந்தவுடனே அவள் மனதில் தேவனுடைய வார்த்தையை குறித்து அவிசுவாசப்பட்டாள். அதனால் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். தானும் பழத்தைப்புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். இப்படியாக எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி ஏகமாய்க் கெட்டுப் போனோம்.

**அவிசுவாசியின் மனம்: (Darkness in mind)** உலக மக்கள் அனைவரும், படித்தவர்களோ படிக்காதவர்களோ யாராயிருந்தாலும், அனைவருக்குமே தேவனுடைய வார்த்தை என்பது விளங்காத ஒரு புதை பொருளாக இருக்கிறது. காரணம் என்னவென்றால் பவுல் சொல்கிறார். தேவனுடைய சாயலாக இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான

சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குள்ளே பிரகாசமாயிராதபடி இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசு அவர்களுடைய மனக் கண்களைக் குருடாக்கியிருக்கிறான். (II கொரி 4:4) எனவே உலக மக்கள், தேவனை அறியாதவர்கள் அனைவருடைய மனதிலும் இருள் இருக்கிறது (Darkness in Mind) ஏனென்றால் தேவனுடைய தீபமாகிய ஆவி அணைந்து விட்டதால் (நீதி 20:27) ஆவியை சார்ந்திருக்கிற ஆத்துமாவில் இருள் இருக்கிறது. எனவே தான் உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாக கர்த்தராகிய இயேசு அவதரித்தார்.

### (a) மனந்திரும்புதல்: (New Mind)

மனதில் காரிருள் நிறைந்த மக்கள் வாழும் உலகில் இயேசு பிறந்து, வளர்ந்து முதலாவது ஜனங்களைப் பார்த்து பேசிய செய்தியில் "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது" (மத். 4:17) என்கிறார். மனந்திரும்புதல் என்பதற்கு (Repent - METANOEO-GK to change the mind) என்று கிரேக்க மொழி கூறுகிறது. இதன் அர்த்தம் மனதை மாற்றிக் கொள்ளுங்கள் அல்லது புதிய மனதைத் தரித்துக் கொள்ளுங்கள் என்று அர்த்தம் என்று ஸ்கோபீல்டு என்று வேதப் பண்டிதர் கூறுகிறார.

டேக்ஸ் என்பவர் Change your attitute toward the sins"

என்று இந்த வார்த்தைக்கு விளக்கம் சொல்கிறார். பாவத்தில் ஜீவிக்கிற நீங்கள் இன்று முதல் பாவத்தில் ஜீவிக்காதபடி பரிசுத்தமாய் வாழ உங்கள் சுபாவத்தை மாற்றிக் கௌ்ளுங்கள் என்பது அர்த்தமாகும்.

பில்லிகிரஹாம் சொல்லும்போது Put the new mind புதிய மனதைத் தரித்துக் கொள்ளுங்கள் என்று விளக்கம் கூறுகிறார்.

எனவே மனந்திரும்பும் போது இருளான மனது மாறி புதிய மனம் நமக்கு கிடைக்கிறது. அல்லேலுயா.

ஆஸ்வால்டு J. ஸ்மித் சொல்லும் போது "about turn" அதாவது போகின்ற திசையை மாற்றி எதிர் திசையில் திரும்பி நடங்கள் என்கிறார். எனவே இதை வாசிக்கும் அன்பு சகோதரனே, சகோதரிகளே நீங்கள் மனந்திரும்பியிருக்கிறீர்களா? சுபாவத்தில் மாற்றம் பெற்றிருக்கிறீர்களா? மனந்திரும்புங்கள்.

### (b) மனது திறக்கப்படுதல்: (Open the Mind)

மேலே சொன்ன மனந்திரும்புதல் நமக்கு எப்படி கிடைக்கிறது என்று விபரமாக லூக் 24:25ல் கவனிப்போம். "அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை இயேசு திறந்தார்." எப்படி திறந்தார்? எப்படி மனது திறக்கப்பட்டது? இயேசு கிறிஸ்து, பழைய ஏற்பாட்டிலும், ஆகமங்களிலும், சங்கீத புஸ்தகத்திலும், தீர்க்கதரிசன

புஸ்தகங்களிலும் தன்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளைக் குறித்து எடுத்துச் சொன்னார். இயேசுவைக் குறித்த வார்த்தைகளைக் கேட்ட சீஷர்களுடைய மனது திறக்கப்பட்டது. இன்றைக்கும் ஜனங்களுடைய மனது திறக்கப்பட ஒரே வழி இயேசுவே. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்தியே. மனிதனின் மனதைத் திறக்கும். இயேசு பிரசங்கிக்கப்படும் வேளையில் கல்லான மனதும் திறக்கப்படும். கடின உள்ளங்களும் உடைக்கப்படும் மெய்யான தூய்மையான மனது கிடைக்கும். அல்லேலூயா.

## (c) மனது பிரகாசமடைதல்: (Enlightening the Mind)

மனந்திரும்பினவர்கள், மனது திறக்கப்பட்டவர்கள் அத்துடன் திருப்தியடையக் கூடாது. மனது பிரகாசமடையும்படி ஜெபிக்க வேண்டும். சபையாருடைய மனது பிரகாசமடைய வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றார் பவுல் (எபே 1:18). நமது மனது பிரகாசமடையும் போது இயேசு எப்படி மரணத்தை ஜெயித்து உயிர்தெழுந்தாரோ, அது போலவே நாமும் பாவத்தையும் பிசாசையும் பாதாளத்தையும், மரணத்தையும் உலக ராஜ்யங் களையும் ஜெயிப்போம் என்ற விசுவாசம் கிடைக்கிறது. அதுவே பிரகாச முள்ள மனக்கண்கள். நமது ஆத்துமாவின் மனக்கண்களை பிரகாசிப்பது கர்த்தருடைய வேதம். கர்த்தருடைய வேதம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதும் கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. (சங்.19:8) என்று தாவீது கூறுகிறார்.

## (d) மனது கெடுக்கப்படுதல்: (Corrupted Mind)

தேவனுடைய பிள்ளைகள் தேவனால் சந்திக்கப்பட்டு, சிலுவையின் மீட்பை பெற்று ஆதாம் இழந்து போன தூய்மையான மனதை திரும்பவும் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்து மூலமாய் பெற்று, மனந்திரும்பி ஆசீர்வாதமாய் ஜீவிக்கும் போது பிசாசுக்கு பொறாமை வருகிறது. அன்று ஏவாளுடைய மனதைக் கெடுத்தது போல இன்று விசுவாசிகளுடைய மனதைக் கெடுக்கும்படி கிரியை செய்கிறான். கொரிந்திய சபையின் விசுவாசிகள் மனதைக் கெடுக்க பிசாசு தீவிரமாய்ப் போராடினான். சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையின்று கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன் (II கொரி 11:3) என்றார் ஏவாளின் மனதைப் பிசாசு கெடுத்து விடும்போது, ஏவாள் பாவத்தில் விழுந்து தேவனால் சபிக்கப்பட்டு, தேவனுடைய சந்நிதியை விட்டு தள்ளப் பட்டாள். அப்படியே தேவ பிள்ளைகளின் மனது கெடுக்கப்படும் போது கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்து போகிறார்கள்.

**தேவனுடைய பிள்ளைகளின் மனதைப் பிசாசு எப்படி கெடுக்கிறான்?**

தேவனுடைய ஜனங்கள் இரவு வேளைகளில் ஜெபத்தில் தரித்திராமல் அதிகமாக தூக்கத்திற்கு இடங்கொடுப்பார்களானால் "மனுஷர் நித்திரை பண்ணும் போது அவனுடைய சத்துரு வந்து கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போகிறான்" (மத் 13:25) என்கிறார் இயேசு. தேவ ஜனங்களின் மனதில் அவிசுவாசம், பயம், சந்தேகம், கவலை, துக்கம் சோர்வு, துர்ச்செய்தி ஆகிய களைகளை விதைக்கிறான்.

**விசுவாசிகளின் மனது செழிப்பான நிலமாயிருக்கிறது. The Mind of the believer is the fertile land** என்று ஹென்னத் ஹேகின் சொல்கிறார்.

செழிப்பான நிலத்தில் கோதுமையை விதைத்தால் கோதுமை செழிப்பாய் வளரும். களைகளை விதைத்தால் களைகளும் செழிப்பாய் வளரும். இவ்விதமாக பிசாசு களைகளை சபையாருக்குள் விதைப்பதினால் இதற்கு தேவ ஜனங்கள் இடங்கொடுப்பதினால் கோதுமைகள் மத்தியில் களைகளும் முளைத்து செழித்து வளருகிறது. விசுவாசிகள் மத்தியில் பின் மாற்றக்காரர்களும் இருக்கிறார்கள். இதனால்தான் நல்லவர்கள் மத்தியில் கெட்டவர்களும் இருக்கிறார்கள். இந்தக் களைகளைப் பிடுங்க ஊழியக்காரர்கள் விரும்பினாலும் களைகளைப் பிடுங்க வேண்டாம் என்று இயேசு தடுத்துவிட்டார். நியாயத் தீர்ப்பு நாள் வரைகளையும் இருக்கட்டும் என்றார். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். முதலாவது தம்முடைய தூதனை அனுப்பி நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத் 13:50) என்றார் நம் இயேசு. தேவனுடைய பிள்ளையே! நீ சபையின் நடுவில் நல்ல கனிகளால் நிறைந்த கோதுமை மணியா? அல்லது சபைக்கும் ஊழியத்துக்கும் இடையூராக இருக்கும் களையாகவும் இருக்கிறாயா? நல்ல சாட்சி உங்களுக்கு உண்டா? அல்லது உங்களுடைய துர்சாட்சியினாலே ஆத்துமாக்கள் இடறுகிறார்களா? சத்தியத்தைக் கைக்கொண்டு தேவனுக்கும் தேவனுடைய சபைக்கும் பக்தி விருத்தியாய் வளருகிறீர்களா? அல்லது சத்தியத்தை மறுதலித்து உலக சிநேகத்துக்கு இடங்கொடுத்திருக்கிறீர்களா?

பிசாசின் தாக்குதலால் பேதுருவின் மனம் கெடுக்கப்பட்டது. பேதுரு இயேசுவைக் கடிந்து கொண்டான். இயேசு "அப்பாலே போ சாத்தானே. நீ தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளை சிந்திக்கிறாய்." (சிந்தனை மனதில் இருக்கிறது) (மத் 16:23) என்று கடிந்து கொண்டார். எவ்வளவு பெரிய மனிதர்களையும் பிசாசு கெடுக்கப் பார்ப்பான். ஜாக்கிரதையாயிருப்போமாக! எனவே தான் இயேசு கெத்செமனே தோட்டத்தில் ஜெபிக்கும் போது சோதனைக்குட் படாபடிக்கு விழித்திருந்து

ஜெபம் பண்ணுங்கள் (மத் 26:4) என்றார்.

தேவ பிள்ளைகளின் மனது கெடுக்கப்படும் போது அதன் விளைவுகளையும் நஷ்டங்களையும் சற்று கவனிப்போம்.

### 1. குறுகிய மனம்: (Narrow Mind)

சாத்தானால் மனது கெடுக்கப்பட்டவர்கள் ஊழியங்கள் வளர்வதை விரும்ப மாட்டார்கள். ஆலயம் பெரிதாக கட்டப்படுவதை விரும்ப மாட்டார்கள். திரள் ஜனங்கள் இரட்சிக்கப்படுவதை சகிக்க மாட்டார்கள். வாக்குவாதம் செய்கிறவர்களும், ஒடுங்கிப் போகிறவர்களு மாயிருப்பார்கள். ஊழியக்காரர்கள், தேவ ஜனங்கள் ஆசீர்வாதமாய் இருப்பதை சகிக்க மாட்டார்கள். எந்நேரமும் சபையையும் ஊழியரையும் குறை கூறிக் கொண்டிருப்பார்கள். சபை விட்டு, சபையாக ஓடி முடிவில் ஒரு சபையும் சரியில்லை என்று சுயநீதிக்கு இடங்கொடுத்து தனிமையில் இருப்பார்கள். பிசாசு எளிதில் அவர்களைப் பிடித்து சாப்பிட்டு விடுவான். தேவனுடைய பிள்ளையே நம்முடைய மனது கெடுக்கப்படாதபடி ஜாக்கிரதையாய் இருப்போமாக!

### 2. கட்டுக்கடங்காத சிந்தனை: (Uncontrolable thoughts)

மனது கெடுக்கப்பட்டவர்கள் சிந்தனைகளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பலவீனராய் இருப்பார்கள். வனாந்திரத்தில் இஸ்ரவேலர் மனது கெடுக்கப்பட்டது. எகிப்தில் சாப்பிட்ட மச்சங்களையும், வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவைகளை நினைக்கிறோம் என்றார்கள். எங்கள் உள்ளம் வாடிப்போகிறது என்றார்கள் (எண் 11:6) அவர்கள் இறைச்சி கேட்டார்கள். அவர்கள் கேட்டதை தேவன் கொடுத்தார். ஆனால் அவர்கள் ஆத்துமாக்களிலோ (மனது) இளைப்பை அனுப்பினார் (சங் 106:15). எனவே மனது கெடுக்கப்படாதபடி விழித்திருந்து ஜெபிப்போமாக! சிந்தனைகளைக் கட்டுப்படுத்துவோமாக!

### 3. அசுத்த எண்ணம்: (Evil lusts)

மனது கெடுக்கப்பட்டவர்கள் அசுத்த எண்ணங்களால் சிறைப் படுத்தப்பட்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டு ஓயாத கண்களையுடைவர்களாய் இருப்பார்கள். இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பம் என்று எண்ணி கறைகளும் இலச்சைகளுமாயிருந்து உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள் (II பேதுரு 2:13) எனவே மனது கெடுக்கப்படாதபடி கவனமாயிருப்போமாக!

### 4. கெட்ட சொப்பனக்காரர்கள்: (Filthy dreamers)

சாத்தானால் மனது கெடுக்கப்பட்டவர்கள் தினமும் கெட்ட சொப்பனம்

காண்பார்கள். அசுத்த சொப்பனம் காண்பார்கள். சொப்பனக் காரர்களாகிய இவர்களும் அசட்டை பண்ணி, மகத்துவங்களை தூஷிக்கிறார்கள். (யூதா 1:8) இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மனது கெடுக்கப்படாதபடி நம்மைக் காத்து கொள்வோமாக!

## 5. அலைகிற மனது: (Wavering Mind)

சாத்தானால் மனது கெடுக்கப்பட்டவர்கள் ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்க முடியாது. ஆராதனையில் ஒருமனமாய் வீற்றிருக்க முடியாது. ஜெபம் என்றால் அப்படிப்பட்டவர்களுக்கு சலிப்பாக இருக்கும். ஆலயத்திலோ வீட்டிலோ அவர்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் மனது முழு உலகத்தையும் சுற்றி வந்து விடும். தங்களை மறந்து தேவ பிரசன்னத்தில் நிறைந்து, ஆவியில் மகிழ்ந்து ஜெபிக்க முடியாதவர்களாய் இருப்பார்கள். ஜெபிக்கும் போது 10 நிமிடத்துக்கு ஒருமுறை கடிகாரத்தைக் கவனிப்பார்கள். இவர்களே மனது கெடுக்கப்பட்டவர்கள். எனவே மனதைக் காத்துக் கொள்வோமாக!

## 6. ஞாபகசக்தி குறைவுள்ளவர்கள்: (Memory Weak)

சாத்தானால் மனது கெடுக்கப்பட்ட சிறுபிள்ளைகள், வாலிபர்கள், இளைஞர், முதியோர் யாராயினும் ஞாபகசக்தி குறை உள்ளவர்களாய் இருப்பார்கள். அப்படியானால் அவர்களுடைய மனது கெடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். சாத்தானுடைய மற்றொரு வேலை எதுவென்றால் விதைக்கப்படுகிற வசனங்களை விசுவாசிகளுடைய மனதிலிருந்து பொறுக்கிக் கொள்வது அல்லது எடுத்துப் போடுவது (மாற் 4:15) இதனால் ஞாபகசக்தி குறைந்து போகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கேட்ட தேவனுடைய செய்தியோ, படித்த பாடங்களோ, பாடல்களோ, ஆட்களுடைய பெயர்களோ, ஞாபகத்தில் இருக்காது. மறதி அதிகமாய் இருக்கும். எனவே சாத்தானால் மனது கெடுக்கப்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணக் கடவோம்.

சாத்தானால் மனது கெடுக்கப்படும் பொழுது இவ்வளவு அதிகமான கஷ்டத்தை தேவ பிள்ளைகள் அடைவதால் நமது மனது கெடுக்கப் படாதபடி எப்படி பாதுகாப்பது என்று நாம் தொடர்ந்து படிப்போமாக!

# மனது காக்கப்படுதல்
## (Save the mind)

தேவ பிள்ளைகள் கர்த்தரிடம் பெற்ற தூய்மையான பரிசுத்தமான மனதை எப்படி காப்பது என்று இந்த செய்தியில் படிக்கப் போகிறோம்.

## 1. மறுரூபமடையும் மனது: (Renew the Mind)

ரோமர் 12:2ல் நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்

தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (Renew the mind). இப்பிர பஞ்சத்திற்கொத்த வேஷம் தரிப்பதில் நமது மனதைப் பயன்படுத்தாமல் தேவனுக்குப் பிரியமாய் வாழ்வது எப்படி? என்ற வாஞ்சையை நமது மனதில் உண்டாக்கிக் கொள்வோமாக! அப்பொழுது தினமும் நமது மனது மறுரூபமாகும். இப்படிப்பட்டவர்கள் நேற்று இருந்த பரிசுத்தம், ஜெபம் நீதி இவைகளைவிட இன்று சற்று கூடுதலாக ஜீவிப்பார்கள். நாளை இன்னும் அதிகமாக வளருவார்கள். இவ்விதம் மனது மறுரூபமாகும் பொழுது அங்கே பிசாசு தன் தந்திரங்களைக் காட்ட முடியாது. அப்படிப்பட்ட மனதை கெடுக்க முடியாது.

## 2. தேவ வசனத்தால் நிறைந்த மனது: (Avoid the Vacum Mind)

சங் 119:113ல் தேவ மனிதனாகிய தாவீது வீண் சிந்தைகளை வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் என்றார். நமக்கு இருக்கும் ஒவ்வொரு நாளிலும் 24 மணி நேரத்தில் சுமார் 20 மணி நேரம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த சிந்தனையில் வீண் சிந்தனைகள் வர வாய்ப்பிருக்கிறது. எனவே வீண் சிந்தனைகள் வரும் போதெல்லாம் உடனே நமது மனதை தேவ வசனத்திற்கு நேராய் திருப்புவோமாக. வெறுமையான மனதிற்கு இடங்கொடுக்க வேண்டாம். கேட்ட தேவ செய்திகள் வாசித்த வேத பகுதிகள், நமக்கு தேவன் தந்த வாக்குத்தத்தங்கள், தேவ தரிசனங்கள் இவைகளை சிந்திப்போமானால் வீண் சிந்தனைகள் வராது. அப்பொழுது நமது மனது கெடுக்கப்படாமல் பாதுகாக்கப்படும்.

## 3. இளைப்பாறும் மனது: (Rest in your mind)

நமது மனதிற்கு இளைப்பாறுதல் அதிகம் தேவைப்படுகிறது. உலக மக்கள் எந்நேரமும் சிந்தனைக்கு இடங்கொடுத்து வீணரானார்கள் (ரோமர் 1:21) ஆனால் தேவ பிள்ளைகளின் மனதில் இளைப்பாறுதல் பெற தேவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை தந்திருக்கிறார். நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும். (I கொரி 14:14). இப்படி நமது மனதிற்கு ஓய்வு கிடைப்பதாக பவுல் எழுதுகிறார். நாம் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை பேசும் போது வார்த்தைகள் நமது மூளையில் இருந்து வருவதில்லை. வார்த்தைகள் நம்முயை ஆவியாகிய இருதயத்தில் இருந்த புறப்பட்டு இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது. என்னை விசுவாசிக்கிறவர்களுடைய உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும் என்றார் இயேசு. எனவே இருதயத்தில் புறப்பட்டு, நாவு அந்நியபாஷையைப் பேசுகிற படியால் சிந்தனையின் பிறப்பிடமாகிய மனதுக்கு ஓய்வு, இளைப்பாறுதல் கிடைக்கிறது. பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடு தேவன் பேசுவார். இதுவே

இளைத்தவனை இளைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல் (ஏசா 28:11,12) எனவே ஆவியில் நிறைந்து, அந்நிய பாஷை பேசுவோமாக! அப்பொழுது நமது மனது பிசாசினால் கெடுக்கப்படாதபடி காக்கப்படும்.

## 4. மனதை அடக்குங்கள்: (Subdue your Mind)

தேவபிள்ளைகளின் மனதைப் பிசாசு கெடுக்கும் விதங்களில் இது பயங்கரமானது. பிசாசு தேவபிள்ளைகளின் மனதில் தனக்கென பெரிய அரண்மனையைக் கட்டி அதனுள்ளே வந்து தங்கி தேவபிள்ளைகளை ஆளுகை செய்ய விரும்புகிறான்.. நமது மனதில் பிசாசு கட்டும் அரண்மனை எது? அவிசுவாசம், பயம், சந்தேகம், கவலை, சோர்வு போன்ற இவைகளை அரண்மனை போல கட்டி எழும்பி அதில் தன்னுடைய சிங்காசனத்தை ஸ்தாபித்து தேவபிள்ளைகளை நஷ்டப்படுத்தி அவன் ஆளுகை செய்யப் பார்க்கிறான். இந்த பிசாசு கட்டும் அரண்மனையை உடைப்பேன் என்கிறார். பவுல், அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம் (II கொரி 10:4,5) கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்ளுங்கள். (எபே. 5:11) அப்பொழுது பிசாசின் கிரியைகளாகிய தீய சிந்தனைகள் உங்களை விட்டு ஓடிப்போகும். இவ்விதமாக நமது மனதைக் காப்போமாக! பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன். பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். (நீதி 16:33)

## 5. பயிற்சி செய்யும் மனது : (Practice your Mind)

நமது மனதைக் காத்துக் கொள்வதில் பிரதானமானது இதுவாகும். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாகும். (ரோமர் 8:6) நமது மனதில் உலக சிந்தனை, அசுத்த சிந்தனை, அவிசுவாச சிந்தனைகள், பயத்தின் சிந்தனைகள் வரும்போது, உடனே ஆவிக்குரிய பிரகாரமாய் சிந்தித்து பழகுங்கள். அந்த ஆவிக்குரிய சிந்தை கிறிஸ்துவின் சிந்தையாகும். அந்த சிந்தனையைப் பழக்கத்தில் கொண்டு வருவது எப்படி? கடைசியாக சகோதரரே உண்மையுள்ளவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவை களெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலி 4:8). இப்படிப்பட்டவைகளைச் சிந்தித்துப் பழகுவதே ஆவியின் சிந்தனையாகும். இப்படியே சிந்தித்து நமது மனதை சாத்தான் கெடுக்காதபடி காப்போமாக. ஆமென்! அல்லேலூயா!

## 2. அறிவு - (Intellect)

ஆத்துமாவின் இரண்டாம் பகுதி அறிவு என்பதாகும். (நீதி 19:2) ஆத்துமா அறிவில்லாதிருப்பது நல்லதல்ல என்றார் சாலொமோன். இந்த ஆத்துமாவின் அறிவை நாம் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் இளைப்பாறுதல் இருக்க முடியாது. நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று (மத் 11:29) இயேசு சொன்னார்.

### வெளிப்படுத்தல் அறிவு: (Revelation knowledge)

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாமுக்கு தேவன் தமது சர்வ ஞானத்தின் ஒரு பகுதியைத் தந்திருந்தார். ஆதாம் பெற்றிருந்த அறிவு ஆதாமின் ஆவியில் உள்ள உணர்வின் மூலம் வெளிப்படுத்தலாக (Revelation) கொடுக்கப்பட்டிருந்தது. ஆதாமின் அறிவில் வெளிப்படுத்தல் அறிவு மாத்திரம் இருந்தது. வெளிப்படுத்தல் அறிவால் ஆதாம் நடத்தப்பட்டான். ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தேவ பிரமாணம் (ஆதி 2:17) அவன் ஆவியில் உள்ள உணர்வின் மூலமே கொடுக்கப்பட்டிருந்தது.

தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும் ஆகாயத்தின் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி ஆதாம் அவைகளுக்கு என்னென்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவ ஜந்துக்கு ஆதாம் எந்தெந்த பெயரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. தேவனால் படைக்கப்பட்ட கோடிக்கணக்கான ஜீவ ராசிகளுக்கும்; பெயரிடுவதானால் நிச்சயமாக ஆதாமுக்கு வெளிப்படுத்தல் அறிவு இருந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம்.

மேலும் ஆதாம் அயர்ந்த நித்திரையில் இருக்கும் போது அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனுஷியாக உருவாக்கி அவளை ஆதாமிடத்தில் கொண்டு வந்தார். ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பாய் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். (ஆதி 2:23) தான் தூங்கும் போது, தனக்குத் தெரியாமல் தேவன் படைத்த ஏவாளை தன் எலும்பும், தன் மாம்சமும் என்று சொல்வதற்கும், இவள் மனுஷி என்று அழைப்பதற்கும் அவனுக்கு அறிவு எப்படி வந்தது? தேவன் தந்த வெளிப்படுத்தல் அறிவு தான்.

மேலும் ஆதாம் தேவனுடைய சிருஷ்டிப்பின் மகுடமாய் இருந்தான். எல்லா படைப்புகளையும் ஆண்டு கொள்ளும் ராஜாவாக கிரீடம் சூட்டப்பட்டிருந்தான். (சங் 8 : 5) பின்பு தேவன் ஆதாமை நோக்கி, "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின்

மச்சங்களையும், ஆகாயத்தின் பறவைகளையும், பூமியின்மேல் நடுமாடுகிற ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்'' என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி 1 : 28).

இஸ்ரவேலாகிய கானான் தேசத்தில் சாலொமோன் ராஜாவாக்கப்பட்ட போது சாலொமோன் கேட்ட விண்ணப்பம் என்ன? ஏராளமான இந்த ஜனத்தை விசாரிப்பதற்கு ஞானமுள்ள இருதயத்தை தாரும் என்று (Iஇரா:3:9) ஜெபித்தான். அப்படியானால் வானத்திலும், பூமியிலும், சமுத்திரத்திலும் வாழும் ஜீவராசிகளையும் ஆளுவதற்கும், அவைகளை கீழ்ப்படுத்து வதற்கும், ஞானம், எவ்வளவு முக்கியம். ஆதாம் மூன்று உலகங்களுக்கும் (ஆகாயம், பூமி, சமுத்திரம்) ராஜாவாக வீற்றிருந்து ஆளுகை செய்ய தேவன் அவனுக்கு வெளிப்படுத்தல் அறிவு கொடுத்திருந்தார்.

**அறிவின் சோதனை:**

ஆதாமுக்கு தேவன் தந்திருந்த வெளிப்படுத்தல் அறிவு அவனுக்கு நிறைவாய் இருந்தது. இதைக் கண்ட சாத்தான் பொறாமை கொண்டான் ஏவாளோடு தனிமையில் பேசினான். நீங்கள் இந்த கனியைப் புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை, தீமை அறிந்து (to know) தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் சாத்தான் சொன்னான்.

அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு (to make on wise) இச்சிக்கப்படத்தக்க விருட்சம் என்று கண்டு, தானும் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். (ஆதி 3:4,5)

சாத்தான் ஏவாளிடம் பேசும்போது உங்களுக்கு புதிய அறிவு கிடைக்கும் என்று சொன்னான். நீங்கள் புத்தியில் தெளிவடைந்து ஞானியாவீர்கள் என்று சொன்னான். ஏற்கனவே ஆதாமும் ஏவாளும் ஞானத்தில் நிறைவாகத் தான் இருக்கிறார்கள். இப்பொழுது சாத்தான் பொய்யனும் பொய்க்குப் பிதாவாகியிருக்கிறபடியால் ஏவாளிடம் பொய் சொல்லி ஏமாற்றினான். அறிவு கிடைக்கும் என்று சொன்னான். சாத்தானுடைய பொய்யை ஏவாள் விசுவாசித்த போது பாவம் செய்தாள் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள். (ரோமர் 3:23) ஆதாம், ஏவாள் இருவரும் தேவன் தந்த வெளிப்படுத்தல் அறிவை இழந்த போனார்கள்.

**புலன் அறிவு:** (Sense knowledge) :

தேவன் தந்த வெளிப்படுத்தல் அறிவை இழந்து தேவ சமூகத்தை விட்டு தள்ளப்பட்ட மனுஷன் இன்று தன்னுடைய புலன் அறிவால் நடத்தப்படுகிறார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பார்த்தல் | - | Seeing | - | கண் |
| கேட்டல் | - | Hearing | - | காது |
| முகர்தல் | - | Smelling | - | மூக்கு |
| ருசித்தல் | - | Tasting | - | நாக்கு |
| தொடுதல் | - | Touching | - | தொடுதல் |

இவைகள் மூலம் மனிதன் நடத்தப்படுகிறான். புலன் அறிவு இன்று மனிதனை நடத்துகிறது.

உதாரணமாக இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா இயேசுவின் உயிர்தெழுதலை விசுவாசிக்கவில்லை. மற்ற சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன் அவருடைய கைகளில், ஆணிகளால் உண்டான காயத்தை நான் கண்டு, (பார்த்தல்) அந்த காயத்திலே என் விரலையிட்டு, (தொடுதல்) என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். எனவே தோமா புலன் அறிவினால் நடத்தப்பட்டான் என்று அறிகிறோம். இன்றும் தோமாவைப் போலவே உலகம் முழுவதும் மக்கள் புலன் அறிவால் தான் நடத்தப்படுகிறார்கள்.

## அறிவைப் பெற ஆண்டவரின் அழைப்பு:

தேவனுடைய வெளிப்படுத்தல் அறிவை இழந்து தன் சுயஞானத்தினால் புலன் அறிவினால் நடத்தப்படும் மனித இனத்தைப் பார்த்து தேவன் பரிதபிக்கிறார்.

"என் ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள்" (ஓசியா 4:6) "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்." (ஏசா 5:13). அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னனையையும், அறியும், இஸ்ரவேலோ "அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும்" இருக்கிறது என்கிறார் (ஏசா 1:3). எனவே தேவன் நம்மை அழைக்கிறார். தேவ ஞானத்தை, வெளிப்படுத்தல் அறிவைத் தருவதற்காக அழைக்கிறார். தேவ ஞானத்தை, வெளிப்படுத்தல் அறிவைத் தருவதற்காக அழைக்கிறார். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் "கற்றுக் கொள்ளுங்கள்". அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று இயேசு அழைக்கிறார். எனவே தேவ ஞானத்தை இழந்த மனித இனம் திரும்பவும் தேவனிடம் வெளிப்படுத்தல் அறிவைப் பெற்றுக் கொள்ள இயேசுவிடம் வரவேண்டும்.

## மனுஷ ஞானம்: (Experienced knowledge) :

தேவன் தமது ஜனத்தை அறிவைப் பெற்றுக் கொள்ள அழைக்கின்ற

இதே நேரத்தில் மனிதர்கள் இன்று பலவித சுயஞானத்தில் அலைந்து திரிகிறார்கள். கொரிந்திய சபையின் நிரூபத்தில் பவுல் **நான்கு வித ஞானத்தைக்** குறித்து எழுதுகிறார். முதலாவது ஜனங்கள், மனுஷ ஞானத்தில் நடத்தப்படுகிறார்கள். அதாவது மனிதன் தன்னுடைய அனுபவத்தில் பெறுகிற அறிவினால் தன் பின் சந்ததிகளை நல்வழியிலும், வெற்றி வாழ்விலும் நடத்தி விடலாம் என்று எண்ணுகிறான். ஆனால் அநுபவ அறிவு ஆரம்பத்தில் கேட்கிறதற்கும் செயல்படுத்துவதற்கும் நன்றாய்த் தென்பட்டாலும் அதன் முடிவு தோல்வியே. ஏனென்றால் ஒருவருடைய அநுபவம் மற்றவருக்கு பொருந்துவது இல்லை. ஒருவருடைய அநுபவம் இன்னொருவருக்கு செயல்படுத்த முடியாதவை. பவுல் தன் ஊழியத்தில் மனுஷ ஞானத்தைப் பயன்படுத்தவில்லை என்கிறார். (I கொரி 2:5)

## இப்பிரபஞ்சத்தின் ஞானம்: (General knowledge)

அறிவின் குறைவை நிவர்த்தி செய்யவும், நிறைவாக்கவும் மனிதன் ஏற்படுத்திய பொது அறிவின் புத்தகங்களும், தத்துவங்களும் ஏராளம், ஏராளம். "ஒரு நூல்நிலையம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது" என்கிறார் விவேகானந்தர். அதன் அர்த்தம் நூல் நிலையப் புத்தகங்களைப் படிக்கும்போது தவறுகள் செய்து சிறைச்சாலை செல்லும் மனிதன் நூல்களைப் படிப்பதால் வரும் அறிவால் தவறு செய்யமாட்டான். சிறைச்சாலை செல்லமாட்டான் என்கிறார். இன்று நம்நாட்டில் நூல் நிலையங்கள் ஏராளம். சிறைச்சாலைகள் அதைவிட ஏராளம். இப்பிரபஞ்சத்தின் ஞானம் மனிதனைத் திருத்தி விட முடியாது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தை ஊழியத்தில் பயன்படுத்தவில்லை என்கிறார். கொரிந்திய சபையாரின் ஊழியத்தில் பவுல் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தைக் கொண்டு சபை கட்டவில்லை.

பவுல் கமாலியேல் என்னும் ஞானியின் பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொண்டார். கமாலியேலின் கீழ் ஒரு பெரிய பல்கலைக் கழகமே இருந்தது. அப்படிப்பட்ட இடத்தில் படித்து, பாண்டித்தியம் பெற்ற பவுலுக்குள் இப்பிரபஞ்சத்தின் ஞானம் எவ்வளவு இருந்திருக்க வேண்டும். ஆனால் கர்த்தராகிய "இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின்" மேன்மைக்காக இப்பிரபஞ்சத்தின் ஞானத்தைக் குப்பை என்கிறார். எனவே இப்பிரபஞ்சத்தின் ஞானம் நம்முடைய விசுவாசத்துக்கோ, பரிசுத்தத்திற்கோ, வெற்றி வாழ்வுக்கோ, நித்திய ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதற்கோ பயன்படுவதில்லை.

## இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களின் ஞானம்: (Physiology knowledge)

அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஊழியத்தில் புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல் அஸ்திபாரமிட்டு (Wise Master builder) சபை ஊழியம் செய்தார். அவர் ஊழியத்தில் இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களின்

ஞானத்தையும் பயன்படுத்தவில்லை என்கிறார் (I கொரி 2:6) உங்கள் விசுவாசம் மனுஷஞானத்தில் அல்ல. தேவ பெலத்தில் நிற்கும்படிக்கு என் பேச்சும் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாய் இராமல் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தைப் பற்றி பேசவில்லை என்றார்.

120 வருடம் உயிரோடு வாழ்வது எப்படி? என்ற ஒரு புத்தகத்தை தமிழ்நாட்டின் தலைசிறந்த ஞானி ஒருவர் எழுதினார். அதில் சைவ உணவு, உடற்பயிற்சி, யோகாசனம், மூச்சுபயிற்சி, குளிர்நத நீரில் குளித்தல் போன்ற பல காரியங்களை எழுதினார். ஆனால் 120 வயது வரை வாழ்வதற்கு உலகத்திற்கு ஆலோசனை எழுதின அவர் தன்னுடைய 52 வயதில் திடீரென மரித்துப் போனார். இப்பிரபஞ்சத்தின் பிரபுவாகிய அவருடைய ஞானம் அவருக்கே பயன்படாதிருக்கும் போது உலக மக்களுக்கு எப்படி பயன்படும்? எனவே தான் பவுல் இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களின் ஞானத்தையும் பயன்படுத்தவில்லை என்கிறார். இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களின் ஞானமும் தோல்வியே.

## தேவ ஞானம்: (Revelation knowledge) :

பவுல் அப்போஸ்தலன் புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல் அஸ்திபாரமிட்டு ஊழியம் செய்தார். அதற்கு அவர் பெற்ற அறிவு வெளிப்படுத்தல் அறிவாகும். உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறேன் என்றார். இந்த ஞானம் இவருக்கு எப்படிக் கிடைத்தது?

எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் கண்டதுமில்லை. காது கேட்டகவுமில்லை, அவைகள் இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியிலே வெளிப்படுத்தினார். "அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். (I கொரி 2:10) எனவே தான் பெற்ற மறுபிறப்பின் ஆவியில் உள்ள உணர்வின் மூலம் (intuition) வெளிப்படுத்தல் பெற்று ஊழியத்திற்கும் ஜீவியத்திற்கும் வேண்டிய எல்லா ஞானத்தையும் பெற்றுக் கொண்டார். அவர் ஜீவியத்திலும் ஊழியத்திலும் எப்பொழுதும் வெற்றி பெற்றார். (II கொரி 2:14) தன்னுடைய வாழ்வின் சகல சூழ்நிலையிலும் முற்றிலும் ஜெயம் பெற்றார் (ரோமர் 8:36). இந்த வெளிப்படுத்தல் ஞானமே இன்று நமக்குத் தேவை. சபைக்குத் தேவை. இவ்விதமாக ஆதாம் இழந்து போன தேவ ஞானத்தை இப்பொழுது நமது ஆவியின் உணர்வின் மூலம் திரும்பவும் பெற்று ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

### தேவனைத் தேடும் நான்கு விதக் கூட்டம் :

**1. உலகம்:** சுயஞானத்தில் தேவனைத் தேடினார்கள். அவர்கள் தேவனை அறியவில்லை. (I கொரி 1:21)

**2. யூதர்கள்:** அடையாளத்தைத் தேடுகிறார்கள். (I கொரி 1:22). யூதர்கள் இயேசுவை, இரட்சகராகவும், மேசியாவாகவும் ஏற்றுக் கொள்ளவும் விசுவாசிக்கவும் அடையாளம் கேட்டார்கள். பரிசேயரும், சதுசேயரும் இயேசுவைச் சோதிக்கும்படி ஓர் அடையாளத்தைத் தங்களுக்கு காண்பிக்க வேண்டும். (பார்த்தல் - புலன் - அறிவு) என்றார்கள். யூதர்கள் புலன் அறிவினால் நடத்தப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களை இயேசு கடிந்து கொண்டார். இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள். (மத் 16:4) என்றார். எனவே அவர்களும் தேவனைக் கண்டு கொள்ள முடியவில்லை. இயேசுவின் போதனைகள் யூதருக்கு இடறலாயிருந்தது. (I கொரி 1:23)

**3. கிரேக்கர்:** ஞானத்தைத் தேடுகிறார்கள். கிரேக்கர்கள் தத்துவ ஞானத்தில் சிறந்தவர்கள் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்வி கேட்டு தங்களுடைய சாக்ரட்டிஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ போன்ற இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களின் ஞானத்தை வைத்து தேவனைக் கண்டு கொள்ள முயற்சித்தார்கள். தோல்வி கண்டார்கள். இயேசு மூலமாய் வெளிப்பட்ட இரட்சிப்பும், மீட்பும் கிரேக்கருக்கு பைத்தியமாய்த் தோன்றியது (I கொரி 1:24)

**4. விசுவாசிகள்:** நாங்களோ (பவுல்) சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; (I கொரி 1:23) பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து நமக்கு தேவ பெலனும், தேவ ஞானமுமாயிருக்கிறார். எனவே தேவ ஞானம் வேண்டுமானால் நாம் சிலுவையைப் பார்க்க வேண்டும். சிலுவையைப் பார்க்கிறவர்கள் தேவனைப் பார்க்கிறார்கள். தேவனைக் கண்டடைகிறார்கள். இரட்சிக்கப்படுகிறார்கள். அன்பான தேவ ஜனங்களை உங்களுடைய ஞானம் எப்படிப்பட்டது? தேவ ஞானத்தால் (வெளிப்படுத்தல், ஞானத்தால்) நடத்தப்படுங்கள். ஜெயம் பெறுவீர்கள். ஆமென்! அல்லேலூயா!

## 3. உணர்ச்சி – (Emotion)

தேவனாகிய கர்த்தர் மனிதனை சிருஷ்டித்த போது முதல் மனிதனாகிய ஆதாமின் ஆத்துமாவில் உணர்ச்சி இருந்தது. ஆதாமின் உணர்ச்சியைக் குறித்து தேவன் கவனமுடையவராய் இருந்தார். அவன் உணர்ச்சியில் அக்கரையுள்ள தேவன் அவனை ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தார். ஆதாமின் வீடுதான் ஏதேன். ஆதாமின் ஊர் பெயர் ஏதேன். ஏதேன்

என்றால் “மகிழ்ச்சி” (delight) என்று அர்த்தம். எனவே ஆதாம் மகிழ்ச்சியான ஊரில் மகிழ்ச்சியான வீட்டில் இருந்தான். அவன் வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது.

ஆதாம் பாவம் செய்து வீழ்ச்சியடைவதற்கு முன் அவனுக்குள் நல்ல உணர்ச்சி மாத்திரம் இருந்தது (Positive emotion). ஆனால் பாவம் செய்த பின்பு அவனுக்குள் தீய உணர்ச்சி (negative emotion) வந்தது. மகிழ்ச்சியை இழந்தவன் வருத்தத்தால் நிறைந்து விட்டான் (ஆதி 3:17). ராஜாவாய் சகலத்தையும் ஆளுகை செய்தவன் இப்பொழுது பயத்தால் நிறைந்திருக்கிறான். (ஆதி 3:10) தைரியமாய் இருந்தவன் கோழையாகி விட்டான். ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாய் இருந்தும் வெட்கப்படா திருந்தார்கள். (ஆதி 2:25) ஆனால் கீழ்ப்படியாமையினால் விழுந்து போன போது வெட்கப்பட்டார்கள். இலைகளால் தங்களுக்கு தற்காலிக வஸ்திரத்தை உண்டு பண்ணினார்கள். எனவே ஆதாமின் வீழ்ச்சிக்குப் பின்பு மகிழ்ச்சியில்லை. தீய உணர்ச்சிகள் மாத்திமே மனிதனுக்கு மிச்சமாய் இருக்கிறது.

மனிதனுக்குள் வந்த இந்த வெற்றிடத்தை நிரப்பவே மனிதன் சினிமா, சிகரெட், மதுபானம், சீட்டாட்டம், சன்மார்க்கம், போலி வாழ்க்கை இவைகளால் தன்னை மகிழ்ச்சியாக்கப் பார்க்கிறான். மாயக்காரனின் சந்தோஷம். ஒரு நிமிஷம் மாத்திரம் இருக்கும் (யோபு 20:4) அது அநித்தியமான பாவ சந்தோஷம் (எபி 11:25) அதன் முடிவு அழிவு (நியா 16:25) எனவே இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த இயேசு உன்னை அழைக்கிறார். ஆதி நிலையைப் போல மனிதனைப் புதுப்பிக்க மெய்யான சந்தோஷத்தை தர இயேசு அழைக்கிறார். சகோதரனே உன் மனம் இது வரைக்கும் தீய உணர்ச்சிகளுக்கு இடமளித்திருந்தால் உன்னைப் பரிசுத்தப்படுத்த சந்தோஷத்தால் உன்னை நிரப்ப இயேசு உன்னை அழைக்கிறார்.

## மனிதனின் எதிரி யார்?

முதல் மனிதனாகிய ஆதாமின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் அவன் உணர்ச்சியே. பழத்தை ஏவாள் இச்சித்தாள் (இச்சை). ஆதி மனிதனாகிய ஆதாம் பாவம் செய்த பின்பு தீய உணர்ச்சிகள் வந்தது. எனவே நமக்குள் இருக்கும் உணர்ச்சி நமக்கு பலத்த எதிரியாய் இருக்கிறது. ஏனென்றால் இப்பொழுது மனிதன் “குழம்பிய உணர்ச்சிகளால்” நிறைந்திருப்பதால் உணர்ச்சிகளால் நாம் நடத்தப்படும்போது சாத்தானுக்கு இடங்கொடுக்க வாய்ப்பிருக்கிறது. அப்பொழுது ஆவிக்குரிய வாழ்க்கை தோல்வியடையும். தேவமனிதன் விகிள்ஸ் ஒர்த் இவ்விதமாக சொல்கிறார்.

**“நான் எதைப் பார்க்கிறேனோ (See) அதன் படி நான் நடப்பதில்லை”.**

**“நான் எதை உணர்கிறேனோ (feel) அதன்படி நடப்பதில்லை”.**

**"ஆனால் நான் எதை விசுவாசிக்கிறனோ (believe) அதன்படியே நான் நடக்கிறேன்".**

எனவே நாம் காண்பதும், கேட்பதும், உணர்ச்சிகளும் மாறி மாறி வித்தியாசப்படும். அதன் முடிவு தோல்வியாக இருக்கும். ஆனால் விசுவாசம் என்பது சூழ்நிலைகள் மேல் கட்டப்படுவதில்லை. விசுவாசத்தை துவக்குகிறவரும், பூரணப்படுத்துகிறவரும் கர்த்தர் (எபி 11:1). எனவே விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும். தேவ பிள்ளைகளே! நமது குழம்பிய உணர்ச்சிகளில் நல்ல உணர்ச்சிகளும் உண்டு. தீய உணர்ச்சிகளும் உண்டு. எனவே நமது தீய உணர்ச்சிகளைக் கட்டப்படுத்தி நல்ல உணர்ச்சிகளால் நாம் நடத்தப்படுவது எப்படி என்று சற்று கவனிப்போம்.

## தீய உணர்ச்சிகள் (Negative Emotions)

**1. மாம்ச இச்சைகள்:** பிரியமானவர்களே! அந்நியர்களும் அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரனென்று விரோதமாய் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படிக்கு நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். (I பேதுரு 2: 11,12)

**2. வாதிப்பு:** அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காம விகார நடக்கையால் வருத்தப்பட்டு, நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள அவர்களுடைய ஆத்துமாவில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க... II பேதுரு 2:7,8.

**3. கோபம்:** மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே. ஆகையால் நீங்கள் எல்லா வித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். (யாக் 1:20,21, நீதி 22:24,25)

**4. கலக்கம்:** என் ஆத்துமாவே நீ என் கலங்குகிறாய். ஏன் எனக்குள் தியங்குகிறாய். தேவனை நோக்கி காத்திரு. (சங் 42:5) என்கிறார் தாவீது.

**5. விபசாரம்:** ஸ்திரீயுடனே விபசாரம் செய்கிறவன் மதிகெட்டவன் அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான். வாதையையும் இலச்சையையும் அடைவான். அவன் நிந்தை ஒழியாது (நீதி 6: 32,33) என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.

**6. கவலை:** மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகுந்த

வருத்தமடைந்தாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக மார்த்தாளே மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய் என்றார்.

The Outer confusion the inner man's unrest.

**"புறம்பான மனிதனின் புலம்பலுக்கு காரணம் உள்ளான மனிதனின் அமைதியற்ற தன்மையே"**

என்றார் வாட்ச்மேன் நீ. எனவே நிம்மதியற்ற, சோர்வடைந்த வாழ்க்கை நமது ஆத்துமாவின் உணர்ச்சியைப் பாதிக்கிறது.

**7. சோர்வு:** "மனதில் சோர்வை உண்டாக்குவது சாத்தானின் முக்கிய தந்திரமான யுத்தம்" The mental depression is the chief. we apon of satan. என்று போப் பிலிப் (இங்கிலாந்து) கூறுகிறார்.

எனவே மாம்ச இச்சைகள், வாதிப்பு, கோபம், கலக்கம் விபசாரம், கவலை, சோர்வு ஆகியவை நமது ஆத்துமாவுக்கு கேடுண்டாக்கும் சாத்தானுடைய அக்கினியாஸ்திரங்கள். எனவே இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் தங்களில் இருக்கும் பாவத்திற்கேதுவான உணர்ச்சிகளை தங்களை விட்டு விலக்க வேண்டும். கட்டுப்படுத்த வேண்டும். உணர்ச்சிகளை ஜெயித்துப் பழகினவர்கள் வாழ்வில் பலத்த அபிஷேகமும், வல்லமையும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

தேவ பிள்ளைகள் சிலசமயம் பவுலைப் போல் மூன்றாம் வானத்தில் சஞ்சரிக்கிறதைப் போல் உணர்வார்கள். பல சமயங்களில் பாதாளத்தில் வேதனைப்பட்ட ஐசுவரியவானைப் போல் தவிப்பார்கள். ஏனென்றால் நமது உணர்ச்சி எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

### குழம்பிய உணர்ச்சிகள்

தேவபிள்ளைகள் சில நேரங்களில் தங்களுக்குள் குழம்பிய உணர்ச்சிகளைக் காண முடியும். மனதுருக்கம், சந்தோஷம், மகிழ்ச்சி, களிகூறுதல், சுறுசுறுப்பு, இரக்கம், உற்சாகம், அன்பு, பாசம், நேசம் ஆகிய நல்ல உணர்ச்சிகளும் சில சமயங்களில் வைராக்கியம், குழப்பம், கபடம், சோர்வு, பெருமை, பயம், எரிச்சல், விரோதம் இவைகளாகிய எதிரிடையான உணர்ச்சிகளும் செயல்படுவதைக் காண முடியும். இவ்வித குழம்பிய உணர்ச்சிகளை சமச்சீர்ப்படுத்தி தேவனுக்கு பிரியமானபடி கட்டுப்படுத்த மூன்று படிகளைக் காண்போம்.

### 1. விருப்பம் - Desire

நமது உணர்ச்சியில் விருப்பங்கள் உள்ளது. அது வாழ்வின் பெரும்பகுதியை நிரப்பியுள்ளது. நமது இரட்சிப்புக்கு முன்னே நமது மனதும் மாம்சமும் விரும்பினதைச் செய்து கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்தோம். இப்பொழுதோ பரலோகத்தில் உம்மை

யல்லாமல் எனக்கு யாருண்டு. பூலோகத்தில் உம்மைத் தவிர வேறே விருப்பம் எனக்கு இல்லை (சங். 73:25) என்று தேவனையும் தேவனுக்குப் பிரியமானது எது என்றும் அறிந்து அவைகளை மட்டும் விரும்பிப் பழகுவோமாக!

## 2. அன்பு - Love

தேவன் அன்புள்ளவர். நம்முடைய அன்பை தேவன் எதிர் பார்க்கிறார். எனவே தான் கற்பனைகளில் பிரதான கற்பனை எது? என்று தேவன் சொல்லும் போது "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுபெலத்தோடும் அன்பு கூறுவாயாக (மத். 22:37) தேவ பிள்ளைகள் தங்கள் முழு ஆத்துமாவோடு தேவனிடம் அன்பு கூறுவதற்கு மூன்று தடைகளை வேதத்தில் காண முடியும்.

தகப்பன் - மகனிடத்தில் காட்டும் அன்பு
நண்பன் - நண்பனிடத்தில் காட்டும் அன்பு
புருஷன் - மனைவியினிடத்தில் காட்டும் அன்பு

அன்பு கூற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். எனவே தான் தேவன் ஆபிரகாமிடம் ஈசாக்கை பலியிடச் சொன்னார். ஆபிரகாம் அப்படியே செய்து தேவனிடம் தான் கொண்டிருந்த அன்பை நிரூபித்தான். ஆசீர்வதிக்கப்பட்டான்.

தாவீதை விட்டு தேவன் யோனத்தானைப் பிரித்தார். காரணம் தாவீதும், யோனத்தானும், ஒருவரையொருவர் சிநேகித்தார்கள். தன் ஆத்துமாவைப் போல சிநேகித்தார்கள். ஆத்துமாவின் அன்பு தேவனுக்கு முழுவதும் செலுத்தப்படும் பொருட்டு தாவீதை விட்டு யோனத்தானை தேவன் பிரித்தார்.

யாக்கோபுக்கு 4 மனைவிகள் இருந்தாலும் அவன் அன்பு முழுவதும் ராகேல் பேரில் இருந்தது. உமது இளைய குமாரத்திக்கு 7 வருடம் வேலை செய்கிறேன் என்றான். 14 வருடம் வேலை செய்தான். எனவே யாக்கோபின் அன்பில் தேவன் பிரதான இடத்தைப் பிடிக்க ராகேல் தடையாய்க் காணப்பட்டாள். எல்லாருக்கும் முந்தி தேவன் ராகேலை எடுத்துக் கொண்டார்.

எனவே தேவனைவிட பிள்ளைகளையாவது, நண்பர்களையாவது, மனைவியையாவது நேசிக்காமல் தேவனையே அதிகம் நேசிப்போமாக! இரண்டாவது இடம் மனைவிக்கு, மூன்றாவது இடம் பிள்ளைகளுக்கு, நான்காவது இடம் நண்பர்களுக்கு என்று ஜீவிப்போமாக!

## 3. சந்தோஷம்: Delight

நமது ஆத்துமாவின் சந்தோஷம் என்ற உணர்ச்சியில் இரட்சிப்பின் சந்தோஷம், பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தை தேவன் தருகிறார்.

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இதுவே நம்மைக் குறித்த தேவனுடைய சித்தம் (Iதெச 5:16).

பிலிப்பியர் நிருபம் சிறைச்சாலை நிருபம். ரோமாபுரி சிறைச்சாலையில் பவுல் இருந்து கொண்டு, இரத்த சாட்சியாய் மரிக்க வேண்டிய கடைசி வேளையில் பவுல் சந்தோஷமாய் இருந்தார். 4 அதிகாரங்கள் உள்ள இந்த நிரூபத்தில் 104 வசனங்கள் இதில் உள்ளன. ஆனால் 12 முறை சந்தோஷம் என்ற வார்த்தையைப் பவுல் எழுதுகிறார். சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்கிறேன் (பிலி 4:4) என்கிறார். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் (பிலி 4:6) என்கிறார். அல்லேலூயா! தேவனுடைய பிள்ளையே நீங்கள் கவலைப்படும்படியாக ஆயிரக்கணக்கான பிரச்சனைகள் இருந்தாலும், ஸ்தோத்திரம் செய்யுங்கள். கர்த்தரை துதியுங்கள். பாடுங்கள். ஆர்ப்பரியுங்கள். கவலை விலகும். சந்தோஷம் உங்கள் வாழ்வை நிரப்பும். தேவனும் சந்தோஷப்படுவார். நான் உங்களுக்கு நன்மை செய்யும்படி உங்கள் பேரில் சந்தோஷமாயிருப்பேன் (எரே 32:41) என்கிறார் நம் தேவன்.

இவ்விதமாக தீய உணர்ச்சிகளில் இருந்தும் குழம்பிய உணர்ச்சிகளிலிருந்தும் நம்மை விலக்கிக் காத்து நல்ல உணர்ச்சிகளாகிய விருப்பங்கள், அன்பு, சந்தோஷம் இவைகளால் நமது ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்துவோமாக!

## 4. சித்தம்: (Will)

மனிதனின் ஆத்துமாவில் நான்கு பகுதிகள் உண்டு என்று அறிவோம். அதில் மனம், அறிவு, உணர்ச்சி என்ற பகுதிகளை தெளிவாய்க் கற்றுக் கொண்டோம். இப்பொழுது ஆத்துமாவின் நான்காவது பகுதியாகிய "சித்தம்" (Will) என்ற பகுதியைப் பற்றி ஆவியானவர் நம்மோடு பேச ஆவலாய்க் காத்திருப்போமாக!

தேவன் சித்தமுடையவர் (Will) அவர் சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதனும் சித்தமுடையவன். தேவனுக்கு பூரண சுயாதீன சித்தமுண்டு. தேவனை யாரும் கட்டுப்படுத்த முடியாது. தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது. (யோபு 42:1) என்கிறார் யோபு. தேவனால் படைக்கப்பட்ட தமது சாயலின் படி உண்டாக்கப்பட்ட மனிதனுக்கும் தேவன் பூரண சுயாதீன (Free Will) சித்தம் கொடுத்துத்தான் படைத்தார்.

தேவன் ஆதாமை தன் அடிமையாகப் படைக்கவில்லை. தன் பிள்ளையாகவே படைத்தார். (லூக்கா 3:38). ஆகையால் நீ அடிமையாய் இராமல் புத்திரனாயிருக்கிறாய் (கலா 4:7) ஆதாம் தேவனுடைய மகன் (Adam-the son of God). எனவே தேவன் தன் மகனாகிய ஆதாமுக்கு தன்னுடைய சுயாதீன சித்தத்தைக் கொடுத்து சிருஷ்டித்தார்.

தேவன் ஆதாமை ஒரு பொம்மையாகப் படைக்கவில்லை. சாவி கொடுத்தால் அசைந்து நடக்கும். ஓடும், விளையாடும் கடையில் விற்கும் பொம்மையைப் போல் ஆதாம் சிருஷ்டிக்கப்படவில்லை. ஒன்றைச் செய்யவும், செய்யாதிருக்கவும் ஆதாமால் முடியும்.

நாத்திகர்களின் கேள்வி : ஏதேன் தோட்டத்தில் தேவன் எல்லா நன்மைகளையும் உண்டாக்கினவர் விலக்கப்பட்ட விருட்சத்தை ஏன் படைத்தார்? அதைப் படைத்ததால் தான் மனிதன் அதைப் புசித்தான். வீழ்ந்து போனான். இன்று எல்லா பாடுகளையும் மனிதன் படுகிறான். எனவே விலக்கப்பட்ட விருட்சத்தை தேவன் சிருஷ்டித்தது தவறானது என்று சிலர் கேள்வி கேட்டு அவபக்தியுள்ளவர்களாகிறார்கள்.

அருமையானவர்களே! கவனியுங்கள். நமது வீட்டில் கத்தி இல்லாத வீடு உண்டா? நெருப்பு இல்லாத வீடு உண்டா? மூட்டைப் பூச்சி மருந்து உபயோகிக்காத வீடு உண்டா? ஸ்டவ், கேஸ் சிலிண்டர், மண்ணெண்ணெய் இல்லாத வீடு உண்டா? இவை எல்லாம் எதற்காக நமது வீட்டில் வைத்திருக்கிறோம்?

கத்தியால் வெங்காயம் வெட்டி ஆம்பிளேட் போட்டு சாப்பிடலாம். அதே கத்தியால் விரலையும் வெட்டிக் கொள்ளலாம். கத்தி நமது வீட்டில் இருப்பது பாவமல்ல. குற்றமல்ல. அதை உபயோகிக்கும் நபரின் சித்தத்தில் தான் வித்தியாசம் இருக்கிறது. நெருப்பு சமையலுக்கு உதவும். அதே நெருப்பால் தற்கொலை செய்து மரிப்போர் ஏராளம். நெருப்பை உண்டாக்கியது பாவமல்ல. அதை தவறாய் உபயோகிப்பதுதான் நமக்கு நஷ்டம். மூட்டைப்பூச்சி மருந்து மூட்டைகளையும், கொசு, பாச்சான், பல்லி, எறும்பு இவைகளை அகற்றிவிட்டு சுத்தமாய் வைத்துக் கொள்ள தயாரிக்கப்படுகிறது. ஆனால் அதே சமயம் அதை கோபத்தில் எடுத்துக் குடித்துவிட்டால் மனிதன் மரித்து விடுகிறான். எனவே மூட்டைப் பூச்சி மருந்து தயாரிப்பது குற்றமல்ல. அது நமக்குத் தேவைதான். ஆனால் தவறாகப் பயன்படுத்தும் போது மனிதன் செத்துப் போகிறான். இப்படியே எல்லாப் பொருளும் தன்னில்தான் குறைவுள்ளவை அல்ல. மனிதனுக்கு தீங்கு செய்பவையும் அல்ல. ஆனால் மனிதன் தன் சுய சித்தத்தை தேவ சித்தத்திற்கும், தேவ வார்த்தைக்கும் கீழ்ப்படுத்தும்போது ஆசீர்வதிக்கப்படுகிறான். ஆனால் தன் சுய சித்தத்தை சாத்தானுக்கு விட்டுக் கொடுக்கும்போது தவறு செய்யும்படி மனிதன் தூண்டப்படுகிறான். அப்பொழுது தான் மனிதன் பாவம் செய்து நஷ்டமடைகிறான். தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது (ஆதி 1:31) எனவே நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை தேவன் படைத்தது தவறு அல்ல ஆதாம் தன் சித்தத்தை தேவ சித்தத்திற்கு கீழ்ப்படுத்தாதது தான் அவன் வீழ்ச்சிக்கும், பாவத்திற்கும் காரணமாயிற்று.

## ஆதாம், ஏவாளின் சித்தம்:

சாத்தான் விலக்கப்பட்ட விருட்சத்தைப் பறித்துக் கொண்டு வந்து ஆதாம், ஏவாளை சாப்பிடும்படி நிர்ப்பந்திக்கவில்லை. ஆதாம் ஏவாள் தான் தங்கள் கைகளை நீட்டிப் பழத்தைப் பறித்தனர். ஏவாள் தானும் புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். பழத்தைப் பார்க்கவும், இச்சிக்கவும் கை நீட்டி, பறிக்கவும் சாத்தானால் தூண்டப்பட்டாள். ஆதாம், ஏவாள் தங்களுடைய கீழ்படியாமையினால் (ரோமர் 5:19) தங்கள் சுயாதீன சித்தத்தை சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்தபடியினால் விலக்கப்பட்ட பழத்தை பறித்து சாப்பிட்டார்கள். (ஆதி 3:6) இவ்விதம் ஆதாம் தேவன் தந்த சுயாதீன சித்தத்தை இழந்து பிசாசின் சித்தம் செய்தான். எனவே பாவம் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். (யோவான் 8:34) பாவம் செய்கிறவன்; பிசாசினால் உண்டாயிருக்கிறான் (Iயோவான் 3:8) சினிமா, சிகரெட், கஞ்சா, சாராயம், இச்சை போன்ற ஒவ்வொரு அசுத்தமும் மனிதனை ஆளுகிறது. காரணம் மனிதன் தன் சுயாதீன சித்தத்தை இழந்து போனான். எனவே குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36)

**இயேசுவில் பிதாவின் சித்தம்:** முந்தின ஆதாம் கீழ்ப்படியாமையினால் பிதாவின் சித்தத்தை விட்டு விலகினான். ஆனால் பிந்தின ஆதாமாகிய இயேசு பிதாவின் சித்தம் செய்தார். இயேசு பிறந்த போது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே பிறந்தார். இயேசுவின் சரித்திர துவக்கத்தில் பிதாவின் சித்தம் செய்து நிறைவேற்றுவதில் கருத்துடையவராய் இருந்தார். ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது பலியையும், காணிக்கையையும் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர். சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர் அப்பொழுது தேவனே உமது "சித்தத்தின்படி" செய்ய இதோ வருகிறேன். புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இயேசு (எபி 8:5,7) மனித அவதாரம் எடுத்தார். இவ்விதம் பிறப்பில் இயேசு பிதாவின் சித்தம் செய்தார்.

இயேசு கிறிஸ்து ஊழியம் செய்யும் போது அவர் ஊழியமும் பிதாவின் சித்தப்படியே செய்தார். நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன். எனக்கு சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன். (யோவான் 6:30) என்றார் இயேசு. எனவே இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் பிதாவின் சித்தப்படியே நடந்தது ஊழியத்திலும் பிதாவின் சித்தம் செய்தார்.

இயேசு கிறிஸ்துவின் மரணத்திலும் அவர் பிதாவின் சித்தம் செய்தார். இயேசு சற்று அப்புறம் போய் முகங்குப்புற விழுந்து என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல. உம்முடைய சித்தத்தின் படியே

ஆகக்கடவது என்று (மத் 26:39) ஜெபம் பண்ணினார். பின்பு அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய், என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக் கூடாததாகில் "உம்முடைய சித்தத்தின்படியே" ஆகக்கடவது (மத் 26:42) என்று தன்னை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். இவ்விதம் இயேசு கிறிஸ்து தன் பூலோக வாழ்வின் ஆரம்பத்திலும், நடுவிலும் கடைசியிலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி பூரணமானார்.

## நமது வாழ்வில் தேவ சித்தம்:

ஆதாம் இழந்து போன சுயாதீன சித்தத்தை இயேசு தமது வாழ்வில் நிறைவேற்றி, அந்த பாதையில் நடக்கும்படி இன்று நம்மை அழைக்கிறார். தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான் எனவே (லூக் 6:40) குருவைப் போல் மாறும்படியான முதல்படி பிதாவின் சித்தம் செய்யத் துவங்குவது தான்.

பிதாவின் சித்தம் செய்வது எப்படி? அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள் (யோவான் 1:12,13) எனவே அருமையான சகோதரனே சகோதரியே, இந்த நாள் வரைக்கும் ஆண்டவராகிய இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் வாழ்வீர்களானால் இன்று இயேசுவை உங்கள் தேவனாக, இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவ சித்தம் செய்யும்படி முதல்படி எடுத்து வைக்கிறீர்கள். ஏனென்றால் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியும் அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். (I தீமோ 2:4)

## அனுதினமும் தேவ சித்தம்:

நாம் இரட்சிக்கப்படும் போது தேவ சித்தம் செய்ய தொடங்குகிறோம். நமது சித்தத்தில் பிதாவின் சித்தம் செய்ய இடம் கொடுக்கும் போது, விட்டுக் கொடுக்கும் போது தான் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பிதாவின் சித்தம் செய்ய முடிகிறது.

"Triumph over the Sin is the Door way - But deney the Self will is path Way"

என்கிறார் வாட்ச்மேன் நீ என்ற தேவமனிதன்.

இரட்சிக்கப்பட்டு பாவத்தின் மேல் ஜெயம் பெறுவது ஒரு நிமிஷத்திற்குள் தேவன் நமக்குள் நிகழ்த்தி விடுகிறார். கதவை திறந்து கொண்டு ஒரு அறை வீட்டிற்குள் பிரவேசிப்பது போல இயேசுவாகிய வாசல் வழியாய் ஒருவன் உட்பிரவேசிக்கும் போது அவன் உடனே

இரட்சிக்கப்படுகிறான். ஆனால் வாழ்க்கையில் நமது சுயசித்தத்தை வெறுத்து தேவ சித்தம் செய்வது என்பது அது நெடுந்தூரப் பிரயாணம். நமது ஆயுள் காலம் முழுவதும் ஒவ்வொரு நிமிஷமும் நமது மனதும், மாம்சமும் விரும்பினதைச் செய்யாமல் தேவ சித்தம் செய்தால் மாத்திரமே பூரண பரிசுத்தம் அடைந்து வருகையில் காணப்பட முடியும். நமது வேலை, தொழில், திருமணம், பிரயாணம், ஜீவிதம் அனைத்திலும் நமது சித்தத்தை வெறுத்து பவுலைப் போல "பிதாவே நீர் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்டு (அப் 9:6) அவர் சித்தத்தில் நடந்து கொள்வோமாக!

## இரட்சிப்பில் தேவ சித்தம்:

எல்லா மனுஷரையும் இரட்சிப்பது தேவனுடைய சித்தமாயிருந்தாலும் (Iதீமோ 2:4) சிலரே இரட்சிக்கப்படுகிறார்கள். காரணம் என்ன? எல்லா ருடைய இருதய கதவையும் இயேசு தட்டுகிறார். யார், யார் அவர் சத்தம் கேட்டு இருதயத்தை இயேசுவுக்கு திறந்து கொடுக்கிறார்களோ அவர்கள் உள்ளத்தில் இயேசு வந்து தங்கிவிடுகிறார். (வெளி 3:20) இதயக் கதவைத் திறப்பது நமது சித்தம் தான். இதயக் கதவைத் திறக்காமல் பிடறியைக் கடினப்படுத்துவதம் மனிதனின் சுயசித்தம்தான். எனவே அருமையான தேவபிள்ளையே உன் இதயக்கதவை இயேசுவுக்கு திறப்பாயா?

## ஞானஸ்நானத்தில் தேவ சித்தம் :

ஞானஸ்நானம் முக்கியமான சத்தியம் என்று தெரிந்தும் அதற்கு எதிர்த்துப் பேசும் கிறிஸ்தவர்கள் உண்டு. ஆண்டவர் என்னோடு பேசட்டும். தரிசனம் தரட்டும் என்றெல்லாம் வாதாடுகிறவர்கள் உண்டு. அல்லது மெதுவாக எடுக்கலாம் என்று தன் சுய சித்தத்திற்கு இடங்கொடுத்து தேவனுக்கு கீழ்ப்படியாமலே ஜீவிக்கிறவர்களும் உண்டு. இயேசு சொல்கிறார். "இப்பொழுது இடங்கொடு" இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமது பிதாவுக்கு ஏற்றதாயிருக்கிறது. (மத் 3:15) என்றார். நாம் இடங்கொடுத்தால் தான் ஊழியக்காரர்கள் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். இதுவரைக்கும் சுயசித்தத்திற்கு இடங்கொடுத்து ஞானஸ்நானத்தை தள்ளிப்போடுகிற ஆத்துமாவே! நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு. (அப். 22:26)

## அபிஷேகத்தில் தேவசித்தம்:

தேவனுடைய சபைகளில் சிலருடைய நிலைமை பரிதாபம். பெரிய வரம் பெற்ற தேவதாசர்கள் கைகளை வைத்து ஜெபித்தாலும், அபிஷேகம் பெறாமலே காலத்தைக் கடத்துகிறவர்கள் உண்டு. சிலர் வருடக்கணக்கில் அபிஷேகம் பெறாமல் இருப்பதேன்? அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் ஜீவிப்பதுதான். பரிசுத்த ஆவியானவர் யாருக்கு ஊற்றப்படுகிறார்? தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளப்படுகிற பரிசுத்த ஆவியானவர் (அப்..5:32)

என்று வேதம் சொல்கிறது. எனவே கீழ்ப்படியாமை சுயசித்தம். கீழ்ப்படிதல் தேவ சித்தம். ஆகையால் சத்தியத்திற்கு கீழ்ப்படியுங்கள். அப்பொழுது அபிஷேகம் பெற்றுக் கொள்வீர்கள்.

## பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையில் தேவ சித்தம்:

இந்தக் கடைசி காலத்தில் வருகை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் இந்த சத்தியம் மறைக்கப்படுகிறது. அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தில் இது அஸ்திபாரமான உபதேசமாகும். ஆனால் இந்த இடத்தில் சுயசித்தத்திற்கு இடங்கொடுத்து உலகத்திற்குள் போய் விட்டவர்கள் உண்டு. இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் (save your self) என்று புத்தி சொன்னான். (அப். 2:40) அருமையான ஊழியக்காரர்களே! தேவ ஜனங்களை நீங்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் தானா? சுய சித்தத்திற்கு விலகுங்கள். தேவ சித்தத்திற்கு இடங்கொடுங்கள். அப்பொழுது உங்கள் ஜீவியமும், குடும்பம், ஊழியம் முழுவதும் பரிசுத்தமாயிருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தை கவனியுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம், முழுக்கு ஞானஸ்நானம் என்ற சத்தியங்களை விசுவாசியாத ஜெப ஆலயத்தை விட்டு, விலகி சிலரை அவர்களிடமிருந்து பிரித்துக் கொண்டு திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையில் அனுதினமும் சம்பாஷித்துக் கொண்டிந்தான். இரண்டு வருட காலம் இப்படி நடந்ததினால் ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள் (அப். 19:9,10) அல்லேலூயா! பல வருடங்களாக ஜெப ஆலயம் செய்ய முடியாத ஊழியத்தைப் பவுல் இரண்டு வருடத்தில் செய்து முடித்தார். எப்படி?

பவுல் பிரித்தெடுக்கப்பட்ட ஊழியன்.

பவுலின் சபையும் பிரித்தெடுக்கப்பட்ட சபை,

எனவே சுய சித்தத்தை இங்கேயும் அழித்து தேவ சித்தத்திற்கு இடங்கொடுப்போமாக!

## ஜெப ஜீவியத்தில் தேவசித்தம்:

நாம் தொடர்ந்து பிதாவின் சித்தம் செய்ய வேண்டும். பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். (எபே 4:27) பிசாசுக்கு இடம் கொடுப்பது நமது சுயசித்தம். அதே சமயம் பிசாசுக்கு எதிர்த்து நிற்பது தேவசித்தம் (யாக் 4:7) எனவே பிசாசுக்கு எதிர்த்து நிற்போமாக! அப்பொழுது அவன் ஓடிப்போவான்.

## கொடுப்பதில் தேவசித்தம்:

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய ஊழியத்திற்காக தசமபாகம். காணிக்கை பொருத்தனை, உற்சாக காணிக்கை, கொடுக்க வேண்டும்

என்பது கர்த்தரின் கட்டளை. இதற்கும் சிலர் கீழ்ப்படியாமல் கேள்வி கேட்டுக் கொண்டு தர்க்கம் பண்ணுகிறவர்களாக இருப்பது ஏன்? சுயசித்தத்திற்கு இடங்கொடுப்பதால் தான்.

ஆகையால் இதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள். கொடுக்க வேண்டும் என்கிற விருப்பம் உண்டாயிருந்தது போல உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக (IIகொரி 8:11) கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தை தேவனே நமது உள்ளத்தில் தந்திருக்கிறார். ஆனால் சுயசித்தம் கொடுக்கவிடாது. தேவசித்தத்திற்கு தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்து ஊழியத்திற்கு கொடுப்போம். எனவே சுயசித்தம் ஊழியத்திற்கு கொடுக்காது. தேவ சித்தப்படியே நடக்கிறவர்கள் ஊழியத்திற்காக சந்தோஷமாய்க் கொடுப்பார்கள். (II கொரி 8:2) சுயசித்தத்தை அழித்து தேவ சித்தம் செய்வோமாக!

## ஜெபத்தில் தேவசித்தம் :

இந்தக் காலங்களில் கர்த்தருடைய கிருபையினாலே எல்லா இடங்களிலும் உள்ள தேவ ஜனங்களுக்கு ஜெபிக்க வேண்டும் என்ற தாகம் இருக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆனால் ஜெபிப்பவர்கள் கொஞ்சப் பேர்கள்தான். காரணம் சுயசித்தம் தான். சுயசித்தம் மேலோங்கி ஒரு விசுவாசியை நடத்துமானால் ஜெபிக்க தாகம் இருந்தாலும் ஜெபிக்க மாட்டார்கள். தூக்கத்தை விட்டு எழும்ப மாட்டார்கள். எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன். (உன். 8:4) என்றார் நம் ஆண்டவர். எனவே சுயசித்தத்திற்கு இடமளிக்கும் போது இன்னும் கொஞ்சம் தூங்கட்டும் என்று சோம்பலுக்கு இடங்கொடுப்போம். ஆனால் தேவ சித்தம் செய்ய வாஞ்சை உள்ளவர்கள். சுயசித்தம் நம்மைவிட்டு விலகட்டும் என்று எழும்பி போராடி ஜெபிப்பார்கள்.

## வருகையில் தேவ சித்தம்:

இவ்விதமாக ஒவ்வொரு காரியத்திலும் சுயசித்தத்தை அழித்து தேவ சித்தம் செய்பவர்களுக்காக கர்த்தர் வருகிறார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத். 7:21) எனவே தீர்க்கதரிசனம் சொல்வதைவிட பிதாவின் சித்தம் செய்வதே மேலானது. பிதாவின் சித்தம் கர்த்தருடைய வார்த்தைகள்தான். எனவே சுயசித்தத்தை விட்டு விலகி தேவசித்தம் செய்து தேவராஜ்யம் செல்வோம்!

## தேவ சித்தத்தின் போராட்டம்

தேவ ஜனங்கள் தேவ சித்தம் செய்வதில் அனுதினமும் போராட்டங்கள் வரும். ஏனென்றால் முழு உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. எனவே தேவ சித்தம் செய்வதில் நமக்கு எதிரே வரும் போராட்டங்களைக் கவனித்து ஜெயம் எடுப்போமாக! தேவ சித்தம் செய்வோமாக!

### பரிபூரண தேவ சித்தம்: (Perfect will of God)

ஒவ்வொரு விசுவாசியின் மேலும் கர்த்தருடைய ஆவியானவர் வந்து தங்கியிருக்கிறார். மேலும் நமது ஆவியில் உள்ள உணர்வின் மூலமும் தேவனுடைய சித்தம் என்ன? என்றும் நமக்கு வெளிப்படுத்துகிறார். தேவ சித்தம் நமக்கு ஆவியில் உள்ள உணர்வின் மூலம் கிடைக்கிறது. மட்டுமல்லாமல் அந்த சித்தத்தில் நாம் நடக்கவும் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். தேவசித்தத்தை விட்டு விலகுவோமானால் ஆவியானவர் நம்மோடு போராடவும் செய்வார். பரிபூரண தேவ சித்தம் செய்பவர்கள். சூழ்நிலையைக் கவனிக்க மாட்டார்கள். சுயபுத்தியின் மேல் சார்ந்திருக்க மாட்டார்கள். இதற்கு நல்ல உதாரணம் தேவ மனிதனாகிய தாவீது தான்.

பின்பு தேவன் சவுலைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் "சித்தமானவைகளையெல்லாம்" அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார் (அப். 13:22)




II சாமுவேல் முதலாம் அதிகாரத்தைக் கவனியுங்கள். தாவீதின் எதிரியாகிய சவுல் மரித்து விட்டான். சவுலின் படைத்தளபதியாகிய

அப்னேர் ஓடி ஒளிந்துவிட்டான். பதினான்கு வருட வனாந்திர வாழ்க்கை மாறி தேசத்துக்குள் சென்று சுகமாய் வாழ ஏற்ற அனுகூலமான சூழ்நிலையும் திறந்தவாசலும் இருப்பதால் உடனே அவன் தேசத்துக்குள் போய்விடவில்லை.

தாவீது கர்த்தரை நோக்கி நான் யூதாவின் பட்டணங்களில் ஒன்றிலே போய் இருக்கலாமா? என்று விசாரித்தான் (II சாமு 2:1) தாவீது ஜெபிக்கிறான். அதற்குக் கர்த்தர் அவன் ஆவியில் உள்ள உணர்வில் அவனோடு பேசினார். கர்த்தர் "போ" என்றார். உடனே அவன் தேசத்துக்குள் ஓடிவிடவில்லை. மறுபடியும் ஜெபிக்கிறான். எவ்விடத்திற்கு போகலாம் என்று தாவீது கேட்டதற்கு திரும்பவும் தேவன் "எபிரோனுக்குப் போ" என்றார்.

இவ்விதம் தாவீது ஜெபத்தின் மூலம் தேவ சித்தத்தை அறிந்து தேவ சித்தம் செய்தபடியால் தாவீதை யூதா வம்சத்தார் ராஜாவாக அபிஷேகம் செய்தார்கள். (II சாமு. 2:4) முதலாவது யூதா கோத்திரம் மாத்திரம் தாவீதைப் பின் பற்றினார்கள். பின்பு ஏழு வருடம் கழித்து இஸ்ரவேலின் கோத்திரங்கள் எல்லாம் தாவீதினிடத்தில் வந்து சேர்ந்தார்கள். தாவீது யூதாவின் மேல் 7 வருடமும் சமஸ்த இஸ்ரவேலின் மேல் 33 வருடமும் ராஜ்யபாரம் பண்ணினான். தீர்க்காயுள்ளவனாய் வாழ்ந்து சமாதானமாய் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தான். காரணம் தேவனுடைய நன்மையும் பிரியமுமான தேவ சித்தத்தை ஜெபத்தின் மூலம் அறிந்து அதை வாழ்வில் செயல்படுத்தின படியால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்து பிதாக்களோடு சேர்க்கப்பட்டான். நாமும் பிதாவின் சித்தத்தை ஜெபத்தின் மூலம் காத்திருந்து அறிந்து அதிலே நடப்போமாக!

## மனிதனின் சுயசித்தம்: (Self Will)

மனிதனின் தலைக்கு மேலாக ஆவியானவர் தங்கி மனிதனை தேவசித்தத்தில் நடக்கத் தூண்டும்போது மனிதனின் வலது பக்கமும், இடது பக்கமும், சுயசித்தமும், பிசாசின் சித்தமும் நின்று கொண்டு நாம் தேவ சித்தம் செய்யாதபடி போராடுகிறது. சுயசித்தமும், பிசாசின் சித்தமும் நம்மோடு போராடும் போது விசுவாசிகள் மிகுந்த ஜாக்கிரதையோடு ஜெபித்து சுயசித்தத்திற்கும், பிசாசின் சித்தத்திற்கும் நம்மை விலக்கி காத்து, தேவசித்தம் செய்தால் மாத்திரமே பூரண பரிசுத்தம் அடையமுடியும். ஆவிக்குரிய வாழ்வில் வெற்றி பெற முடியும். வருகையில் நாம் காணப்பட முடியும்.

சுயசித்தத்திற்கு இடங்கொடுத்து ஆவிக்குரிய வாழ்வில் திசைமாறி ஜீவியத்தில் தோல்வி கண்டோர் ஏராளம் ஊழியத்தில் நஷ்டமடைந்தோர் அநேகர். உதாரணமாக பிலேயாமைப் பற்றிக் காண்போம். அவன் ஒரு தீர்க்கதரிசி தரிசனம் பெற்றவன். கண் திறக்கப்பட்டவன். ஆனால்

அவனுடைய வாழ்வில் சுயசித்தம் அழிக்கப்படவில்லை. எனவே அவன் பண ஆசை, பொருளாசை, இவைகளால் சோதிக்கப்பட்டான். உம்மை மிகவும் கனம் பண்ணுவேன் (எண்.22:17) என்று பாலாக் அழைத்த போது பிலேயாம் தேவசித்தத்தை விட்டு விலகினான். முதல் நாள் தேவன் பிலேயாமை சந்தித்து நீ அவர்களோடு போக வேண்டாம் என்று தெளிவாய் தமது சித்தத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் இரண்டாம் முறை பாலாக், பிலேயாமை அழைத்த போது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய பிலேயாமுக்கு மனமில்லை. இரண்டாம் முறையும் ஆண்டவரிடத்தில் விசாரித்தான். இந்த முறை தேவன் "போ" என்று உத்தரவு கொடுத்தார். ஆனால் பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படி போனபோது தேவனுக்கு கோபம் மூண்டது. கர்த்தருடைய தூதனானவர் அவனுக்கு எதிராளியாக நின்றார். (எண். 22:22) பிலேயாமின் வழி மாறுபாடாய் இருந்தது. பிலேயாமுக்கு செவி கொடுக்க "எனக்கு சித்தமில்லை" (யோசுவா 24:10) என்று தேவன் சொன்னார். எனவே பிலேயாம் இந்த இடத்தில் சுயசித்தம் செய்தான். பிதாவின் பரிபூரண சித்தம் செய்யவில்லை. எனவே ஆவியானவர் துக்கப்பட்டார். பிலேயாம் நஷ்டமடைந்தார். பிலேயாமின் ஜீவியம் மாறியது. பாதை மாறியது. ஊழியத்தை இழந்தான். எவ்வளவு பரிதாபமான முடிவு.

எனவே அருமையான தேவனுடைய பிள்ளையே உங்களுக்கு ஆத்துமாவில் வரும் சித்தத்தின் போராட்டத்தில் சுயசித்தம் செய்யாமல் பிதாவின் பரிபூரண சித்தம் செய்யுங்கள். கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார்.

## பிசாசின் வஞ்சிக்கிற சித்தம்: (Satan defiled will)

பிதாவின் பரிபூரண சித்தம் செய்ய ஆவலாய் இருக்கும் தேவனுடைய பிள்ளையே, உனக்கு விரோதமாய் போராடும் பிசாசின் வஞ்சிக்கிற சித்தத்தையும் குறித்து கவனமுள்ளவர்களாய் இருப்பீர்களாக! ஆண்டவருடைய அப்போஸ்தலர்களில் ஒருவன்தான் யூதாஸ் காரியோத்து. ஆனால் அவன் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டான் (யோ 13:2) இயேசுவை காட்டிக் கொடுக்கும்படி பிசாசு அவனைத் தூண்டினான். யூதாஸ் பிசாசுக்கு இடங்கொடுத்தான். கர்த்தர் பலமுறை எச்சரித்து சொல்லியும் யூதாஸ் "பிசாசின் சித்தத்திற்கு" இடங்கொடுத்தான் (யோ 13:27) அப்பொழுது பிசாசு அவனுக்குள் புகுந்தான். யூதாஸ் தீவிரமாய் எழுந்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி பிரதான ஆசாரியர்களிடத்தில் போனான். இயேசுவுக்காக எல்லாவற்றையும் விட்டான். இப்பொழுது பிசாசினால் ஆட்கொள்ளப்பட்ட போது 30 வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டான். யூதாசின், முடிவும் பரிதாபம்.

இதை வாசிக்கும் நண்பர்களே! பயத்துடனே அவரை சேவியுங்கள். நாம் நம்முடைய பிதாவின் சித்தம் செய்ய ஜாக்கிரதைப்படுவோமாக!

# 3 சரீரம்
# BODY

மனிதனின் திரித்துவத்தில் மூன்றாவது பகுதி சரீரமாய் இருக்கிறது. இந்த சரீரம் இப்பொழுது இருக்கும் நிலையைக் குறித்து பவுல் சொல்லும் போது இது "அற்பமான சரீரம்" என்று சொல்கிறார். (பிலிப். 3:21) ஆனால் இந்த அற்பமான சரீரம் இயேசு கிறிஸ்துவின் வருகையில் "மகிமையான சரீரமாய் மாறும்" என்கிறார். அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாக மாறுவோம். (I யோ. 3:2) என்று யோவான் கூறுகிறார்.

## 1. சிருஷ்டிப்பில் ஆதாமின் சரீரம்:

தேவனாகிய கர்த்தர் மனிதனைப் படைப்பதற்கு தன் முழு கலைத்திரனையும் (Workman ship) உபயோகித்து மனிதனைப் படைத்தார். தேவனாகிய கர்த்தர் மனிதனை பூமியின் மண்ணினால் உருவாக்கினார். (ஆதி. 2:7) நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று அவர் நினைவு கூறுகிறார்.

## 2. தேவ ரூபமுள்ள சரீரம்:

பின்பு தேவனாகிய கர்த்தர் தமது சாயலின்படியும் தமது ரூபத்தின்படியும் மனுஷனை உருவாக்குவோமாக! என்று சொன்னார். (ஆதி. 1:26). எனவே ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட போது ஆதாமின் உருவம், தோற்றம், புறம்பான அழகு தேவனைப் போன்றே இருந்தது. ஏனென்றால் ஆதாமின் அப்பா தேவனாக இருந்தபடியால் அப்பாவுக்கு மகன் தப்பாமல் அவரைப் போலவே இருந்தான். தேவன் காணக்கூடாதவர். உருவமற்றவர். ஆனால் காணப்படக்கூடிய நிலையில் தேவன் இருந்தால் எப்படி இருப்பாரோ அப்படியே ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான். ஆதாமின் தோற்றம் தேவனுடைய ரூபமாய் இருந்தது.

தேவனுடைய ரூபம் எப்படிப்பட்டது? அவர் சாரோனின் ரோஜா.

பள்ளத்தாக்கின் லீலி புஷ்பம். அவர் வெண்மையும் சிவப்புமானவர். வெள்ளையும் சிவப்பும் கலந்தால் லேசான, அழகான, ரோஜா மலரின் நிறத்தைப் போல் இருக்கும். அப்படிப்பட்ட அழகுதான் தேவனின் அழகு. எசே. 1:4லும் 1:28லும் தேவனுடைய மகிமையின் சாயலை, மகிமையின் தோற்றத்தை எசேக்கியேல் தரிசனத்தில் கண்டபோது "சொகுசாவின் நிறத்தில்" தேவன் இருப்பதாகக் கூறுகிறார். அதே ரூபத்தில் ஆதாம் படைக்கப்பட்டான்.

## 3. மகிமையின் வஸ்திரமுள்ள சரீரம்:

ஆதாம் இவ்வித அழகோடு இருக்கும்போது ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாய் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் வெட்கப்படவில்லை. ஆதாமின் நிர்வாணம் ஏவாளின் கண்களுக்கு தெரியவில்லை. காரணம் என்னவென்றால் அவர்களுடைய சரீரத்தை தேவ மகிமை மூடியிருந்தது. தேவ மகிமை அவர்களுக்கு வஸ்திரமாக இருந்தது. (ரோமர். 3:23) எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி ஏகமாய்க் கெட்டுப் போனோம் என்றார் பவுல். ஆதாம் பாவம் செய்த போது மகிமையின் வஸ்திரத்தை இழந்தான். அப்பொழுது தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து விருட்சங்களுக்குள் போய் ஒளிந்து கொண்டார்கள். எனவே தான் கடைசி காலத்திலும் ஆண்டவர் ஒரு எச்சரிப்பு கொடுக்கிறார். இதோ திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாய் நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்கிறவன் பாக்கியவான் (வெளி. 16:15) என்றார்.

## 4. வீழ்ச்சியடைந்த ஆதாமின் சரீரம்:

இவ்விதமாக மேன்மையாய் இருந்த ஆதாம் தன் பாவத்தினிமித்தம் இழிவான நிலைக்கு இறங்கிவிட்டான். பாவம் எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சியல்லவா! எனவே ஆதாம் பாவம் செய்த பிற்பாடு ஆதாமின் சரீரத்தின் மேன்மையை இழந்து போனான்.

### A. மண்பாண்டமான சரீரம்:

இந்த மகத்துவமான வல்லமை எங்களால் உண்டாயிராமல் எங்கள் தேவனால் உண்டாயிருக்கிறது என்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் (I கொரி. 4:7) என்றார் பவுல். எனவே இப்போதுள்ள சரீரம் மண்பாண்டத்தின் தன்மையைப் போன்றது. வேகமாய்த் தூக்கினால் வளையம் நம் கையோடு வந்து விடும். கவனமில்லாமல் இறக்கி வைத்தால் அடிப்பாகம் உடைந்து விடும். அதுபோல இப்போதுள்ள சரீரம் மண் பானையைப் போல் இருக்கிறது.

### B. பெலவீனமான சரீரம்:

இப்போதுள்ள நமது சரீரம் பெலவீனமான சரீரம். என்ன பெலவீனம்?

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பெலவீனமானது (மத். 26:41) என்றார் நமது ஆண்டவர் இயேசு. உலக வேலை செய்ய பெலனாகவும், திடகாத்திரமுள்ளவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவும் இருக்கிற மனிதனைப் பார்த்து ஒரு மணிநேரம் முழங்காலில் நின்று ஜெபம் செய் என்றால் அது மனிதனுக்கு முடியவில்லை. பேதுரு, யாக்கோபு, யோவான் மூன்று பேருமே தூங்கினார்கள். முழங்காலில் நின்று ஜெபிக்க முடியவில்லை. காரணம் என்ன? மாம்சம் பெலவீனமானது.

**C. ஒன்றுக்கும் உதவாத சரீரம்:** மேலும் ஆண்டவராகிய இயேசு நமது சரீரத்தைக் குறித்து சொல்லும் போது ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது (யோ. 6:63) என்றார். உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளின் சரீரமும் மரணத்திற்குப் பின்பு ஏதாவது ஒரு காரியங்களுக்குப் பயன்படுகிறது. "யானை இருந்தாலும் ஆயிரம் பொன்! இறந்தாலும் ஆயிரம் பொன்! என்ற பழமொழி உண்டு. ஆனால் மனித சரீரமோ ஒன்றுக்கும் உதவாத சரீரம். நாற்றம் எடுத்துக் கெட்டு விடும் சரீரம்.

**D. கூரை வீடாகிய சரீரம்:** நமது சரீரத்தின் மற்றொரு தன்மையைக் கவனியுங்கள். நமது சரீரம் ஒரு கூரை வீடு போன்றது என்கிறார் பவுல் (II கொரி. 5:1) பூமிக்குரிய கூடார்ரமாகிய நமது வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்தியவீடு (அழியாத சரீரம்) நமக்கு பரலோகத்தில் உண்டு. மேலும் இந்தக் கூரை வீடும் நமக்குச் சொந்தமான வீடு அல்ல. வீட்டின் சொந்தக்காரர் நமது தேவன். அவர் வீட்டைக் காலி செய் என்று நம்மிடம் சொல்லும் போது இந்த தேகத்தை விட்டு குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்ப வேண்டும் (II கொரி. 5:8) என்றார் பவுல். எனவே இப்போதுள்ள நமது சரீரம் கூரை வீடாக இருக்கிறது.

**E. பாவத்தை உண்டு பண்ணும் சரீரம்:** நமது ஊர்களில் தொழிற் பேட்டைகள் இருப்பதைக் காண முடியும். அந்த தொழிற்பேட்டையில் அநேக தொழிற்சாலைகள் இருக்கும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்வார்கள். அதுபோலவே நமது சரீரமும் ஒரு தொழிற்பேட்டைதான். இங்கு பல்வேறு பாவங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. சன்மார்க்கனாயிருந்தாலும், துன்மார்க்கனாய் இருந்தாலும் எல்லாருடைய சரீரமும் பாவத் தன்மையுள்ள சரீரம். எனவே பாவத்தைப் பிறப்பிக்கும். பாவத்தை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். எனவேதான் பவுல் சொல்வதைக் கவனியுங்கள். ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். (கொலே. 3:5) என்கிறார்.

## F. நன்மை இல்லாத சரீரம்:

இப்போதுள்ள நமது சரீரம் இன்னும் கீழான நிலையில் இருக்கிறது. அதெப்படியெனில் என்னிடத்தில் அதாவது என் சரீரத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லயென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்ய வேண்டும் என்ற விருப்பம் (உள்ளத்தில்) இருக்கிறது. ஆனால் நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை (சரீரத்தில்) என்றார் பவுல் (ரோமர். 7:18)

## G. மரண சரீரம்:

மனித சரீரத்தின் இகழ்ச்சி கடைசியாக எதுவென்றால் நமது சரீரம் மரண சரீரம். ஆதாம் பாவம் செய்த போது தேவன் அவனுக்குச் சொன்ன முடிவான வார்த்தை என்ன? நீ மண்ணாயிருக்கிறாய். மண்ணுக்குத் திரும்புவாய் (ஆதி. 3:19) என்றார். எனவே மனிதனுக்கு ஐந்திலோ, ஐம்பதிலோ, ஆறிலோ, நூறிலோ எப்போதாகிலும் மரணம் வருகிறது. எனவே மனித சரீரம் மரணத்தைத் தழுவும் சரீரமாய் இருக்கிறது. எல்லா மனிதனுடைய சரீரமும் மரணத்திற்குப் பின்பு மண்ணுக்குள் வைக்கப்பட வேண்டும்.

இவ்விதமாக மகிமையான நிலையிலிருந்து, அற்பமான நிலைமைக்கு இறங்கிவிட்ட ஆதாமின் சந்ததியின் சரீரத்தை இந்த அற்பமான நிலையை மாற்றி மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்தவே (பிலி. 3:21) இயேசு சீக்கிரம் வரப் போகிறார். உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.


## சரீரத்தின் இரட்சகர் இயேசு:

ஆதாமின் பாவத்தால் சரீரம் தன் மகிமையை இழந்ததினால் இந்த பாவ சரீரத்தின் இரட்சகராக இயேசு வெளிப்பட்டார். இயேசுவே நமது சரீரத்திற்கும் இரட்சகராய் இருக்கிறார. (எபே. 5:23) எனவே நமது சரீரத்தை இரட்சிக்கும்படி, மீட்கும்படியாக அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (Iதீமோ. 3:15). நம்மைப் போன்ற சரீரத்தை உடையவராய்ப் பிறந்தார். ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமானது (யோவான். 1:3) பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாய் இருப்பது போல் அவரும் அவர்களைப் போலானார் (எபி. 2:15). இயேசு சரீரத்தில் பிறந்து, இந்த உலகில் உலாவின போது அவர் அதரிசனமான தேவனின் தற்சொரூபமாயிருந்தார். இயேசு பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் பிறந்து, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். (ரோமர். 8:3) இவ்விதமாய் இயேசு நமது சரீரத்திற்கும் இரட்சிப்பை உண்டு பண்ணினார்.

## மீட்கப்பட்ட சரீரம்:

இயேசு கிறிஸ்து தமது சரீரத்தை சிலுவையில் பலியிட்டதினால் நமது சரீரத்திற்கும் அதன் மூலம் மீட்பு கிடைத்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர். 8:2) என்றார் பவுல். எனவே நமது சரீரத்தின் மீட்பில் இந்த வசனத்தின் மூலம் இரண்டு காரியங்களிலிருந்து மீட்பு கிடைத்திருக்கிறது என்கிறார் பவுல்.

### சரீரம்




1. பாவம்
2. மரணம்

இந்த பாவத்திற்கும், மரணத்திற்கும் இடைப்பட்ட நிலைமை வியாதியாகும். பாவத்தினால் வியாதி வருகிறது (ஆதி. 3:16) (யாக். 5:15) வியாதிக்குப் பின்பு மரணம் வருகிறது. எனவே சரீர மீட்பில் 1. பாவம் 2.வியாதி 3. மரணம் இம்மூன்றிலும் விடுதலை பெறுவதுதான் சரீரத்தின் மீட்பாகும். எனவே இந்த மூன்று நிலைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஜெயம் பெறும்போது நமது சரீரமும் பரிசுத்தமடைந்து வருகைக்கு ஆயத்தமாகிறோம்.

## 1. பாவம்:

நமது சரீரத்தில் வருகிற பாவங்களைக் குறித்து பவுல் தெளிவாய் எழுதியிருக்கிறார். மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன. (கலா. 5:19). அவையானவன. விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிர ஆராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க

பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இந்த 17 பாவமும் மாம்சத்தில் இருக்கின்றன. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள். தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை. எனவே சரீரத்தில் இருக்கும் இந்த பாவங்களிலிருந்து விலகி ஜீவிக்க கர்த்தர் வைத்திருக்கும் விடுதலையின் மார்க்கம் என்ன? அதுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, ஆவியில் நிறைந்து, ஆவியால் நடத்தப்படுவது, நீங்கள் “ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.” அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றா திருப்பீர்கள் (கலா. 5 : 16) எனவே பாவத்தை ஜெயிக்க பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வாராக!

## 2. வியாதி:

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்திலே 40 வருடம் நடந்து வந்த போது அவர்களுக்கு ஒரு பெலவீனமும் வரவில்லை. அவர்கள் கோத்திரங்களில் பெலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை. (சங். 105:37). தேவன் தனது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார் (சங். 107:20) இஸ்ரவேலரின் ஊழியக்காரன் மோசே நமக்கு ஒரு சவாலாக இருக்கிறார். தன்னுடைய 120வது வயதில் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான். மலையில் ஏற மோசேக்கு எவ்வளவு பெலன் இருந்திருக்க வேண்டும். சில மைல்களுக்கு அப்பால் உள்ள கானான் தேசத்தை அவன் பார்த்தான் (உபா. 33:2,3) அப்படியானால் அவன் கண்கள் எவ்வளவு பிரகாசமுள்ளதாய் இருந்திருக்க வேண்டும். மோசே மரிக்கிற போது நூற்றிருபது வயதாயிருந்தான். அவன் கண் இருளடையவும் இல்லை. அவன் பெலன் குறையவும் இல்லை. அல்லேலூயா! இவ்வளவாய் சுகத்தையும் பெலத்தையும் உடையவனாய் மோசே வாழ்ந்ததற்கு எது உதவியது. தேவ வசனந்தான் (சங். 107:20). எனவே இயேசு நமது நோய்கள் எல்லாம் குணமாக்குவார். நமது பிராணனை அழிவுக்கு விலக்குவார். வசனத்தைப் பற்றிக் கொள்ளுங்கள் அல்லேலூயா.

## 3. மரணம்:

கடைசியாக நமது சரீரத்தை மரணம் சந்திக்கிறது. மரணம் என்பது தேவ பிள்ளைகளின் சத்துருவாயிருக்கிறது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் (I கொரி 15:26). ஆதாமின் பாவத்தின் தண்டனைதான் மரணம். எனவே பாவத்திலிருந்து நாம் இரட்சிக்கப்படும் போது மரணத்திலிருந்தும் நாம் மீட்கப்படுவோம்.

மரணத்தை ஜெயிக்க முதலாவது நாம் மரணத்தை விரும்பக் கூடாது. மரணத்தை வெறுக்க வேண்டும். பிதா குறித்த வேளை வரும்போது அவரே நம்மை அழைத்துக் கொள்வார். ஆனால் அதற்கு முன்பு “போதும் கர்த்தாவே என் ஜீவனை எடுத்துக் கொள்ளும்” என்று எலியாவைப் போல்

ஜெபிக்கக் கூடாது (I இராஜா 19:4). நான் சாகவேண்டும் என்று எலியா சொன்னது போல் நாம் சொல்லக்கூடாது.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் பிறந்த போது எதற்காய் பிறந்தார்? அநேகரை மீட்கும் பொருட்டாக தமது ஜீவனைக் கொடுக்கவே வந்தார். ஆனால் ஐந்து முறை மரணம் அவரை நெருங்கி வந்தது. அந்த ஐந்து முறையும் மரணத்தை விட்டு விலகிப் போனார்.

1. இயேசு குழந்தையாய் பிறந்தபோது ஏரோது அவரைக் கொலை செய்யும்படி சட்டம் பிறப்பித்தான் (மத். 2:20) யோசேப்பு தூதனால் எச்சரிக்கப்பட்டு ஓடிப் போனார். இவ்விதம் இயேசு மரணத்திற்கு விலகி தன்னைத் தப்புவித்துக் கொண்டார்.

2. இயேசு தன்னுடைய 30வது வயதில் ஊழியத்தைத் தொடங்கும்போது பிசாசு அவரை பரிசுத்த நகரத்திற்கு கொண்டு போய் தேவாலயத்து உப்பரிக்கையின் மேல் நிறுத்தி நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும் (மத். 4 : 6) என்றான். இயேசு உடனே குதித்து விடவில்லை. இயேசு பிசாசை அதட்டினார். அப்பாலே போ சாத்தானே! என்று சொன்னார். இவ்விதம் இயேசு மரணத்திற்கு விலகினார்.

3. இயேசு தமது ஊழியத்தின் மத்தியில் கப்பர் நகூம் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தபோது ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும் கோபமூண்டு எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளி விடும்படிக்கு அவ்விடத்திற்கு கொண்டு போனார்கள். (லூக். 4:28,30) அவரோ அவர்கள் நடுவினின்று கடந்து போய் விட்டார். ஏன் அப்படி செய்தார்? அநேகரை மீட்கும் பொருளாக தமது ஜீவனைக் கொடுக்க வந்தவர் ஏன் மரணத்திற்கு விலகிப் போனார். பிதாவாகிய தேவன் குறித்த காலம் வரைக்கும், குறித்த இடம் வரைக்கும் இயேசு மரணத்தை விரும்பவில்லை. மரணத்தை விட்டு விலகிப் போனார்.

4. இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட வேண்டிய சில நாளுக்கு முன்பு நடந்ததைக் கவனியுங்கள். இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினபடியால் அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார். இங்கேயும் இயேசு யூதேயா என்ற மாவட்டத்தை விட்டு விட்டு கலிலேயா என்ற மாவட்டத்திற்கு (யோவான். 7:12) போனார். யூதர்கள் அவரைக் கொலை செய்யத் தேடுகிறார்கள் என்று அறிந்த போது அவர் மரண சூழ்நிலையை விட்டு விலகி தன்னை தப்புவித்துக் கொண்டார்.

5. கடைசியாக இயேசு கெத்செமனே தோட்டத்தில் ஜெபிக்கும் போது அவர் யாரை நோக்கி ஜெபித்தார். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள பிதாவை நோக்கி

(எபி.5:7) பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார். அந்த விண்ணப்பம் என்ன? இந்த பாத்திரம் (மரணம்) என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல. உமது சித்தத்தின்படி ஆகக்கடவது என்று சொல்லி ஜெபித்தார் (மத். 26:39). எனவே இந்த ஐந்தாம் முறையும் மரணத்திற்கு விலகவே ஜெபித்தார். மரணத்திலிருந்து இரட்சிக்க வல்ல பிதாவை நோக்கி ஜெபித்தார்.

ஆனால் வேளை வந்தது என்று அறிந்த போது, பிதாவே உமது சித்தத்தின்படியே எனக்கு ஆகக்கடவது என்று தன்னை ஒப்புக் கொடுத்தார். சிலுவையில் மரித்தார். எனவே அவர் மரணத்தைப் பரிகரித்தார். (I தீமோ. 1:10) மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தவர்களில் முதற்பலனானார். (I கொரி 15:20).

## மரணத்தை பரிகரித்தல் :

இயேசு கிறிஸ்து மரணத்தை வென்றதைப் போல் நமக்கும் மரணத்தின் மேல் ஜெயம் உண்டு என்று இயேசு சொல்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்." (யோவான். 11:25,29) என்றார். இங்கே மரணத்தை ஜெயிக்கும் இரண்டு கூட்டத்தார் உண்டு.

1. மரணத்திற்குப் பின்பு இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாளில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (I தெச. 4:16) என்ற முதலாவது கூட்டம் மரித்தாலும் பிழைப்பான் என்ற கூட்டம். இவர்களும் மரணத்தை பரிகரிக்கிறார்கள்.

2. இரண்டாவதாக உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவரோடு கூட எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் என்று (I தெச 4:17) சொல்லும். "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன்" என்று மரணத்தைப் பரிகரிக்கும் இரண்டாவது கூட்டம் ஆமென். அல்லேலூயா!

எனவே நாம் மரணத்தைப் பரிகரித்து இயேசுவின் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று விசுவாசிப்போமாக! விசுவாசிக்கிறவன் பாக்கியவான். விசுவாசிக்கிறவன் பதறான். விசுவாசிக்கிறவன் மரணத்தைப் பரிகரிப்பான்.

சமாதானத்தின் தேவன் தாமே உன்னை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக! உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக! உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார் (I தெச. 5:23,24)

# 4 ஆத்துமாவின் வியாதியும் விடுதலையும்

தேவ கிருபையினால் நமது ஆத்துமா பரிசுத்தமடைந்து வாழ்ந்திருக்கும் போது பொறாமைக்காரனாகிய சாத்தானுக்கு அது பிடிப்பதில்லை. நமது ஆத்துமாவைத் தாக்க வருகிறான்.

கர்த்தாவே என்மேல் இரக்கமாயிரும். உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன். என் ஆத்துமாவைக் குணமாக்கும் என்று தாவீது ஜெபித்தான் (சங் 42:4) சரீரத்தில் வியாதி வந்து அதைக் கவனிக்காத பட்சத்தில் மரணம் சம்பவிப்பது போலவே ஆத்துமாவில் வியாதி வரும்போது அதை உடனடியாக கவனித்து அப்புறப்படுத்தாவிட்டால் பாவம் செய்கிற ஆத்துமா சாகும் (எசே 18:4,20) என்று தேவன் எச்சரிப்பு விடுத்துள்ளார். எனவே ஆத்துமாவுக்கு வரும் வியாதிகளையும் அதிலிருந்து சுகமடைவது எப்படி என்பதையும் காண்போம்.

யோசேப்பு இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. யோசேப்புக்கு ஆவிக்குரிய தரிசனம் இருந்தது. தேசத்துக்கு ராஜாவாகவும், குடும்பத்துக்கு தலைவனாகவும், மேய்ப்பனாகவும் உயர்த்தப்படுவான் என்பது யோசேப்புக்கு தேவன் கொடுத்த அழைப்பும், தரிசனமுமாகும்.

ஆனால் சாத்தான் யோசேப்புக்கு விரோதமாய் எழும்பினான். தகப்பனும் தாயும் யோசேப்பைக் கடிந்து கொண்டார்கள். சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள். கொலை செய்ய திட்டமிட்டார்கள். தண்ணீர் இல்லாத வெறுங்குழியில் போட்டார்கள். 20 வெள்ளிக் காசுக்கு மீதியானியரிடத்தில் விற்றார்கள். போத்திபார் வீட்டில் பொய்க்குற்றம் சாட்டப்பட்டான் அதினிமித்தம் யோசேப்பு காவல் கிடங்கில், சிறைச்சாலையில் தள்ளப்பட்டான். 13 வருடங்கள் சிறையில் அவன் பிராணன் அடைபட்டுக் கிடந்தது. யோசேப்பின் தரிசனம் நிறைவேறாதபடி சாத்தானின் தந்திரமான செயலே இது. ஆனால் கர்த்தர் உண்மையுள்ளவர். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர். அதை நிறைவேற்ற

வல்லவராயிருக்கிறார்.

1. யோசேப்பின் **"பிராணன்"** இரும்பில் அடைபட்டுக் கிடந்தது. (சங்.105:18). (Body - he laid in to the iron KJ)

2. யோசேப்பின் **"ஆத்துமா"** இரும்பில் அடைபட்டுக் கிடந்தது என்று டல்மட் என்று வேத பிரதி கூறுகிறது. His soul put in to the chains of iron. சங் 105:18.

3. இரும்பு - யோசேப்பின் **"ஆத்துமாவிற்குள்"** சென்றது என்று ஆம்பிளிபயர்டு பைபிள் கூறுகிறது. The iron came into the soul. சங். 105:18).

எனவே மூன்று விதமாக யோசேப்பு இருப்பு சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடந்தான். மனிதர் பார்வையில் ஒரு சிறைச்சாலைதான். ஆனால் தேவனுடைய பார்வையிலும், யோசேப்பின் அநுபவத்திலும் மூன்று வித இரும்பு விலங்குகள் அவனை அடைத்து வைத்திருந்தது.

இந்த மூன்று வித இரும்பு சிறைச்சாலையையும் உற்றுக் கவனித்தால்,

1. இரும்பு "சிறைச்சாலையில்" அடைக்கப்பட்டான்
2. இரும்புச் "சங்கிலிகளால்" கட்டப்பட்டான்.
3. இரும்பு "அம்புகள்" அவன் ஆத்துமாவில் பாய்ந்திருந்தது.

இந்த இரும்பு சிறைச்சாலையும், இரும்பு சங்கிலிகளும், இரும்பு அம்பும் யோசேப்பின் ஆத்துமாவைத் தாக்கிய மூன்றுவித "ஆத்துமா வியாதியைக்" குறிக்கிறது.

1. இரும்புச் சிறைச்சாலை - மனவருத்தம் - ஆதி 41:50,51
2. இரும்பு விலங்குகள் - மனவியாகுலம் - ஆதி 42:21 ஆதி 41:51
3. இரும்பு அம்பு - மன மடிவு - ஆதி 49:22, எபே 6:16

### ஆவியின் விடுதலை:

யோசேப்பின் ஆத்துமாவை வியாதி தாக்கினாலும் யோசிப்பின் ஆவியை எந்த வியாதியும் தாக்கவில்லை. காரணம், அவன் ஆவியில் கர்த்தர் இருந்தார். போதிப்பார் வீட்டிலும், தண்ணீர் இல்லா குழியிலும், எகிப்தின் சிறைச்சாலையிலும், கர்த்தர் அவனுடனே இருந்தார். கர்த்தர் யோசேப்போடு இருந்தார் என்ற வார்த்தை ஐந்து முறை சொல்லப்பட்டுள்ளது. (ஆதி. 39:2, 39:21, 39:23, அப். 7:10) யோசேப்பின் ஆவியில் கர்த்தர் இருந்தபடியால் யோசேப்பின் ஆத்தமாவிற்குள் பாய்ந்த பிசாசின் அக்கினி அம்பு அவனைச் சேதப்படுத்த முடியவில்லை. யோசேப்பின் ஆத்துமாவை கட்டியிருந்த சங்கிலி உடைக்கப்பட்டது. யோசேப்பின் பிராணன் (சரீரம்) அடைபட்டுக் கிடந்த சிறைச்சாலையின் கதவு திறக்கப்பட்டது. அல்லேலூயா! தேவனோ அவனுடனே கூட இருந்து

எல்லா உபத்திரவத்தினின்றும் அவனை விடுவித்தார்.

## ஆத்துமாவின் விடுதலை:

தேவ பிள்ளைகளின் ஆத்துமாவைத் தாக்கும் ஆத்துமாவின் வியாதிகளான மனவருத்தம், மனவியாகுலம், மனமடிவு ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற, சுகம் பெற ஆத்துமாவைத் தேற்றி (Restore the soul புதுப்பித்து) என்று சங்கீதம் சொல்கிறது. தேவன் ஆத்துமாவை எப்படி சுகமாக்குகிறார்? எப்படி புதுப்பிக்கிறார்? அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் (வசனம்) மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் (பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில்) விடுகிறார். இவ்விதம் வசனத்தினாலும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நமது ஆத்துமா சுகமடைகிறது.

யோசேப்புக்கும் இந்த இரண்டு ஆவிக்குரிய மருந்து இருந்தது. சிறைச்சாலைக்குள் யோசேப்பு இருந்த போது கர்த்தர் சொன்ன "வார்த்தை" நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது (சங். 105:19) சிறைச்சாலைக்குள் இருந்த போதும், அதை விட்டு வெளியே வந்த பின்பும் "தேவ ஆவியைப்" பெற்ற இந்த மனுஷனைப் போல் வேறொருவன் உண்டோ என்று பார்வோன் சொன்னான் (ஆதி 41:36) எனவே யோசேப்புக்கு வசனமும், பரிசுத்த ஆவியானவரும் உதவி செய்தார்கள். அந்த 13 வருட சிறைச்சாலையின் அநுபவங்கள் அவனை வருங்கால வாழ்வுக்கு பக்குவப்படுத்தின. அவன் ஆத்துமா விடுதலை பெற்றது.

### 1. மனவருத்தம் :

யோசேப்புக்கு மனவருத்தம் வருவதற்கு போத்திப்பாரும் அவன் மனைவியும் காரணமாக இருந்தார்கள். யோசேப்பு விபசாரக்காரன் என்ற பொய்க் குற்றச்சாட்டு அவனுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. மனதாலும் பாவம் செய்யாத யோசேப்பு மிகுந்த வருத்தம் அடைந்தான். சிறைச்சாலையில் இருக்கும் ஒவ்வொரு கைதிகளும் படு பாதகங்களைச் செய்து ஆக்கின அடைந்த சிறைக்குள் வாடினார்கள். ஆனால் யோசேப்போ ஒரு பாவமும் செய்யாமல் சிறையில் வாடினான். (ஆதி. 40:15) யோசேப்பிடம் மற்ற கைதிகள் "நீ என்ன தவறு செய்து இந்த சிறைச்சாலைக்கு வந்தாய்? என்று கேட்டால் அவன் மனது எவ்வளவாய் வேதனைப்பட்டிருக்கும். 17 வயது சிறுவனாகிய யோசேப்பு என்ன பாதகத்தைச் செய்திருக்க முடியும்! அந்தோ 13 வருடங்களாக சிறையில் அவன் மனவருத்தத்தோடு இருந்தான்.

ஆனால் தேவ வசனமும் தேவ ஆவியும் அவனுடனே இருந்தபடியால் அவன் ஆத்துமா தேற்றப்பட்டது. புதுப்பிக்கப்பட்டது. சுகமடைந்தது. அவன் ஆத்துமாவை தாக்கிய மனவருத்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டான். சிறைச்சாலையை விட்டு வெளியே வந்தான்.

பார்வோன் யோசேப்புக்கு திருமணத்திற்காக ஒரு பெண் பார்த்தான். அவள் ஆஸ்நாத்து என்பவள். ஆஸ்நாத்து என்றால் தேவதை என்று பொருள். தேவதை போன்ற அழகான பெண் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டாள். ஆஸ்நாத்தின் அப்பா பெயர் போத்திபிரா. போத்திபிரா என்பது போத்தி பார் என்ற பெயரை ஞாபகப்படுத்தியது. ஆனால் யோசேப்பு தன் பழைய நினைவுகளால் தாக்கப்பட்டு மறுபடியும் மனவருத்தத்திற்கு இடங்கொடுத்து திரும்பவும் அவனுடைய ஆத்துமா சங்கிலிகளால் கட்டப்பட இடங்கொடுக்கவில்லை. யோசேப்பு, போத்திபார் வீட்டார் மூலம் வந்த வருத்தம் யாவையும் மறந்தான். ஆகையினால்தான் தன் சத்துருவின் பெயரை ஞாபகப்படுத்தும் தன் மாமனாரின் பெயரை யோசேப்பால் ஏற்றுக் கொள்ள முடிந்தது. ஆஸ்நாத்தும் மனாசேயைப் பெற்ற போது என் வருத்தம் யாவையும் தேவன் மறக்கும்படி செய்தார் என்றாள். எனவே கடந்த கால வேதனையான சம்பவங்களையும், வேதனைப்படுத்திய மனிதர்களையும் "மறப்பது" ஆத்துமாவுக்கு தேவன் தரும் அருமருந்து. அல்லேலூயா!

## 2. மன வியாகுலம்:

யோசேப்பு தன் தகப்பன் வீட்டார் மூலமும், தன் சகோதரர் மூலமும் மனைவியாகுலம் அடைந்தான். ஆனால் சிறைச்சாலையை விட்டு வெளியே வந்த பின்பு "என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் மறக்கும்படி தேவன் செய்தார்" என்றான் (ஆதி 41:51). யோசேப்பு கெஞ்சி வேண்டிக் கொண்ட போது அவனுடைய "மன வியாகுலத்தைக்" கண்டும் அவனுடைய சகோரர்கள் அவனுக்குச் செவி கொடாமற் போனார்கள் (ஆதி.42:21). இவ்வளவாய் துரோகம் செய்து, யோசேப்பு சாகட்டும் என்று அவன் சகோதரர்கள் செயல்பட்டார்கள். யோசேப்பு மரித்து விட்டான் என்று தகப்பனாகிய யாக்கோப்புக்கு அறிவித்தார்கள். போத்திபார் வீட்டார் யோசேப்புக்கு "பொய்க்குற்றம்" சாட்டினார்கள். யோசேப்பின் தகப்பன் வீட்டார் யோசேப்பைப் பற்றி "பொய்ப்பிரச்சாரம்" செய்தார்கள். அந்தோ! பரிதாபம். யோசேப்பு மனவியாகுலம் அடைந்தான். தேவன் "வசனத்தினாலும், ஆவினாலும்" அவனைத் தேற்றினார். அவன் ஆத்துமாவைப் புதுப்பித்து சுகமாக்கினார். மனவியாகுலத்திலிருந்து விடுதலை பெற்றான்.

தகப்பன் வீட்டார் செய்த அத்தனை துரோகங்களையும் பொய்க் குற்றச் சாட்டுகளையும் மன்னித்தான். எனவே பஞ்சத்தில் யோசேப்பின் சகோதரர் தானியம் கேட்டு வந்த போது தன் சகோதரர்களைப் பழிவாங்கவில்லை. பதிலாக அவர்களுக்கு போஜனம் கொடுத்தான். தானியம் கொடுத்தான். பண முடிப்பையும் சாக்கிலே வைத்து அனுப்பினான். முடிவாக தகப்பன் வீட்டார் எழுபது ஆட்களையும் பஞ்சத்திலே உயிரோடு காத்து எகிப்பதிற்கு அழைத்து கோசேன் என்னும் செழிப்பான இடத்திலே குடியேற்றினான்.

இவ்வளவு நன்மைகளையும் யோசேப்பு தன் தகப்பன் வீட்டாருக்கு எப்படிச் செய்தான்? யோசேப்பின் ஆத்துமாவில் இருந்த "மனவியாகுலம்" என்ற வியாதிலிருந்து விடுதலைப் பெற்றிருந்தான். சகோதரர்களின் துரோகங்களை மன்னித்து விட்டான். எனவே மறப்பதும், மன்னிப்பதும் ஆத்துமாவுக்கு சுகத்தை உண்டாக்கும்.

### 3. மனமடிவு:

ஆத்துமாவைத் தாக்கும் மூன்றாவது வியாதி மனமடிவு. இதுவே மிகவும் ஆபத்தானது. ஏனென்றால் இந்த மனமுடிவு மனிதர்களிடத்தில் இருந்து வந்து நம்மைத் தாக்குவதில்லை. நேரடியாகக் பிசாசின் அந்தகார சக்திகள் யோசேப்பை தாக்கின. வில்வீரர் யோசேப்பை மனமடிவாக்கினார்கள். அவன் மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். (ஆதி 49:22) பிசாசு தன் அக்கினியாஸ்திரங்களை தேவபிள்ளைகளின் ஆத்துமாவில் எய்கிறான் என்று பவுல் சொல்லுகிறார். எபே. 6:16. இவ்விதம் பிசாசு தன் சோதனை என்னும் வில்லில், மனமடிவு என்னும் அம்பை வைத்து எய்து யோசேப்பைத் தாக்கினான். அம்பு அவன் ஆத்துமாவில் பாய்ந்தது.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் நல்லவர். சோதனையில் இருந்து தப்பிக் கொள்ளும்படியான போக்கை உண்டாக்குவார். தேவ வசனமும், தேவ ஆவியும் யோசேப்புக்கு ஆத்துமாவின் மருந்தாக இருந்தது. ஆத்துமா தேற்றப்பட்டது. புதுப்பிக்கப்பட்டது. சுகமடைந்தது. எனவே பிசாசு அவனை மனமடிவாக்கினாலும், யோசேப்பின் வில் உறுதியாய் இருந்தது. யோசேப்பின் மனது உறுதியாக இருந்தது. (ஆதி. 49:24) எனவே சோர்வடைந்து கிருபையை நஷ்டப்படுத்திவிடவில்லை.

இதை வாசிக்கும் தேவ பிள்ளைகளே! உங்கள் மேல் இப்பொழுது ஆவியானவர் இறங்குவார்! தேவ வசனம் உங்களைத் தேற்றட்டும். உங்கள் ஆத்துமாக சுகமடையட்டும். யோசேப்பு மனவடியாய் சேதப்படாமல் தன்னைக் காத்துக் கொண்டதால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான். யோசேப்பு பரலோகத்தின் ஆசீர்வாதங்களாலும், பூலோகத்தின் ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிக்கப்பட்டான். (ஆதி. 49:25)

### 4. ஆத்தமாவின் பெலன்:

யோசேப்பு மகா புத்திசாலி. அவன் ஆத்துமா சுகம் பெற்றது மட்டுமல்ல. ஆத்துமா பெலனடைந்தது. இரண்டாவது பிறந்த மகனுக்கு எப்பிராயீம் என்று பெயரிட்டான். எப்பீராயீம் என்றால் கனி கொடுப்பேன் என்று பொருள். கடந்த காலத்தை மறப்பது மாத்திரமல்ல, வருங்காலம் எனக்கு பிரகாசமாயிருக்கும் என்ற சிந்தனையை தன் மனதில் பதிக்கும்படியாக எப்பீராயீமை அழைக்கும் ஒவ்வொரு நேரமும் "நான் கனி கொடுப்பேன், நான் கனி கொடுப்பேன்" என்ற பிரகாசமான சிந்தனையை, விசுவாச எண்ணங்களைத் தன் மனதிற்குள் கொண்டு வந்தான். யோசேப்பின்

விசுவாச எண்ணங்களின் படியே அவன் தன் ஜீவியம் முழுவதும் ஆசீர்வதிக்கப்பட்டான். எப்பீராயீம் பெயருக்குத் தக்கபடியே ஆசீர்வதிக்கப்பட்டான். யாக்கோபு தன் பேரப்பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது எப்பீராயீமை முன்னால் வைத்து ஆசீர்வதித்தார்.

எனவே ஆத்துமாவின் சுகத்திற்காக மறப்பதும், மன்னிப்பதும் மன உறுதியும் யோசேப்புக்கு மருந்தாக இருந்தது மாத்திரமல்ல யோசேப்பு தன் மனதின் விசுவாச எண்ணங்களால் தன் ஆத்துமாவைப் பெலப்படுத்தினான். அல்லேலூயா!

யோசேப்பு உதவி செய்த கர்த்தர் உங்களுக்கும் உதவி செய்வார். உங்கள் கட்டுகளை உடைப்பார். சிறைச்சாலையைத் திறப்பார். தேவன் உங்களை உயர்த்துவார்! ஆமென்.

# 5 ஆவியினால் நடத்தப்படுங்கள்

பழைய ஏற்பாட்டு தேவ ஜனங்களை நம்முடைய தேவனே நடத்தினார். அவர்கள் எகிப்து என்ற பழைய தேசத்தை விட்டுவிட்டு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்தை நோக்கி கர்த்தரால் நடத்தப்பட்டார்கள். (உபா. 32:12) அவர்களை நடத்துவதற்கு அவர்களுக்கு முன்னாக பகலில் மேக ஸ்தம்பத்தையும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தையும் தேவன் அனுப்பினார். (யாத். 13:21,22). அதைப் பின்பற்றி அவர்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள்.

இன்று புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாய் வாழ்கின்ற நம்மை வழிநடத்த பரிசுத்த ஆவியானவரை தேவன் நமக்குத் தந்தருளினார். திரித்துவத்தின் மூன்றாம் ஆளாகிய பரிசுத்த ஆவியானவர் நம்முடன் இருந்து நம்மை செவ்வையான பாதையில் நடத்தி ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கச் செய்து தேவ சித்தத்தின் படியான வாழ்க்கை வாழ்ந்து முடிவிலே நித்திய மகிமையில் பிரவேசிக்க பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார்.

**எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.(ரோம 8:14)**

என்று பவுல் அப்போஸ்தலன் ரோமர் நிருபத்தில் இந்த சத்தியத்தை தான் வலியுறுத்தி எழுதுகிறார். மனிதனுக்குள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று பிரிவுகளாக மனிதன் இருக்கிறான் என்று நாம் ஏற்கனவே தெளிவாக அறிந்துள்ளோம். இந்த மூன்று பிரிவுகளுக்குள்ளும் மனித வாழ்க்கை நடத்தப்பட வாய்ப்பிருக்கிறது.

ஆனால் பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்தும் போது மனிதனின் ஆவியில் உள்ள உணர்வின் மூலம் தமது சித்தத்தை வெளிப்படுத்தி வழிநடத்துகிறார். ஆனால் அதற்கு எதிராக மனிதன் தன் ஆத்துமாவை கொண்டும் நடத்தப்படுகிற அபாயம் உண்டு. தன் சரீரத்தாலும் வழிநடத்தப்படுகிற அபாயமும் உண்டு. எனவே தான் நாம் தேவ

ஆவியினால் நடத்தப்படும் போது மட்டுமே நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று கர்த்தர் கூறுகிறார்.

கொரிந்திய சபையிலே மூன்று விதமான விசுவாசிகள் இருந்ததாகவும் அவர்களை மூன்று விதமான ஆவிகள் வழிநடத்தியதாகவும் நாம் காண்கிறோம்.


1. ஆவிக்குரிய விசுவாசிகள் - இவர்கள் தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள். (1கொரி. 3:1; 1கொரி. 2:12)

2. ஜென்ம சுவாபம் உள்ள விசுவாசிகள் - மனுஷ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் (1கொரி. 2:14; 1கொரி. 2:11)


3. மாம்சத்துக்குரிய விசுவாசிகள் - உலகத்தின் ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் (1கொரி. 3:2; 1 கொரி. 2:12)

மனிதனுக்குள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பிரிவுகள் அடங்கிய மனிதனாக இருக்கிறபடியால் இந்த மூன்றினாலும் நடத்தப்பட நமக்குள் சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் நீங்கள் உங்கள் சரீரத்தால் நடத்தப்படக்கூடாது. உங்கள் ஆத்துமாவினாலும் நடத்தப்படக் கூடாது. உங்கள் ஆவியில் உள்ள உணர்வினால் நடத்தப்பட வேண்டும். இதை விளங்கிக் கொள்ள அடுத்த பக்கத்தில் உள்ள படத்தை கவனிக்கவும்.

**<u>கொரிந்திய சபையில் உள்ள மூன்று ஆவிகள்:</u>**



## கொரிந்திய சபையில் உள்ள மூன்று வித மக்கள்:




எனவே இந்த உலகில் மூன்று வித ஆவிகள் உண்டு. இவைகள் முறையே தேவ ஆவியானவர் நமது உள்ளான ஆவியுடன் தொடர்பு கொள்கிறார். மனுஷ ஆவி நமது ஆத்துமாவுடன் தொடர்பு கொள்ள கூடியது. இந்த உலகத்தின் ஆவி நமது சரீரத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியது. நீங்கள் தேவ ஆவியினால் நடத்தப்பட விரும்பினால் உங்கள் உள்ளான ஆவியானது தேவ ஆவியோடு இணைந்து செயல்பட வேண்டும்.

தேவன் ஒழுங்குள்ளவர். நமக்கு தேவ ஒழுங்குகளை வகுத்து தந்துள்ளார். தேவன் தமது ஒழுங்குகளை மீற மாட்டார்.

சாத்தான் ஒழுங்கீனமானவன். அவன் குழப்பத்தின் ஆவியை உடையவன். தேவனுடைய ஒழுங்குகளுக்கு எதிராக நாம் செயல்படும் படி நம்மை தூண்டிவிடுகிறான்.

உதாரணமாக ஒரு உயர் நிலை பள்ளியை எடுத்துக் கொள்வோம். அதை நடத்துவதற்கு முதலாவது தலைமை ஆசிரியரும் அவருக்கு உதவியாக முதுகலைப் பட்டத்தாரி ஆசிரியர்களும் இருந்து அந்த பள்ளியை நடத்துகிறார்கள். இவர்கள் இடுகிற கட்டளைகளை நிறைவேற்றும்படியாக வேலைக்காரர்களும், எடுபிடி ஆட்களும் இருக்கிறார்கள்.

தலைமை ஆசிரியர் Head Masters
↓
முதுகலை பட்டதாரிகள் BT Assistants
↓
வேலைக்காரர்கள் Clerks, Peuon,Watchman

இந்த ஒழுங்கின் படி ஒரு பள்ளிக்கூடம் இயங்கும் போது எல்லாம் ஒழுங்கும் கிரமுமாக இருக்கிறது. அதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை முதலாவது தலைமை ஆசிரியர் தீர்மானிக்கிறார். இவர் தன் தீர்மானத்தை தனக்கு கீழ் இயங்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கூறுவார். பின்பு அவர்கள் கூறுவதை எழுத்தாளர்களும், எடுபிடி ஆட்களும் செயல்பட வேண்டும். அப்பொழுது எல்லாம் ஒழுங்கும் கிரமமும் ஆசீர்வாதமாக இருக்கும்.

அதற்குமாறாக எடுபிடி ஆட்கள் தாங்கள் நினைத்தபடியெல்லாம் மணி அடிப்பதும், வகுப்பறைகளை பூட்டுவதும், திறப்பதுமாக இருந்தால் அப்படிப்பட்ட பள்ளிக்கூடம் ஒழுங்காக இயங்க முடியாது. அங்கு படிக்க வரும் மாணவர்களுக்கு ஆசீர்வாதமான பள்ளியாக அது இயங்க முடியாது.

இதேபோல் தான் நமது மனித வாழ்க்கையும் இருக்கிறது. தேவ ஆவியானவர் முதலாவதாக நமது ஆவிக்கு வெளிப்பாடுகள் கொடுப்பார். நமது ஆவியில் கிடைத்த வெளிப்பாடுகளை, நமது ஆத்துமாவிற்கு கட்டளையாக நமது ஆவி கட்டளையிட வேண்டும். நமது ஆத்துமாவுக்கு வந்த கட்டளைகளை நமது சரீரம் நிறைவேற்ற வேண்டும். இதுதான் தேவ ஆவியினால் நடத்தப்படுகிற வாழ்க்கையாகும்.

ஆனால் நமது சரீரத்தில் உண்டாகும் சில சோதனைகளை, சில இச்சைகளை நமது சரீரம் நமது ஆத்துமாவுக்கு சொல்லி அவைகளை நமது ஆத்துமா ஏற்றுக் கொண்டு செயல்படுமானால் நமது ஆவி பாதிப்புகுள்ளாகிவிடும். அப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கெட்டுப் போய் உள்ளான மனுஷனில் இருள் தங்கிவிடும். இப்படிப்பட்ட மனுஷ வாழ்க்கையில் எல்லாம் தாறுமாறும் குழப்புமான காரியங்கள் சம்பவிக்கும்.

எனவே தான் நாம் தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டும். இந்த கருகலான சத்தியத்தை விளங்கிக் கொள்ள தாவீது ராஜாவின் வாழ்க்கையிலே சம்பவித்த மூன்று சம்பவங்களை வைத்து தேவ ஆவியினால் நடத்தப்படுவது எப்படி என்ற சத்தியத்தை விளங்கிக் கொள்வோமாக.

## 1. உலகத்தின் ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்:

உலகத்தின் ஆவி என்பது இந்த உலகத்திலிருந்து வரக்கூடிய எல்லா செயல்களுமாகும். உலகத்தின் ஆவி மிக எளிதாக நமது சரீரத்தை தாக்கக் கூடியது. நாம் எவ்வளவு வளர்ந்த பரிசுத்தவான்களாகவும், விசுவாசிகளாகவும் இருந்தாலும் இந்த உலகத்தின் ஆவி நம்மை தாக்குவதற்கு சாத்தியம் உண்டு. தாவீது ராஜா சுமார் ஐம்பது வயதை தாண்டிய பிற்பாடு உலகத்தின் ஆவியினால் தாக்கப்பட்டார். அவருடைய இளமை காலத்திலும், வாலிப நாட்களிலும் இந்த உலகத்தின் ஆவி

தாக்கியதை விட அவருடைய முதுமை நாட்களில் தான் அதிகமாக அவரை தாக்கிற்று.

இதை 2 சாமுவேல் 11ம் அதிகாரத்திலே தெளிவாக வாசிக்கிறோம். உலகத்தின் ஆவியினால் தாக்கப்படுவதை தெளிவாக விளங்கிக் கொள்ள இந்த 11ம் அதிகாரம் முழுவதையும் நிதானமாக முழுமையுமாக வாசியுங்கள்.

ஒரு நாள் சாயங்காலத்தில் தன் படுக்கையிலிருந்து எழுந்து அரண்மனையின் உப்பரிக்கையின் மேல் உலாத்திக் கொண்டிருக்கும் போது ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின் மேலிருந்து கண்டான். அந்த ஸ்திரீ வெகு சௌந்தரியவதியாயிருந்தாள். (2சாமு. 11:2)

1. சாயங்காலப் படுக்கை சரீர சுகத்திற்குரியது.
2. உப்பரிகையில் உலாவுதல் சரீரத்திற்கு இதமானது.
3. ஸ்நானம் பண்ணுகிற ஸ்திரீயைப் பார்த்தான் - கண்களின் இச்சை
4. அந்த ஸ்திரி சௌந்தரியவதியாயிருந்தாள் - கண்களின் இச்சை

இந்த செயல்கள் தாவீதுக்கு சில நாளாக தொடர்ந்து நடந்து இருக்க வேண்டும். இவ்விதமாக இந்த நான்கு செயல்களும் மனிதனுடைய சரீரத்திற்குரியது. இந்த நேரத்தில் தாவீது ராஜா உலகத்தின் ஆவியினால் தாக்கப்பட்டார்.

இத்தனை பாவங்களும் அவர் சரீரத்தில் நுழைந்திருக்கும் போது அவைகளை அவரால் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால் பாவம் படரும் தன்மையுள்ளது. பாவம் வளரக்கூடியது. இவ்விதமாக தாவீதின் சரீரத்திற்குள் நுழைந்த உலகத்தின் ஆவி பின்பு அவரின் ஆத்துமா விற்குள் நுழைந்து விட்டது.

தாவீதின் ஆத்துமாவில் உள்ள மனது மண்டலம், அறிவு மண்டலம், உணர்ச்சி மண்டலம், சித்தா மண்டலம் ஆகியவற்றை இந்த உலகத்தின் ஆவி பாதித்தது. இவ்விதமாக தாவீது தன் சரீரத்தில் உலகத்தின் ஆவிக்கு இடங்கொடுத்ததினால் அந்த உலகத்தின் ஆவி இப்பொழுது அவருடைய ஆத்துமாவிற்குள் நுழைந்தது.

அதாவது தாவீதுடைய மனது மண்டலம் பாதிப்புகுள்ளானது. அடுத்த வசனத்தில் இதை நாம் தெளிவாக காண்கிறோம்.

**அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்; அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள்.(2சாமு 11:3)**

இந்த வசனத்திலிருந்து நாம் அறிகிற ஒரு உண்மை என்னவென்றால் தாவீதின் சரீரத்தை தாக்கிய உலகத்தின் ஆவி இப்பொழுது தாவீதின் ஆத்துமாவிற்குள் நுழைந்து விட்டது. எனவே தான் அந்த ஸ்திரீ யாரென்று விசாரிக்க ஆள் அனுப்பினான். அதாவது தாவீதின் மனது மண்டலம்

கறைபடிந்து போனது.

அதை தொடர்ந்து தாவீதின் அறிவு மண்டலமும் உலகத்தின் ஆவியினால் தாக்கப்பட்டது. அதாவது அந்த ஸ்திரீ உரியாவின் மனைவி என்று அறிந்து கொண்டார். அதாவது உரியா இப்பொழுது ராணுவத்திற்கு சென்றுள்ளான். அவள் வீட்டில் புருஷன் இல்லை. தனிமையாய் இருக்கிறாள் என்று அறிந்து கொண்டார். இவ்விதமாக தாவீதின் அறிவு மண்டலம் உலகத்தின் ஆவியினால் கெடுக்கப்பட்டது.

தாவீதை தாக்குகின்ற உலகத்தின் ஆவி பின்பு அவருடைய சித்தத்தையும் தாக்கி கெடுத்தது. இதை அடுத்த வசனத்தில் காண்கிறோம்.

**அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்து வரச் சொன்னான்.(2சாமு. 11:4)**

இதுவரை உலகத்தின் ஆவியினால் தாக்கப்பட்ட தாவீது இப்பொழுது கூட அந்த ஆவிகளை துரத்தியடித்து தேவ ஆவியானவருக்கு கீழ்ப்படிந்திருக்க முடியும். ஆனால் தாவீதின் சித்த மண்டலத்தில் உலகத்தின் ஆவி பலமாக செயல்படத் துவங்கியது. எனவே தான் ஆள் அனுப்பி அவளை அழைத்து வரச் சொன்னான். இவ்விதமாக தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டிய தாவீது ராஜாவை உலகத்தின் ஆவி நடத்திவிட்டது. பரிசுத்த ஆவியானவர் இந்த சம்பவத்தின் மூலம் நம்மோடு பேச விரும்புகிறார். நீங்கள் தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்களா? அல்லது உலகத்தின் ஆவியினால் நடத்தப்படுகிறீர்களா?

**2. மனுஷ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்:**

தாவீது ராஜா தேவனை நன்றாக போற்றி துதித்து ஸ்தோத்தரித்து ஆராதிக்கிறவர் தான். எனினும் தாவீது ராஜா மனுஷ ஆவியினாலும் ஒருமுறை நடத்தப்பட்டார். அதாவது தாவீதின் ஆத்துமாவில் சாத்தானால் ஏற்பட்ட ஏவுதலினால் அவருடைய வாழ்க்கையும், அவர் தேசத்தாருடைய வாழ்க்கையும் பலத்த நஷ்டத்திற்குள்ளானது.

இந்த சம்பவமும் தாவீது ராஜாவின் இளமைப் பருவத்தில் நடக்கவில்லை. அவருடைய முதிர்ந்த வயதில் தான் நடந்தது. எனவே நாம் எவ்வளவு வயது முதிர்ந்தவர்களாயிருந்தாலும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் போது மட்டுமே வாழ்க்கையில் சமாதானமும் சந்தோஷமும் கிடைக்கும். மனுஷ ஆவியினால் நடத்தப்படுவோமானால் சஞ்சலமும், துக்கமும் நமது வாழ்க்கையில் குறிக்கிடுகிறது.

**சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது. (1நாளா 21:1)**

நமது ஆவியில் உண்டாகும் ஏவுதல் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படக்கூடியதாகும். ஆனால் நமது ஆத்துமாவில் உண்டாகும் ஏவுதல் சாத்தானால் கொடுக்கப்படுவதாகும். அதாவது நமது சிந்தனை மண்டலத்திலும் நமது அறிவு மண்டலத்திலும் இருந்து ஒரு தீர்மானம் வெளிப்படுமானால் அது சாத்தானால் கொடுக்கப்படுகிற ஆலோசனை யாகும்.

எனவே தான் நாம் தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். தேவ ஆவியானவர் நமது ஆவியிலே அசைவாடி நமது ஆவியில் உள்ள உணர்விலே ஒரு வெளிப்பாடு தருவார். அப்பொழுது நமது ஆவியில் கிடைத்த வெளிப்பாட்டின் படி ஒரு தீர்மானம் எடுப்போமானால் அதுவே பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதாகும்.

இந்த இடத்தில் தாவீதின் ஆத்துமாவை சாத்தான் தாக்கினான். எனவே தான் தாவீதின் ஆத்துமாவில் உண்டான ஏவுதல் அவருக்கு பாவத்தையும் சாபத்தையும் வாதையையும், கொள்ளை நோயையும், மரணத்தையும் கொண்டு வந்தது.

நமது ஆத்துமா நம்மை நடத்த நாம் இடங்கொடுக்கும் போது நம் அருகில் உள்ள தேவ ஊழியர்கள் மூலம் நம்மை பரிசுத்த ஆவியானவர் கடிந்து கொள்வார். தாவீது ராஜா சாத்தானால் ஏவப்பட்டு தேவ ஜனத்தில் பட்டயம் உருவத்தக்கவர் எத்தனை பேர் என்று எண்ணச் சொல்லும் போது யோவாப் என்ற படைத் தளபதி மூலம் ஆவியானவர் கடிந்து கொண்டார். (2நாளா. 11:3)

ஜென்ம சுபாவத்தினால் வழிநடத்தப்படுகிறவர்கள் ஆவியானவரின் கடிந்து கொள்ளுதலுக்கு செவி கொடுக்க மாட்டார்கள். யோவாபின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தாவீதை தடுத்த போது அவர் தேவ ஆவியானவரின் எச்சரிப்புக்கு செவி கொடுக்கவில்லை. தாவீது ராஜா இஸ்ரவேலில் உள்ள எல்லா ஜனங்களையும் எண்ணும்படி சொல்லவில்லை. பட்டயம் உருவத் தக்கவர்கள் எத்தனை பேர் என்று எண்ணச் சொன்னார். அதாவது தாவீது ராஜாவின் சிந்தனை மண்டலம் பெருமையினால் கறைபடுகிறது.

தாவீதின் ஆரம்ப நாட்களைப் பாருங்கள். ஆரம்ப நாட்களை தியானியுங்கள். கோலியாத்தை வீழ்த்த செல்லும் போது 'உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'. (சங். 18:29)

தாவீதின் ஆரம்ப நாட்கள் விசுவாச ஜீவியம் ஆகும். அதாவது தேவனையே சார்ந்த வாழ்க்கையாகும். ஆனால் தாவீதின் முதுமையின் நாட்களிலே அவர் மனிதர்களை சார்ந்து, மனித பலத்தை நம்பி வாழ முற்பட்டார். எனவே தான் பட்டயம் உருவத் தக்கவர்கள் எத்தனை பேர்

என்று எண்ணச் சொன்னார். (1 நாளா. 21:5)

அன்பானவர்களே மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதை தனக்கு புயபலமாக்கிக் கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிற மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே.17:5).

இவ்விதமாக தாவீது ராஜா தேவனையே சார்ந்து, ஜீவிக்கிற விசுவாச வாழ்வை விட்டு விட்டு மனிதர்களை சார்ந்து வாழ சாத்தானால் தூண்டப்பட்டார். இது தேவனின் பார்வையில் மன்னிக்க முடியாத குற்றமாகும். இதை தாவீது ராஜாவே ஒத்துக் கொண்டார்.

**தாவீது தேவனை நோக்கி: நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன். (1நாளா 21:8)**

**தாவீது தேவனை நோக்கி: ஜனத்தை எண்ணச்சொன்னவன் நான் அல்லவோ? நான்தான் பாவஞ்செய்தேன்; பொல்லாப்பு நடப்பித்தேன். (1நாளா 21:17)**

எனவே நாம் மனுஷ ஆவியினால் நடத்தப்பட இடங்கொடுக்கவே கூடாது. பல தேவப் பிள்ளைகள் இந்த சத்தியத்தை அறியாமல் மிக எளிதில் பிசாசுக்கு இடங்கொடுத்து விடுகிறார்கள். மனுஷ ஆவியினால் நடத்தப்பட மனுஷ ஆவியில் ஒரு ஏவுதலை கொடுத்தவன் சாத்தான் தான். எனவே நீங்களும் நானும் தேவ ஆவியினால் நடத்தப்பட தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் எந்த ஆவியினால் நடத்தப்படுகிறீர்கள்?

மனுஷ ஆவியினால் நடத்தப்படுவது நமக்கும் நம்மை சூழ்ந்துள்ள ஜனங்களுக்கும் பெரிய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் உண்டாக்கி விடும். ஆனாலும் தேவன் அன்புள்ளவராக இரக்கமுள்ளவராக நமது தவறுகளின் மத்தியிலும் நமக்கு தேவன் உதவி செய்தார். தாவீதின் இந்த பாவத்திற்கு மூன்று தண்டனைகளை தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் சொன்னார்.

1. மூன்று வருஷத்துப் பஞ்சம்.
2. மூன்று மாதத்திற்கு சத்துருக்களின் பட்டயம்.
3. மூன்று நாள் கொள்ளை நோய்.

இதில் ஏதாவது ஒன்றை தெரிந்து கொள்ளும்படி தீர்க்கதரிசி சொன்னார். ஆனால் தாவீது ராஜா பலத்த பாவ உணர்வோடு தேவனுடைய பாதத்தில் விழுந்தார். அதாவது மனுஷ ஆவியினால் நடத்தப்பட்டு சாத்தானுடைய ஏவுதலுக்கு இடங்கொடுத்து ஏமாந்து போனேனே என்ற உணர்வோடு தாவீது தன் பிழைகளை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டார். இதினிமித்தம் தாவீதுக்கு தேவன் இரக்கம் பாராட்டினார்.

அதாவது மிகவும் குறைந்த தண்டனையாகிய மூன்று நாள் கொள்ளை நோயை தேவன் அனுப்பினார். அந்த கொள்ளை நோயினால் இஸ்ரவேலில்

எழுபதினாயிரம் பேர் முறிந்தார்கள். தாவீது ராஜா தன் பிழையை உணர்ந்தான். மனுஷ ஆவியினால் நடத்தப்பட்டதற்காக மன்னிப்பு கேட்டு பின்பு தேவ ஆவியானவரின் நடத்துதலுக்கு கீழ்ப்படிந்தார்.

தேவ தூதன் தரிசனமான இடத்தில் உள்ள களத்தை விலைக்கி வாங்கி அங்கு பலிபீடம் கட்டி பலிசெலுத்தி கர்த்தரை ஆராதித்தார். அப்பொழுது வாதை நின்றது. தேவனுடைய மன்னிப்பு தாவீதுக்கு கிடைத்தது. இவ்விதமாக தாவீது பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார் என்று காண்கிறோம்.

**அப்பொழுது அவர் வானத்திலிருந்து சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவனுக்கு மறுஉத்தரவு அருளினார். (1நாளா 21:26)**

கர்த்தர் அக்கினியாய் இறங்கினார் என்ற பழைய ஏற்பாட்டு சம்பவம் ஆவியானவரின் அங்கீகாரத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இவ்விதமாக தேவ ஆவியினால் நடத்தப்பட தாவீது செயல்பட்ட போது கர்த்தர் அவருக்கு ஆசீர்வாதத்தை கொடுத்தார்.

**தேவதூதன் தன்னுடைய பட்டயத்தை உறையிலே திரும்பப் போடவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்.(1நாளா 21:27)**

எனவே பிரியமானவர்களே நீங்களும் நானும் இந்த சம்பவத்தின் மூலம் எச்சரிக்கப்படுகிறோம். நீங்கள் மனுஷ ஆவியினால் நடத்தப்படுகிறீர்களா? அல்லது தேவ ஆவியானவரால் நடத்தப்படுகிறீர்களா? நீங்கள் தேவனைச் சார்ந்த விசுவாச வாழ்க்கை வாழுகிறீர்களா? அல்லது மனிதர்களைச் சார்ந்து பெருமையில் வழிநடத்தப்படுகிறீர்களா? தாவீதுக்கு வந்த நஷ்டம் உங்களுக்கு வராதிருக்க வேண்டுமானால் நீங்கள் தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டும்.

## 3. தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்:

தாவீது ராஜாவின் வாழ்க்கையிலே பல முறை தேவ ஆவியினால் நடத்தப்பட்டார். அதில் ஒரு அனுபவத்தை இப்பொழுது நாம் தியானிக்கப் போகிறோம். நாம் தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டுமானால் அதற்கு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது முறையே

1. சுயபுத்தியை சார்ந்திருக்கக் கூடாது. (நீதி. 3:5)
2. மனித ஆலோசனையைக் கேட்கவும் கூடாது. (1சாமு. 30: 24)
3. சூழ்நிலைகளை பார்க்கவும் கூடாது. (1சாமு. 30:9,10)
4. நமது சொந்த உணர்ச்சியை சார்ந்திருக்கவும் கூடாது. (1சாமு. 30:4)

இவ்விதமாக களைய வேண்டியவைகளை களைந்து விட்டு செய்ய வேண்டியவைகளை செய்யும் போது தேவ ஆவியானவர் நம்மை சரியாக வழிநடத்துவார்.

இஸ்ரவேலுக்கு ராஜாவாக அமரும்படியாக தாவீதை தேவன் அழைத்திருந்தார். அதற்காக ராஜ அபிஷேகத்தையும் அவன் மேல் ஊற்றியுள்ளார். அதற்காக பதினான்கு ஆண்டுகள் காத்திருந்து தன்னை ஆயத்தப்படுத்தியிருந்தார்.

தாவீது ராஜாவாக அமருவதற்கு எதிராக இருந்த சவுலையும் அவரின் பிள்ளைகளாகிய யோனாத்தானையும், அபினதாபையும், மல்கிசுவாவையும் பெலிஸ்தியர்கள் வெட்டி போட்டார். இப்பொழுது தாவீது எருசலேமை நோக்கி ஓடிப்போய் சிங்காசனத்தில் அமர்ந்து தேசம் முழுவதையும் தன்னுடைய ஆளுகைக்கு கீழ் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் தாவீது அப்படிச் செய்யவில்லை. தேவ ஆவியானவரின் தெளிவான வழிநடத்துதலுக்காக அவன் காத்திருந்தான். அதற்காக தாவீது செய்தது என்ன?

தாவீது தன்னை சுற்றிலும் இருக்கிற திறந்த வாசலை கண்டு ஆர்ப்பரித்து விடவில்லை. கடந்த பதினான்கு வருஷமாக எதிர்மறையான சூழ்நிலைகள் இருந்ததை கண்டு சோர்ந்து போகவும் இல்லை. சூழ்நிலைகளை கண்டு தாவீது தன் வாழ்க்கையை நடத்தவில்லை.

அதற்குப் பதிலாக முழங்கால்படியிட்டு தேவ சமூகத்தில் ஜெபிக்கிறவராக இருந்தார். **ஜெபிக்கிறவர்களுக்குத்தான் தேவ ஆவியானவரின் வழிநடத்துதல் கிடைக்கும்.**

**பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார்.(2சாமு 2:1)**

தாவீது ஜெபித்த போது தேவன் தெளிவான குரலில் அவரோடு பேசி தமது சித்தத்தை வெளிப்படுத்தினார். தன்னுடைய அழைப்பையும் தன் மேல் இருக்கிற அபிஷேகத்தையும் தனக்காக திறந்திருக்கிற அனுகூலமான சூழ்நிலைகளையும் கண்டு தாவீது தன் வாழ்க்கையை நடத்தவில்லை. எல்லாம் அனுகூலமாக இருந்தாலும் தேவனுடைய தெளிவான குரலை கேட்கும் வரை அவர் ஜெபத்தில் தரித்திருந்தார்.

இப்படி ஜெபிக்கிறவர்கள் தான் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுவார்கள். இன்றைய விசுவாசிகள் தேவன் பேரில் உள்ள சந்தோஷத்தின் பொருட்டு அவசரப்பட்டு எத்தனையோ தவறுகளை எளிதாக செய்துவிடுகிறார்கள். இன்றைய ஊழியர் அநேகர் தங்களுடைய அழைப்பையும் தங்கள் அபிஷேகத்தையும் சார்ந்து கொண்டு சூழ்நிலைகள் தங்களுக்கு சாதகமாக இருப்பதை கண்டு தேவ சித்தத்தை அறிய காத்திருந்து ஜெபிக்காமல் ஊழிய ஸ்தலத்தில் குதித்து தோல்விகளை சந்திக்கிறார்கள்.

ஐயோ, நான் அழைக்கப்பட்டவன் தானே; தேவனின் ஊழிய அபிஷேகம் என் மேல் இருக்கிறதே; ஏன் எனக்கு தோல்விகள் சம்பவிக்கிறது; என் ஊழியம் வளரவில்லையே; என் குடும்பம் செழிக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள்.

அன்பானவர்களே நீங்கள் ஜெபத்திலும் உபவாசத்திலும் சில நாள் காத்திருந்து தேவனின் குரலை தெளிவாகக் கேட்டு உங்கள் வாழ்க்கையையும், உங்கள் ஊழியத்தையும் துவங்கியிருப்பீர்கள் என்றால் உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றி தான். ஊழியத்தில் செழிப்பு தான்.

தாவீது தன் ஜெபத்தில் மீண்டும் தரித்திருந்தார். பட்டணத்திற்குள் போகலாம் என்று பரிசுத்த ஆவியானவர் பேசிய பிற்பாடும் தொடர்ந்து ஜெபத்திலே காத்திருந்தார். அவர் மீண்டும் ஜெபித்தார்.

**எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர் எப்ரோனுக்குப் போ என்றார்.(2சாமு 2:1)**

ஜெபிக்கிறவர்களுக்கு தாவீது நல்ல முன்மாதிரியை நமக்கு காட்டுகிறார். மேலோட்டமாய் ஜெபிக்கிறவர்கள் அவசரப்படுகிறவர்களாய் இருப்பார்கள். தாவீது தன் வாழ்க்கையிலும், தேவன் தந்த ஊழியத்திலும் அவர் அவசரப்படவேயில்லை. நிதானமாக ஜெபித்தார். எனவே தான் ஊருக்குள்ளே போகலாம் என்று தேவன் சொன்னாலும் எந்த இடத்திற்கு போக வேண்டும் என்று ஜெபித்தார்.

தேவ ஆவியானவர் அவருக்கு உரிய இடத்தை தெளிவாகக் காட்டினார். அந்த இடத்தின் பெயர்தான் எப்ரோன் என்பதாகும்.

எப்ரோன் என்பதற்கு ஐக்கியம் என்பது அதன் அர்த்தமாகும்.

ஜெபத்தின் மூலம் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படு கிறவர்களுக்கு தேவனின் ஐக்கியம் கிடைக்கும். அதாவது தேவன் அவர்களோடு கூட வருவார். தேவன் நம்மோடு வருவது நமக்கு எவ்வளவு பெலன் என்பதை நாம் விவரிக்க முடியுமா?

இப்பொழுது தாவீது தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார். இதினிமித்தம் தாவீதுக்கு வந்த ஆசீர்வாதம் என்ன?

**அப்பொழுது யூதாவின் மனுஷர்வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். (2சாமு.2:4)**

இவ்வளவு தெளிவாக தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு சென்றாலும் உடனே அத்தனை கோத்திரமும் அவருக்கு ஆதரவாக இருக்க வில்லை. ஒரே ஒரு கோத்திரம் தான் தாவீதை ஏற்றுக் கொண்டார்கள். மற்ற பதினொரு கோத்திரமும் தாவீதுக்கு எதிராக தான் செயல்பட்டார்கள்.

இது நமக்கு அதிர்ச்சி தரக்கூடிய உண்மையாக இருக்கிறது.

அன்பானவர்களே நீங்கள் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகிற போதும் அவசரப்படவே கூடாது. தேவ பிரசன்னத்தில் தேவன் கிரியை செய்யும் படி அமைதலோடு காத்திருக்க வேண்டும்.

முழுமையான ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க இன்னும் ஏழு வருஷம் தாவீது காத்திருக்க வேண்டியதாயிற்று. தேவ ஆவியானவரால் வழிநடத்தப் படுகிறவர்கள் தேவனுடைய வேளைக்காக பொறுமையாய் காத்திருப் பார்கள். (சங். 40:1). அவர்கள் அவசரப்படவே மாட்டார்கள்.

தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவர்களுக்கு எதிராக எழும்புகிற எல்லாரும் மடிந்து போவார்கள். அடுத்து வருகிற அதிகாரங்களை நாம் கருத்துடன் வாசித்தால் இதை அறிந்து கொள்ளலாம்.

1. சவுலின் தளபதியாகிய அப்னேர் விபச்சாரத்தில் விழுந்ததினிமித்தம் அவனுக்கும் ராஜாவுக்கும் பிளவு உண்டாயிற்று. (2சாமு. 3:7)
2. தாவீதுக்கு எதிராய் செயல்பட்ட அப்னேர் கொல்லப்பட்டான். (2சாமு.3:27)
3. சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தும் கொல்லப்பட்டான். (2சாமு. 4:5,6)

இவ்விதமாக தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகிற தாவீதுக்கு எதிராக எழுப்பினவர்கள் எல்லாரும் மடிந்து போனார்கள். தன் எதிராளிகள் ஒருவரையும் தாவீது கொல்லவில்லை. எந்த எதிராளியை எப்படி சரிகட்ட வேண்டும் என்று தேவனே பொறுப்பெடுத்துக் கொண்டார். தாவீதின் மனதும் பரிசுத்தமாய் பாதுகாக்கப்பட்டது. தாவீதின் கைகளும் சுத்தமான கைகளாய் இருந்தது. இப்படிப்பட்ட நிதானத்துடன் தாவீது செயல்பட்டார். தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவர்களே ஆவியின் கனிகளை அப்பியாசிக்கிறவர்களாய் இருப்பார்கள்.

தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவர்களுக்கு ஏற்ற வேளையிலே எல்லா ஆசீர்வாதமும் கைகூடி வரும். ஏழு வருடங்களுக்கு பின்பு தாவீதுக்கு முழு தேசமும் எல்லாக் கோத்திரங்களும் கிடைத்தன.

**அக்காலத்தில் இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்தார்கள். (2சாமு 5:1)**

இஸ்ரவேலின் மூப்பர் எல்லோரும் எப்ரோனின் ராஜாவினிடத்தில் வந்தார்கள். தாவீது ராஜா எப்ரோனிலிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். (2சாமு. 5:3).

அன்பானவர்களே இந்த செய்தியை வாசிக்கும் போதே பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் அசைவாடுவதை உணருகிறீர்களா? பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபியுங்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்களோடு பேசுவார். அப்பொழுது நீங்கள் தேவ சித்தத்தின் படி உங்கள் வாழ்க்கையும் நடத்துவீர்கள். உங்கள் ஊழியத்தையும் தேவ சித்தத்தின்படி நிறைவேற்று

வீர்கள். அப்பொழுது! உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமானதாகவும், உங்கள் ஊழியம் செழிப்பாகவும் இருக்கும்.

இவ்விதமாக தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட தாவீதை குறித்து புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் எப்படிப்பட்ட சாட்சியை கூறுகிறார்.

**தாவீது தன் காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டான். (அப் 13:36)**

தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாகும் படி அழைக்கப்பட்டான். ராஜ அபிஷேகமும் தேவன் அவர்கள் மேல் வைத்திருந்தார். இருப்பினும் தேவ ஆவியானவர் வழிநடத்தும் வரை அவர் பொறுமையாய் காத்திருந்தார். செயல்பட்டதால் அவருடைய வாழ்க்கையும், அவருடைய ஊழியமும் தேவ சித்தத்தின் மையத்தில் செயல்பட்டது. பழைய ஏற்பாட்டு பக்தனாகிய தாவீது பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது சாத்தியமானால் நாம் புதிய ஏற்பாட்டு ஆவியானவரின் காலத்தில் அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மை ஆவியானவர் நடத்துவது எவ்வளவு நிச்சயமான காரியமாக இருக்கிறது.

எனவே ஜெபத்திற்காக அதிக நேரம் ஒதுக்குங்கள். கர்த்தர் கொடுத்திருக்கிற வேத புத்தகத்தை கிரமமாக வாசிக்க போதிய அளவு பொறுமையுடன் காத்திருங்கள். அப்பொழுது ஆவியானவருடைய குரலை நீங்கள் தெளிவாக கேட்க முடியும். உங்கள் உள்ளான ஆவியில் உள்ள உணர்வின் மூலம் தேவன் உங்களோடு பேசுவார். உங்கள் ஆவியில் உள்ள உணர்விலே நீங்கள் செய்ய வேண்டியவைகளை குறித்த வெளிப்பாடுகளை உணர்த்துவார். படிப்படியாக தாவீதுக்கு தமது சித்தத்தை வெளிப்படுத்தினது போல உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

தேவன் வெளிப்படுத்துகிற ஒரு சத்தியத்துக்கு நீங்கள் முழுவதுமாய் கீழ்ப்படியும் போது அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று படிப்படியாய் தேவன் வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பார். தேவ ஆவியானவர் கொடுக்கிற ஆலோசனைகளை ஒவ்வொரு நாளும் நீங்கள் நிறைவேற்றிக் கொண்டே செல்லுங்கள். இப்படிச் செய்வதே தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுவதாகும்.

தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட தாவீதுக்கு அனுகூலங்கள் உண்டாயிற்று. ஆசீர்வாதங்கள் கிடைத்தது. எதிராளிகள் சிதறடிக்கப் பட்டார்கள். தேசம் முழுவதும் தாவீதுக்கு சொந்தமானது. இதே போல் எனக்கும் உங்களுக்கும் தேவன் செய்வதற்கு போதுமானவராக இருக்கிறார். நாம் அனைவரும் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுவோமாக.

# 6 தேவனுக்கென்று ஒரு சேனை

நமது தேவனின் சிறப்பு என்னவென்றால் ஒன்றுமில்லாதிருந்து சகலத்தையும் உண்டாக்குபவர். அதுபோலவே உலர்ந்த எலும்புகளிலிருந்து ஒரு சேனையை தமக்கென எழுப்புகிறவர். அதாவது உலகப்பிரகாரம் கோழைகளாகவும் ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும், சமுதாயத்தால் தள்ளப்பட்டவர்களாகவும் உலகத்தாரால் அற்பமாய் எண்ணப்பட்டவர் களுமாகிய மக்களை தேவன் தெரிந்தெடுத்து தமக்காக தேவனுடைய சேனை யாக நம்மை உருவாக்குகிறவர்.

இஸ்ரவேல் சபையில் ஒரு பிரிவினராகிய யூதா கோத்திரம் பாபிலோன் தேசத்துக்கு சிறைபிடிக்கப்பட்டு போனார்கள். அந்த பாபிலோனிலே அவர்கள் எழுபது வருடங்களாக சிறுமைப்படுத்தப் பட்டார்கள். முடிவிலே அவர்கள் உலர்ந்து போன எலும்புகளால் நிறைந்த கல்லறை தோட்டம் போல நம்பிக்கையெல்லாம் இழந்து போனார்கள்.

அப்படிப்பட்ட யூதா கோத்திரத்தை நோக்கி எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலம் தேவன் பேசினார். உலர்ந்து போன எலும்புகள் போல் ஜீவனற்று சிதறிக்கிடக்கிற அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியானவர் வந்து அசைவாடுவார். அப்பொழுது அவர்கள் தேவனுக்காக ஒரு சேனையாக எழும்பி தங்கள் எதிராளியாகிய பாபிலோன், மேதியர், பெர்சியர், சாம்ராஜ்ஜியங்களை ஆளுகை செய்த அசுத்த ஆவிகள் மேல் ஜெயம் எடுத்து விடுதலை பெற்று பாபிலோனை விட்டு வெளியேறி மகா பெரிய சேனையாக எழும்புவார்கள் என்று கர்த்தர் சொன்னார்.

**எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.(எசே. 37:10)**

அந்த எசேக்கியேலின் தீர்க்கதரிசன செய்திகள் மூலம் யூதா ஜனத்துக்குள் வந்த உயிர் மீட்சி இந்த அடியேன் எழுதப் போகிற இந்த

தீர்க்கதரிசன செய்திகள் மூலம் உங்களுக்குள்ளே மூன்று விதமான உயிர் மீட்சி உண்டாகப் போகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நமது தேவன் திரித்துவமானவர். அவரால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தேவ சாயலின் படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் மனிதனுக்குள்ளும் திரித்துவம் இருக்கிறது. தேவனின் திரித்துவம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்பதாகும். அதுபோலவே மனிதனின் திரித்துவத்தில் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகள் இருக்கிறது. மனிதனின் மூன்று பகுதிகளிலும் உயிர் மீட்சி பெறும் போது அந்த யூத சபை தேவனுக்கென்று ஒரு சேனையாக எழும்பினது போல நாமும் தேவ சேனையாக எழும்புவோம். அன்று யூத சபை பாபிலோனின் ஆவிகளை முறியடித்தது போல நாமும் நம் தேசத்தை சூழ்ந்துள்ள அந்தகார ஆவிகளை விரட்டியடிக்கும் தேவ சேனையாக எழும்புவோம்.

## 1. ஆவியில் உயிரடைதல் :

மனிதனின் முதல் பிரிவு ஆவி. இந்த ஆவி ஆதாமின் பாவத்தினால் மரித்துக் கிடக்கிறது. ஆதாம் பாவம் செய்த போது ஆதாமின் பாவத்தினால் சாகவே சாவாய் என்று கர்த்தர் ஏற்கனவே எச்சரித்திருந்தார். ஆனால் ஆதாம் பாவம் செய்த பிற்பாடு தொள்ளாயிரத்து முப்பது வருஷம் கழித்து தான் மரித்தான் (ஆதி. 5:6).

அப்படியானால் பாவத்தின் சம்பளம் மரணம் என்று தேவன் சொன்னபடி ஆதாமுக்கு உடனடியாகவே மரணம் வந்ததா? ஆம். ஆதாமின் பாவத்தின் விளைவாக ஆதாமின் ஆவியிலே அவன் மரித்துப் போனான். ஆனால் சரீரத்தில் மரித்தது தொள்ளாயிரத்து முப்பது வருஷம் கழித்து தான்.

அப்படியானால் ஆதாம் மரித்தது எதிலே மரித்தான். இதை விளங்கிக் கொள்ள புதிய ஏற்பாட்டிலே பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிற சத்தியத்தை கேளுங்கள்.

**அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (எபே 2:1)**

இந்த வசனத்தின் படி ஆதாமின் ஆவி மனிதன் அக்கிரமங்களுக் குள்ளும் பாவங்களுக்குள்ளும் மரித்துப் போனது என்று அறிகிறோம். இவ்விதம் ஆதாமின் மூலம் உலகில் பிறந்திருக்கிற அத்தனை கோடி மக்களும் ஆதாமுக்குள் ஆவியிலே மரித்திருக்கிறார்கள் என்று விளங்கிக் கொள்கிறோம். ஆனால் சரீரத்தில் சுவாசம் இருக்கிறது. சரீரத்தில் உயிர் இருக்கிறது. ஆனால் ஆவி மனிதனோ மரித்துக் கிடக்கிறான். இதை விளங்கிக் கொள்ள இன்னும் ஒரு வசனத்தை புரட்டிப் பாருங்கள்.

**அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய்,**

மரணம் ஆண்டுகொண்டிருக்க (ரோம 5:17)

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1கொரி 15:22)

இந்த வசனங்களிலிருந்து நாம் அறிகிற ஒரு சத்தியம் என்னவென்றால் ஆதாமின் பாவத்தினால் ஆதாமும் ஆதாமின் சந்ததியும் ஆவி மனிதனில் மரித்து கிடக்கிறார்கள் என்று விளங்கிக் கொள்கிறோம். எனவே தான் மனிதன் அக்கிரமங்களையும் பாவங்களையும் ஆவலோடு நடப்பித்துக் கொண்டு இருக்கிறான் என்று எபே. 2:1ல் பவுல் ஆணித்தரமாய் கூறுகிறான்.

**“ஆவியில் மரித்திருப்பவன் பாவம் செய்து கொண்டேயிருப்பான். ஆவியில் உயிர்பிக்கப்பட்டவன் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்று பரிசுத்தமாய் இருப்பான்.”**

அன்பானவர்களே இப்பொழுது உங்கள் வாழ்க்கையை சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் ஆவி மனிதன் பாவத்தில் மரித்துக் கிடக்கிறானா? அல்லது பாவத்தை ஜெயித்து உங்கள் ஆவி மனிதனில் பரிசுத்தம் நிறைந்திருக்கிறதா?

தேவனுக்காக எழும்புகிற சேனையானது தங்கள் ஆவி மனிதனில் உயிரடைய வேண்டும். தங்கள் ஆவி மனிதனில் உயிர்பிக்கப்பட வேண்டும். தங்கள் ஆவி மனிதனில் உயிர்ப்பிக்கப்பட்ட வர்களே சகல பாவத்திலிருந்தும் எளிதாக ஜெயம் எடுக்க முடியும். அப்படியானால் உங்கள் ஆவி மனிதன் உயிர்ப்பிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஆதாமுக்குள் எல்லோரும் மரிப்பது போல் கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்பிக்கப்படுகிறார்கள் என்று 1 கொரி. 15:22 சொல்லுகிறபடி ஆதாமுக்குள் மனிதனாக பிறந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் வர வேண்டும். இயேசு கிறிஸ்துவை உங்கள் உள்ளத்திலே தேவனாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு உங்களுக்குள் வரும்படி அவரை நீங்கள் அழைக்க வேண்டும். அப்பொழுது அற்புதமாக உங்கள் ஆவி மனிதனில் ஒரு உயிர்தெழுதல் உண்டாகும். அதாவது மரித்துப் போன பழைய ஆவி உங்களை விட்டு நீங்கி விடும். உங்கள் உள்ளத்திலே புதிய ஆவி வந்து தங்கும். அந்த புதிய ஆவி தான் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து.

உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி (எபே 4:23) பிந்தின ஆதாம் (இயேசு) உயிர்ப்பிக்கிற ஆவியானார்.(1கொரி.15:45)

இவ்விதமாக உங்கள் ஆவி மனிதனில் உள்ள பழைய ஆவி அதாவது ஆதாமின் ஆவி. அதாவது ஆதாமுக்குள் மரித்துப் போன ஆவி உங்களை விட்டு ஓடிவிட வேண்டும். கிறிஸ்து உங்கள் உள்ளத்துக்குள் வரும்போது அவர் மரித்துப் போன உங்கள் ஆவியை உயிர்பிக்கிற ஆவியாக உள்ளே

வந்து தங்குகிறார்.

இவ்விதமாக பழைய மனுஷன் களைந்து போடப்படுகிறான். முந்தின நடக்கைகளாகிய மோசம் போக்கும் இச்சைகள் உங்களை விட்டு நீங்கிப் போய் விடுகிறது. (எபே. 4:22)

புதிய ஆவியாகிய இயேசு கிறிஸ்து நமது ஆவியில் வந்து தங்கி நமது ஆவியை உயிர்பித்தவுடன் நீங்கள் மெய்யான நீதிமானாகவும், மெய் யான பரிசுத்தவானாகவும் உள்ள தேவசாயலில் நிறைந்த புதிய மனுஷனாக மாற்றமடைகிறான். அதாவது ஆதாம் இழந்து போன தேவ சாயலை நீங்கள் மீண்டும் பெற்றுக் கொள்வீர்கள்.

இவ்விதமாக உங்கள் ஆவியிலே நீங்கள் உயிரடைய வேண்டும். எனவே இயேசு கிறிஸ்துவாகிய உயிர்ப்பிக்கிற ஆவியானவரை உங்கள் உள்ளத்திலே அழைப்பீர்களா? அப்பொழுது தேவ சேனையாக எழும்புவீர்கள்.

## 2. ஆத்துமாவில் உயிரடைதல் :

பாபிலோன் சிறையிருப்பில் உலர்ந்து போன எலும்புகளுக்குள்ளே உயிரடைந்து அவர்கள் மகா பெரிய சேனையாய் எழும்பினது போல் நாமும் புதிய ஏற்பாட்டு தேவ சேனையாக எழும்ப வேண்டுமானால் நமது ஆத்துமாவில் நாம் உயிரடைய வேண்டும்.

இன்றைய சபைகளில் தங்கள் ஆவியிலே உயிர்மீட்சிப் பெற்ற பெரும் பாலானோர் ஆத்துமாவிலே உயிரடையாததால் குறிப்பிட்ட சில காலங்களில் திரும்ப திரும்ப விழுந்து போகிறார்கள். ஆனால் வெளி உலகிற்கு பரிசுத்தவான்கள் போலவும் நீதிமான்கள் போலவும் காட்டிக் கொள்வார்கள்.

## ஆத்துமாவில் உயிர் மீட்சி அடையாதவர்களை எப்படி இனம் கண்டு கொள்வது?

ஆத்துமாவில் உயிர் மீட்சி அடையாதோர் பாவம் செய்து கொண்டே இருப்பார். ஒருவேளை அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கூட பெற்றிருக்க கூடும். சிலநேரங்களில் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை கூட அப்பியாசிக்க கூடும். ஆனாலும் தங்கள் அந்தரங்க வாழ்க்கையிலே சில ரகசிய பாவங்களில் சிக்கிக் கிடப்பார்கள். அதற்கு காரணம் என்னவென்றால் மனிதனின் இரண்டாவது உயிர்மீட்சியாகிய ஆத்துமாவிலே உயிர் மீட்சி அடையாதது தான்.

பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.(எசே 18:4,20)

அன்பானவர்களே உங்களைப் பற்றிய உண்மை நிலையை நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள். உங்கள் ஆவி மனிதன் ஒருபோதும் பாவம்

செய்வதில்லை. ஏனென்றால் மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாகயிருக்கிறது. (நீதி. 20:7) எனவே உங்கள் ஆவி மனிதன் பாவம் செய்ய மாட்டான்.

உங்கள் சரீர மனிதனும் முதலாவது பாவம் செய்வதில்லை. உங்கள் ஆத்துமாவே முதலாவது பாவம் செய்கிறது. ஆத்துமா பாவம் செய்யும் போது அதற்கு கருவியாக, உபகரணமாக (Tools) உங்கள் சரீரம் செயல் படுகிறது. ஆனால் பாவம் செய்வது உங்கள் ஆத்துமா தான்.

எனவே தான் ஆவியின் வரம் பெற்ற சிலர் கூட சில குறிப்பிட்ட பெரிய பாவங்களில் விழுந்து போவதற்கு காரணம் என்னவென்றால் தங்கள் ஆத்துமாவில் உயிர்மீட்சியை குறித்த விழிப்புணர்வு இல்லாதது தான். உங்கள் ஆத்துமா உயிர்பிக்கப்பட்டால் உங்கள் சரீரமும் பரிசுத்தமான கருவியாக, உபகரணமாக பயன்படும்.

அப்படியானால் உங்கள் ஆத்துமா உயிர்பிக்கப்பட நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங் 19:7)**

மரித்துப் போன உங்கள் ஆவி மனிதனை உயிர்பித்தது நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் தான். அதுபோலவே மரித்துக் கிடக்கிற உங்கள் ஆத்துமாவை உயிர்பிப்பது அவர் தந்துள்ள வேத புத்தகம் தான்.

எனவே நீங்கள் ஜெப நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலவே வேதத்தை வாசிப்பதற்கும், வேதத்தை தியானிப்பதற்கும், வேத வசனங்களை மனப்பாடம் செய்வதற்கும் வாஞ்சையோடு இருப்பீர்களானால் உங்கள் ஆத்துமாவிலே உயிர்மீட்சியை அடைவீர்கள்.

உங்கள் ஆவி உயிர்பிக்கப்படுவது ஒரே முறைதான். ஆனால் உங்கள் ஆத்துமா உயிர்பிக்கப்படுவதோ அனுதினமும் நடக்க வேண்டிய அனுபவமாகும்.

"Salvation of the Soul is a process

ஆத்துமாவில் இரட்சிப்பு என்பது படிபடிப்படியாக வளரக்கூடியது.'

"Salvation is a door way. But Santification is a path way."

இரட்சிப்பு என்பது கதவை திறந்து கொண்டு ஒரு வீட்டுக்குள் பிரவேசிப்பது போன்றது. ஆனால் பரிசுத்தமாகுதல் என்பது அனுதினமும் நமக்குள் நடக்க வேண்டிய அது நீண்ட தூர பயணம்.

இந்த பயணத்திற்கு வழிகாட்டக் கூடிய புத்தகம் நமது கரத்தில் கர்த்தர் தந்திருக்கிற வேத புத்தகமாகும். இதைத் தான் தாவீது ராஜா தன்

அனுபவத்திலிருந்து கூறும் போது உமது வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங். 119.105) என்கிறார்.

இன்றைய சபைகளில் நூதனமான எழும்புதலை பார்க்கின்றோம். ஜெபிப்பதற்கு தீவிரம் காட்டுகிறவர்களும் துதி ஆராதனைக்கு அதிக உற்சாகம் காட்டுகிறவர்களுமான பெருங் கூட்டத்தார் வேத வசனத்தை தியானிப்பதற்கு அதிக உற்சாகம் காட்டுவதில்லை. இதன் விளைவு என்னவென்றால் அவர்கள் ஆவியிலே உற்சாகமாய் இருப்பார்கள். அவர்கள் ஆவியிலே உயிர்மீட்சியாய் இருப்பார்கள். ஆனால் வேத வசன உயிர்பித்தல் இல்லாதபடியால் ஆத்துமாவிலே தொய்ந்து போய் இருப்பார்கள். சிலர் தங்கள் ஆத்துமாவிலே செத்துக் கிடப்பார்கள்.

அன்பானவர்களே நீங்கள் எத்தனை மணி நேரம் ஜெபித்து துதித்து ஆராதிக்கிறீர்களோ அத்தனை மணி நேரம் வேதத்தை தியானிப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக சவுல் இராஜாவின் நாட்களில் நடந்த ஒரு சோகமான சரித்திரத்தை இங்கு காண்போம். சவுல் இராஜாவும் படைத்தளபதியாகிய அப்னேரும் சகல இஸ்ரவேலரும் பெலித்தருக்கெதிராக யுத்தத்திற்கு போனார்கள். அந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கும் வரை ஒரு மனிதனும் ஒன்றையும் புசிக்க கூடாது என்று சவுல் ராஜா கட்டளையிட்டு இருந்தார். (1சாமு. 14:24). இந்த அனுபவம் எதை குறிக்கிறதென்றால் கடுமையான உபவாசத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

ஆனால் பெலிஸ்தியராகிய சத்துருக்களை முதலாவது அடித்தவன் யோனத்தானும் அவன் ஆயுததாரியுந்தான். இந்த வாலிபர்கள் மூலம் இஸ்ரவேலுக்கு பெரிய வெற்றி கிடைத்தது. அதை தொடர்ந்து சகல இஸ்ரவேரும் சத்துருக்களை ஓட ஓட விரட்டினார்கள்.

யுத்தத்தின் முடிவிலே எல்லா இஸ்ரவேலரும் களைத்து விடாய்த்து போனார்கள். இராஜாவின் பிரமாணத்தை மீறி இஸ்ரவேல் ஜனங்கள் பாவம் செய்தார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறி இரத்தத்தோடும் புசித்தார்கள். (1சாமு. 14:31,32)

**அப்பொழுது இதோ, இரத்தத்தோடிருக்கிறதைப் புசிக்கிறதினால் ஜனங்கள் கர்த்தருக்கு இயலாத பாவம் செய்கிறார்கள் என்று சவுலுக்கு அறிவித்தார்கள். (1சாமு 14:33)**

இத்தனை பாவம் செய்த இஸ்ரவேலர் மத்தியில் யோனத்தான் மட்டும் பாவம் செய்யவில்லை. எப்படி யோனத்தானால் மட்டும் நியாயப்பிரமாணத்தை மீறி பாவம் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடிந்தது?

**தேசத்து ஜனங்கள் எல்லாரும் ஒரு காட்டிலே வந்தார்கள். அங்கே**

**வெளியிலே ஒரு தேன்கூடு கட்டியிருந்தது. யோனத்தான் தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதன் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக் கொண்டான்; அதினால் அவன் கண்கள் தெளிந்தது. (1சாமு 14:25,26,27)**

இஸ்ரவேலர்கள் எல்லாரும் ஆடுமாடுகளை இரத்தத்தோடு புசித்து நியாயப்பிரமாணத்தை மீறி பாவம் செய்த போது யோனத்தான் மட்டும் தேன் கூட்டை குத்தி அந்த தேனை சாப்பிட்டதினால் அவன் பாவம் செய்யவில்லை.

**கர்த்தருடைய வேதம் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. (சங் 19:10)**

அன்று நடந்தது போலவே இன்றும் நடந்து கொண்டேயிருக்கிறது. நீங்கள் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் பெறுகிறவர்களாக இருந்தாலும் ஊழியம் செய்வதில் முன்னனியில் நடக்கிறவர்களாக இருந்தாலும் உங்கள் கரத்தில் இருக்கிற வேதப் புத்தகமாகிய தேன் கூட்டை அனுதினமும் குத்தி அதிலிருந்து வடியும் தேனை பருகுங்கள். அப்பொழுது உங்கள் ஆவிக்குரிய மனக்கண்கள் பிரகாசமடையும். அப்பொழுது உங்கள் ஆத்துமா பாவம் செய்யாமல் பரிசுத்தமாக இருக்கும். (எபே. 1:19).

இந்த அனுபவம் ஒருநாள் மாத்திரமல்ல உங்கள் வாழ்நாள் முழுவதும் அனுதினமும் நடக்க வேண்டிய அனுபவமாகும். எனவே உங்கள் ஆத்துமாவை உயிர்பிப்பது வேத வசனம் மட்டுமே.

## 3. சரீரத்தில் உயிரடைதல்:

தேவ பிள்ளைகளுடைய சரீரமானது தேவன் தந்துள்ள ஆலய மாகயிருக்கிறது. நமது சரீரம் தேவன் பயன்படுத்தும் பாத்திரமாக யிருக்கிறது. எனவே இதை அறிந்து கொண்ட நமது எதிராளியாகிய பிசாசு நமது சரீரத்திற்கு விரோதமாக போராடுகிறான். விசுவாசிகளின் சரீரத்தில் வியாதிகளையும், பலவீனங்களையும் போட்டு சரீரத்தில் சோர்வடையச் செய்கிறான்.

இவ்விதமாக நமது சரீரம் பலவீனத்தால் தாக்கப்படுமானால் தேவனுக்காக ஒரு சேனையாக நாம் எழும்ப முடியாது. ஆனால் நமது தேவன் சர்வ வல்லவர். சர்வ ஞானியாக இருக்கிறார். எனவே பலவீனப் பட்ட நமது சரீரங்களை உயிர்ப்பித்து தேவனுக்கென்று ஒரு சேனையாக எழுப்பி நிறுத்துகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட தரிசனத்தில் உலர்ந்த எலும்புகள் உயிரடைந்தன. எழுபது வருடங்களாக செத்துப் போன எலும்புக் கூடு களுக்குள் பரிசுத்த ஆவியானவர் அசைவாடினார் உடனடியாக உலர்ந்த

போன எலும்புகள் உயிரடைந்து மகா பெரிய சேனையாக எழும்பின.

இன்று நமது தேவையும் இதுதான். பின்மாரி மழைபோல பரிசுத்த ஆவியானவர் நமது சரீரத்தின் மேல் அசைவாட வேண்டும். அப்பொழுது நமது சரீரங்கள் உயிர்பிக்கப்பட்டு வியாதிகளையும் பலவீனங்களையும், நோய்களையும், சோர்வுகளையும் விரட்டியடிக்கும். அப்பொழுது நாமும் தேவனுக்கென்று சேனையாக எழும்ப முடியும்.

**அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.(ரோம 8:11)**

இந்த வசனத்தின் சரியான அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள் வோமானால் இப்பொழுதே நம்முடைய வியாதிகளும், பலவீனங்களும், நம்மை விட்டு ஓடி மறைந்து விடும். இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பது நாம் எல்லோரும் அறிந்த சத்தியம் தான். அதைப் போல் இன்று நமது சரீரத்தில் வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் நமது சரீரங்களையும் இன்றே உயிர்ப்பிப்பார். நாம மரித்த பின்பு கல்லறையில் வைக்கப்பட்ட பின்பு கல்லறைக்குள் இருக்கிற சரீரத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுவதில்லை. ஆனால் இன்று நமது சரீரத்தில் ஆவியானவர் வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். நமது சரீரமோ சாவுக்கேதுவான சரீரமாயிருக்கிறது.

அதாவது வியாதிகளாலும், பலவீனங்களாலும், நோய்களாலும் தாக்கப்படுகிற சரீரமாயிருக்கிறது. எனவே தான் நம்முடைய சரீரம் சாவுக் கேதுவான சரீரம் என்று வேதம் சொல்கிறது. செத்து மடிந்த சரீரமல்ல. சாவுக்கேதுவான சரீரம் என்று வேதம் சொல்கிறது. அதாவது வியாதி களாலும், நோய்களாலும், பலவீனங்களாலும் தாக்கப்பட வாய்ப்பு உண்டு என்று விளங்கிக் கொள்கிறோம்.

ஆனால் இந்த சாவுக்கேதுவான சரீரத்திலும் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார். எனவே நமது சரீரத்தில் தாக்குகிற வியாதிகளையும், பலவீனங்களையும், நோய்களையும் விரட்டியடித்து குணமாக்கி உயிர்ப்பிப்பார். இன்றைக்கே நமது சரீரம் உயிர்ப்பிக்கப்படும். ஏனென்றால் இன்றைக்கு நமது சரீரத்திலும் பரிசுத்த ஆவியானவர் தங்கியுள்ளார்.

உதாரணமாக ஆபிரகாமின் சரீரம் அவருடைய தொன்னூற்றி ஒன்பதாவது வயதில் செத்த சரீரமாயிருந்தது. அதாவது சரீரப்பிரகாரம் அவர் சரீரத்தில் ஒரு குழந்தையை உருவாக்கும் அளவுக்கு சுகமோ, பலமோ, ஆரோக்கியமோ அவருக்கு இல்லை.

அவருடைய மனைவியாகிய சாராள் எண்பத்தி ஒன்பது வயதுள்ள

வளாயிருக்கும் போது அவளுடைய கர்ப்பமும் செத்துப் போனது. அவள் இயற்கையாக மலடியாகவும் இருந்தாள். அதாவது சாராளின் சரீரத்தில் இரண்டு வித சாவு இருக்கிறது.

இப்படிப்பட்ட ஆபிரகாமின் செத்துப் போன சரீரத்தையும், சாராளின் செத்துப் போன மலட்டுக் கர்ப்பத்தையும் நமது தேவன் உயிர்ப்பித்தார். ஆபிரகாமின் தேவன் எப்படிப்பட்டவர் தெரியுமா? அவர் மரித்தோரை உயிர்பிக்கிற தேவனாகயிருக்கிறார். அதாவது கல்லறைக்கு போனப் பிற்பாடு உயிர்தெழுதலை கொடுக்கிறவர் மாத்திரமல்ல. இந்த உலகில் உயிரோடு இருக்கும் பொழுது சரீரத்தில் ஏதோ ஒரு அவயங்களில் சாவு இருக்குமானால் அங்கே தமது உயிர்பிக்கிற ஆவியை அனுப்பி சரீரத்தை உயிர்பிக்கிற தேவனாகயிருக்கிறார்.

**அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.(ரோம 4:17)**

ஆபிரகாமின் தேவன் நமது சரீரத்தை உயிர்ப்பிக்கிறவருமாய் இருக்கிறார். உங்கள் சரீரத்திலே ஏதோ ஒரு பகுதி வியாதியினால் தாக்கப் பட்டு அதின் நிமித்தம் மரண பயத்தினால் ஆட்கொள்ளப்பட்டு வேதனை யில் வாடுகிறீர்களோ? இந்தச் செய்தியை வாசித்துக் கொண்டுயிருக்கிற இந்த நேரமே பரிசுத்த ஆவியானவர் உங்கள் சரீரத்தின் மேல் அசைவாட வருகிறார். ஆவியிலே நிரம்புங்கள். அந்நிய பாஷையிலே ஜெபியுங்கள். உங்கள் சரீரம் உயிர்ப்பிக்கபடும் என்று தேவன் உங்களோடு பேசுகிறார்.

**அது ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.(ரோம 4:23,24)**

அன்பானவர்களே! ஆபிரகாமின் சரீரத்தையும், சாராளின் சரீரத்தையும் உயிர்பித்தவர் உங்கள் சரீரத்தையும் உயிர்ப்பிப்பார். இது சத்தியம் மாத்திரமல்ல. அனுதினமும் நமது அனுபவமாக இருக்கிறது.

எனவே வியாதிகளாலும், நோய்களாலும், பலவீனங்களாலும் தாக்கப்பட்டுயிருக்கிற நீங்கள் பயப்படாதிருங்கள். மருத்துவ விஞ்ஞானம் உங்களை காப்பாற்ற முடியாது என்று கைவிட்டு இருந்தாலும் கர்த்தருடைய ஆவியானவர் இப்பொழுது உங்கள் மேல் அசைவாட உங்களை குண மாக்க உங்கள் மேல் வருகிறார்.

இவ்விதமாக சரீரத்திலும் உயிர்ப்பிக்குதலை பெற்று அனுபவித்தவர்கள் தான் தேவனுக்கென்று ஒரு சேனையாக எழும்ப முடியும். இந்த கடைசிக் கால எழுப்புதலில் தேவன் தமக்கென்று இப்படிப்பட்ட சேனையை

எழுப்புகிறார். இந்த தேவனுடைய சேனையானது

✢ இயேசு கிறிஸ்துவினால் தங்கள் ஆவியில் உயிர்பிக்கப்பட்டவர்களாகும்.

✢ வேத வசனங்களால் தங்கள் ஆத்துமாவில் உயிர்பிக்கப்பட்டவர்களாகும்.

✢ பரிசுத்த ஆவியானவரால் தங்கள் சரீரத்தில் உயிர்பிக்கப்பட்டவர்களாகும்.

இவ்விதமாக இந்த மூன்று வித உயிர்ப்பித்தல் பெற்றவர்கள் தேவனுக்கென்று ஒரு சேனையாக தேசத்தில் எழும்பி தேசங்களை கர்த்தர் பக்கம் திருப்புவார்கள்.

# 7 ஆத்துமா வாழ்வது எப்படி?

இதுவரை மனிதனுக்குள் இருக்கின்ற ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்றுப் பிரிவுகளைக் குறித்து தெளிவாகக் கற்றுக் கொண்டோம். நமது ஆவி எப்படி செயல்படுகிறது என்றும் நமது ஆத்துமா எப்படி செயல் படுகிறது என்றும் நமது சரீரம் எப்படி செயல்படுகிறது என்றும் கற்றுக் கொண்டோம். இனி தேவனுடைய ஆசீர்வாதத்தின் வரிசை என்ன என்பதை இப்பொழுது கற்றுக் கொள்வோமாக.

தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் போது முதலாவது ஆத்துமாவை ஆசீர் வதிப்பார். பின்பு நமது சரீரத்தை சுகமாக்குகிறார். அதன்பின்பு நமது உலகப் பிரகாரமான வாழ்வு பொருளாதார செழிப்பையும், ஐசுவரியத்தையும் கொடுக்கிறார் என்பது தான் தேவனுடைய ஆசீர்வாதத்தின் வரிசையாகும்.

தேவன் ஒழுங்குள்ளவர். அவர் எதைச் செய்தாலும் வரிசை கிரமு மாகவும், அவருடைய ஒழுங்கின்படியும் தான் செயல்படுவார். இதை விளங்கிக் கொள்ள வேதத்திலிருந்து இரண்டு வசனங்களை வாசிப்போமாக.

**பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.(3யோவா 1:2)**

**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ள தாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்.(ஏசா 58:11)**

இந்த இரண்டு வசனங்களிலும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்கிறோம்.

1. முதலாவது நமது ஆத்துமா வாழ வேண்டும்.
2. இரண்டாவதாக நமது சரீரம் சுகமடைய வேண்டும்.
3. ஐசுவரியத்தில் வாழ்ந்து சுகித்திருக்க வேண்டும்.

அதேபோல பழைய ஏற்பாட்டு பெரிய தீர்க்கதரிசி ஏசாயா உரைக்கின்ற தீர்க்கதரிசனத்திலும் இதே வரிசையை தேவன் வைத்துள்ளார் என்று காண்கிறோம்.

1. முதலாவது ஆத்துமா திருப்தியடைய வேண்டும்.

2. இரண்டாவதாக நமது எலும்புகள் நிணமுள்ளதாக வேண்டும்.

3. மூன்றாவதாக நாம் நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலவும் வற்றாத நீரூற்று போலவும் பொருளாதாரத்திலும் ஐசுவரியத்திலும் பெருகியிருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய வரிசையாக இருக்கிறது.

தேவனுடைய ஆசீர்வாதத்தின் வரிசை இப்படியிருக்கும் போது இன்றைய விசுவாச மக்கள் எப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்போடு கூட்டங்களுக்கு வருகிறார்கள் என்று சிந்திப்போமானால் தலைகீழ் வரிசையாக தான் மக்க105ளின் எதிர்பார்ப்பு இருக்கிறது. முதலாவதாக சரீரத்திற்கு சுகம் உண்டு. இரண்டாவதாக பொருளாதாரம் உண்டு. கடைசியாக ஆத்துமாவைப் பற்றி சிந்திப்போம் என்று தான் பலர் செயல்படுகிறார்கள்.

ஆனால் ஜனங்கள் தேவனுடைய வரிசையை தலைகீழாக மாற்றினார்கள். தேவன் மாறமாட்டார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். (எபி. 13:8) எனவே பிரியமானவர்களே தேவனுடைய சமூகத்தை நெருங்குகிற நாம் தேவனுடைய வரிசையின் படி ஆசீர்வாத்தை நாடி ஜெபிப்போமாக. அப்பொழுது தேவன் சந்தோஷமாக இறங்கி வந்து நம்மேல் அசைவாடுவார். நம்மை ஆசீர்வதிப்பார்.

## ஆத்துமா வாழ்வது எப்படி?

நமது ஆத்துமாவிலே மனம், அறிவு, உணர்ச்சி, சித்தம் ஆகிய நான்கு பிரிவுகள் இருக்கிறது என்று ஏற்கனவே அறிந்துள்ளோம். இந்த நான்கு பகுதியும் முதலாவது வாழ வேண்டும். இவ்விதமாக நமது ஆத்துமா வாழ்வது எப்படி என்று ஏழு சத்தியங்களை இங்கே தியானிப்போமாக.

## 1. இரட்சிக்கப்படும் ஆத்துமா:

முதலாவதாக நமது ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். ஏனென்றால் நமது ஆத்துமா பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்துக் கிடக்கிறது. இதை விளங்கிக் கொள்வதற்கு எசேக்கியேல் தீர்க்கத்தரிசனத்தை சற்று திருப்புவோமாக.

**பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே. 18:4)**
**பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே. 18:20)**

நமது ஆவி பாவம் செய்வது இல்லை. நமது சரீரமும் முதலாவது பாவம் செய்வது இல்லை. முதலாவது பாவம் செய்வது நமது ஆத்துமாவே.

மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது என்று நீதி.20:27ல் வாசிக்கிறோம். கர்த்தர் தந்த தீபமாகிய நமது ஆவியில் ஒளி இருக்கிறது. அந்த ஆவியில் இருளாகிய பாவம் இல்லை. எனவே தான் நமது ஆவி ஒருபோதும் பாவம் செய்வது இல்லை.

நமது ஆத்துமாவே முதலாவது பாவம் செய்வது. அதாவது நமது மனது மண்டலம், நமது அறிவு மண்டலம், நமது உணர்ச்சி மண்டலம், நமது சித்தம் ஆகிய இவைகள் தான் முதலாவது பாவம் செய்கிறது. முதலாவது பாவம் செய்கிற ஆத்துமா அதற்கு கருவியாக நமது சரீரத்தை பயன்படுத்துகிறது. எனவே நமது சரீரம் முதலாவது பாவம் செய்வது இல்லை. ஆத்துமாவே முதலாவது பாவம் செய்கிறது.

எனவே நமது ஆத்துமா இரட்சிக்கப்பட்டால் நமது ஆவியில் உள்ள வெளிச்சம் இன்னும் பிரகாசமடையும். நமது சரீர அவயவங்கள் பரிசுத்தமாய் செயல்படும். எனவே ஆத்துமா இரட்சிக்கப்படுவது எப்படி என்று முதலாவது நாம் அறிய வேண்டும்.

**ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க் குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். (யாக் 1:21)**

இந்த வசனத்தின்படி நமது ஆத்துமா முதலாவது இரட்சிக்கப்படும். இதைக் குறித்து தாவீது ராஜா என்ன சொல்கிறார்.

**அவர்கள் ஆத்தும மீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது; அது ஒரு போதும் முடியாது.(சங் 49:9)**

**ஆத்துமாவிற்காக பாவநிவர்த்தி செய்வது இரத்தமே. (லேவி. 17:11)**

எனவே நமது ஆத்துமா முதலாவது இரட்சிக்கப்பட வேண்டும். அதாவது நமது ஆத்துமா மீட்கப்பட வேண்டும். ஆத்துமா செய்கிற பாவத்தினால் சாத்தானுடைய மாயாபுரி சந்தையில் கவனிப்பாரற்று சாத்தானுக்கு அடிமையாக கிடக்கிற நமது ஆத்துமாவை மீட்கும்படியாக இயேசுகிறிஸ்து இந்த பூலோகத்தில் வந்து அவருடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக சிந்தினார். சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நமது ஆத்துமாவின் மீட்புக்காக தேவன் கொடுத்திருக்கிற கிரயப் பொருளாகும்.

இந்த வசனத்தை யாதொருவர் விசுவாசித்து தங்கள் இதயத்தில் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுகிறது. அவர்களுடைய ஆத்துமா மீட்டுக் கொள்ளப்படுகிறது.

**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய**

வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.(1பேது 1:18,19)

இவ்விதமாக இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நமது ஆத்துமா செய்த சகல பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்து இரட்சித்து மீட்டு நமது ஆத்துமாவை பரிசுத்தமாக்கிவிடுகிறது. இவ்விதம் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவே வாழுகிற ஆத்துமாவாகும். இரட்சிக்கப்படாத ஆத்துமா செத்துப் போன ஆத்துமாவாகும். அன்பானவர்களே உங்கள் ஆத்துமா இரட்சிக்கப்பட்டு இருக்கிறதா?

## 2. தேற்றப்படும் ஆத்துமா:

இரட்சிக்கப்படும் முன்பாக நாம் செய்த பாவத்தினிமித்தம் பல்வேறு வேதனையான காரியங்கள் நமது ஆத்துமாவை காயப்படுத்தியிருக்கும். இரட்சிக்கப்பட்ட பின்பும் நாம் விரும்பாத எதிர்பாராத சில தீமைகள் குறுக்கீட்டு நமது ஆத்துமாவை வேதனைப்படுத்த கூடும். எனவே தான் நமது ஆத்துமா தேற்றப்பட வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார்.

தாவீதும் அவரோடு இருந்த அறநூறு பேரும் பெலிஸ்த்திய ராஜாவுக்கு யுத்தத்தில் உதவி செய்யும்படி போய்விட்டுத் திரும்பினார்கள். அவர்கள் திரும்பி வந்து பார்க்கும் போது தன்னுடைய கூடாரம் அமலேக்கியரால் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு ஆடுமாடுகளும் மனைவி பிள்ளைகளும் சிறைபிடிக்கப்பட்டு போனார்கள். அப்பொழுது தாவீது ராஜா மிகவும் நெருக்கப்பட்டார். அழுகிறதற்கு பெலனில்லாமல் போகும்மட்டும் அழுதார். அவரோடு இருந்தவர்களெல்லாரும் தாவீதை கல்லெறியும்படி விரோதிகளாய் எழும்பினார்கள். அப்பொழுது தாவீது என்ன செய்தார்.

**தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.** (1சாமு 30:6)

நமது ஆத்துமா வாழ்ந்திருக்கின்ற இரண்டாவது படி என்னவென்றால் நமது ஆத்துமா தேற்றப்பட வேண்டும். நம்முடைய ஆத்துமாவை தேற்றிக் கொள்வது எப்படி என்று தாவீதின் அனுபவத்திலிருந்தே கற்றுக் கொள்வோமாக.

**அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். (சங் 23:3)**

எவ்விதமாக தாவீது ராஜாவின் ஆத்துமா தேற்றப்பட்டது என்று தியானிப்போமானால் அவர் வசனமாகிய புல்லை மேய்ந்து தண்ணீர்

ஊற்றாகிய பரிசுத்த ஆவியானவரால் தேற்றப்பட்டார் என்று அறிகிறோம். எனவே பிரியமானவர்களே உங்கள் ஆத்துமா வாழ வேண்டுமானால் அனுதினமும் வேதத்தை வாசியுங்கள். அனுதினமும் பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபியுங்கள். பரிசுத்த ஆவியானவர் நமது ஆத்துமாவை தேற்றுகிறவராகவே இருக்கிறார்.

**நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவா 14:16)**

எனவே பிரியமானவர்களே பரிசுத்த ஆவியில் நிரம்புங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா தேற்றப்படும். தேற்றரவாளன் என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியிலே Paraletos என்ற வார்த்தை எழுதப்பட்டுள்ளது. அதற்கு அர்த்தம் என்ன?

**To Console in the distress - துன்பத்தின் மத்தியில் ஆறுதல்**
**To release from the distress - துன்பத்திலிருந்து விடுதலை**

எனவே பரிசுத்த ஆவியில் நிரம்பி அந்நியபாஷைகளை நாம் பேசும் போது நமது ஆத்துமா தேற்றப்பட்டு இந்த இரண்டு ஆசீர்வாதங்களும் நமக்கு கிடைக்கிறது. வேதனையோடு நம்முடைய ஆத்துமா துவளும் போது நாம் அபிஷேகத்தில் நிரம்பி ஜெபிக்கும் போது நம்முடைய ஆத்துமா தேற்றப்பட்டு துன்பத்தின் மத்தியிலிருக்கிற நம்முடைய ஆத்துமா ஆறுதல் அடைகிறது. ஆத்துமா வேதனைப்படதக்கதாக நம்மை கட்டியிருக்கிற துன்பத்திலிருந்து விடுதலைக் கொடுக்கிறது. இவ்விதமாக நமது ஆத்துமா தேற்றப்படுகிறது. இப்படி தேற்றப்படுகிற ஆத்துமா தான் வாழும் ஆத்துமாவாகும்.

## 3. பசி, தாகமுள்ள ஆத்துமா:

மனிதனின் ஆத்துமாவில் ஆவிக்குரிய பிரகாரம் பசியும், தாகமும் இருக்கிறது. நமது சரீரத்தில் வயிற்றுப்பசி இருப்பது போல் நமது ஆத்துமாவில் ஆவிக்குரிய பசி, தாகம் இருக்கிறது. நமது சரீரத்திற்கு வேண்டிய பசி தாகத்திற்கு ஏற்ற உணவை கொடுக்காவிட்டால் நமது சரீரம் சோர்ந்து போகும். சரீரத்தின் சோர்வை சீக்கிரம் நீக்காவிட்டால் சரீரம் மரித்துப் போகும்.

அப்படியே நமது ஆத்துமாவின் பசி தாகத்திற்கு வேண்டிய போஜனத்தை கொடுக்காவிட்டால் நமது ஆத்துமா சோர்ந்து போகும். சில நேரங்களில் ஆத்துமா பாவம் செய்து ஆத்துமா தன்னில் தானே மரித்துப் போகும். இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.

**தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத்**

தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.(சங் 63:1)

திருடன் தன் பசியை ஆற்றத் திருடினால் ஜனங்கள் அவனை இகழமாட்டார்கள்;

அவன் கண்டுபிடிக்கப்பட்டால் ஏழு மடங்கு கொடுத்துத் தீரவேண்டும்; தன் வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் கொடுக்கவேண்டியதாகும்.

ஸ்திரீயுடனே விபசாரம்பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான்.(நீதி 6:30-32)

- சங்கீதம் 63:1ன்படி நமது ஆத்துமாவில் தாகமுள்ளது.
- நீதி. 6:30-33ன்படி நமது ஆத்துமாவில் பசியிருக்கிறது

இந்தப் பசிக்கும், இந்த தாகத்திற்கும் தேவன் வைத்துள்ள ஆவிக்குரிய உணவு நமது அதிகாலை ஜெபமாகும். எனவே தாவீது போல அதிகாலையில் எழும்பி தேவனுடைய முகத்தை தேடி ஜெபிக்கிறவனுடைய ஆத்துமா வாழும். ஜெபிக்கிறவர்கள் ஆவிக்குரிய பிரகாரம் திருப்தியாக இருப்பார்கள். யாருடைய ஆத்துமா வாழும்? என்று கேள்வி கேட்போமானால் ஜெபிக்கிறவனுடைய ஆத்துமாவே வாழும் என்பது தேவனின் பதிலாகும்.

அன்பானவர்களே அதிகாலை ஜெபமே நமது ஆத்துமாவை வாழ வைக்கும். ஜெபிக்கிறவர்களின் ஆத்துமாவே திருப்தியடையும் என்று சங்கீதம் 63 :5ல் வாசிக்கிறோம். கொழுப்புடன் கூடிய ஆட்டுக்கறி பிரியாணி சாப்பிடுகிறவர்களின் திருப்தி போல ஜெபிக்கிறவர்களின் ஆத்துமா திருப்திபடும். எனவே பிரியமானவர்களே அதிகாலையில் எழும்புங்கள். துதி ஸ்தோத்திரத்துடன் பாடல்களைப் பாடி கர்த்தருடைய வசனத்தை வாசித்து ஜெபியுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா வாழும் என்று ஆவியானவர் சொல்கிறார்.

## 4. சபையில் நிலைத்திருக்கும் ஆத்துமா:

இந்த கிருபையின் காலத்திற்கு மற்றொரு பெயர் சபையின் யுகம் என்பதாகும். அதாவது புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவ கிருபை அதிகமாய் பெருகுகிறது. ஆனால் அந்த தேவ கிருபையை அசட்டை பண்ணக்கூடிய பலரை நாம் அனுதினமும் பார்க்கிறோம். கிருபையை அசட்டைப் பண்ணுகிறவர்கள் யார் என்று ஆராய்வோமானால் அவர்கள் தங்கள் ஸ்தல சபையின் ஐக்கியத்தை அசட்டை பண்ணுகிறவர்கள் தான் என்று எபி. 10.25-29வசனம் வரை பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டு சபையானது மூன்று வகைப்படும்.

1. நமது உள்ளூரில் உள்ள ஸ்தல சபை
2. நமது ஸ்தல சபை ஐக்கியம் வைத்திருக்கிற ஸ்தாபன சபை
3. அகில உலகம் முழுவதிலும் இருக்கிற சர்வ சங்கமாகிய சபை.

நமக்கு இந்த மூன்று சபைகளிலுமே நல்ல ஒரு ஐக்கியம் வைத்திருக்க வேண்டும். சபையின் ஐக்கியம் துவங்குகிற இடம் நமது உள்ளூரில் உள்ள ஏதாவது ஒரு அபிஷேகம் நிறைந்த போதகரால் வழிநடத்தப்படுகிற ஆவிக்குரிய சபையாக இருக்க வேண்டும்.

அநேகர் தாங்கள் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் தங்களுடைய இரட்சிப்புக்கு காரணமாய் இருந்த ஸ்தல சபையோடு நல்ல ஐக்கியம் வைத்திருப்பார்கள். ஆனால் கொஞ்ச நாட்களில் சில பாடல்களை பாடத் தெரிந்த பின்பு தங்கள் இரட்சிப்பின் சாட்சியை சொல்லத் தெரிந்த பின்பு ஊழியம் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தங்கள் ஸ்தல சபையில் ஐக்கியம் கொண்டு ஆராதிப்பதை விட்டுவிடுகிறார்கள். இது இப்படிப்பட்டவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை கெடுக்கும் படி சாத்தான் வைத்த தந்திரமான கண்ணியாகும்.

அன்பானவர்களே நீங்கள் ஜெபம் பண்ணும் போது வானத்தை வில் போல வளைக்க கூடிய ஜெபவீரராய் இருக்கலாம். ஆனாலும் நீங்கள் அபிஷேகத்தினால் நிறைந்த மேய்ப்பன் நடத்துகிற சபையிலே நிலைத்திருக்க வேண்டும். இதற்காக ஒரு வசனத்தை வாசிப்போம்.

**உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.** (எபி 13:17)

இந்த வசனத்தை பலமுறை திரும்ப திரும்ப படியுங்கள். உங்கள் ஆத்துமாவுக்காக உத்தரவாதம் பண்ணி விழித்திருந்து ஜெபிப்பவர் உங்கள் ஸ்தல சபையின் மேய்ப்பர் தான். உங்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சிக்கு நேராக வழிநடத்துபவர் உங்கள் ஸ்தல சபையின் மேய்ப்பரே. எனவே உங்கள் மேய்ப்பர் அறிவிக்கின்ற சகல அறிவிப்புகளுக்கும் போதிக்கின்ற சகல உபதேசங்களுக்கும் நீங்கள் கீழ்ப்படிந்து "அடங்குங்கள்" என்று ஆவியானர் சொல்லுகிறார்.

"அடங்குங்கள்" என்ற வார்த்தை திரும்ப திரும்ப வாசியுங்கள். ஏனென்றால் ஸ்தல சபையில் இருக்கிற விசுவாசிகளில் சிலர் தங்கள் மேய்ப்பருடைய கையின் கீழ் அடங்கியிருப்பதில்லை. ஆபிரகாமின் குடும்பத்தை விட்டு ஓடுகிற ஆகாரைப் பார்த்து கர்த்தருடைய தூதன்

சொல்லுகிற கட்டளை என்ன?

**நீ உன் நாச்சியார் அண்டைக்கு திரும்பிப் போய் அவள் கையில் கீழ் அடங்கியிரு. (ஆதி. 16:9)**

அன்பானவர்களே நீங்கள் உங்கள் மேய்ப்பரின் கையின் கீழ் அடங்கி யிருக்கிறீர்களா? உங்கள் ஆத்துமா வாழ்ந்து சுகமாய் இருக்க வேண்டு மானால் நீங்கள் உங்கள் மேய்ப்பருக்கு அடங்கி நடக்க வேண்டும். சிலர் தங்கள் மேய்ப்பருடைய ஆலோசனைகளுக்கும் மேய்ப்பர் மூலம் வெளிப் படும் உபதேச பிரசங்கங்களுக்கும் கீழ்ப்படிய மனதில்லாமல் தங்கள் மேய்ப் பரோடு கோபித்துக் கொண்டு மற்றொரு சபையை நோக்கி ஓடி விடுவார்கள். அப்படிப்பட்டவர்களின் ஆத்துமா செழிக்கப் போவது இல்லை.

தாவீது ராஜாவாக இருந்தார். அவர் பெரிய அந்தஸ்தில் இருந்தபடியால் பெரிய பாவத்தை செய்தார். விபச்சாரம், கொலை ஆகிய இரண்டு பாவத் தையும் நடப்பித்து விட்டார். தேவன் தம்முடைய தீர்க்கதரிசி நாத்தானை அனுப்பி தாவீது ராஜாவின் குற்றங்களையும் குறைகளையும் பாவங் களையும் சுட்டிக் காட்டி உணர்த்தினார். அப்பொழுது தாவீது ராஜா என்ன செய்தார்?

தன் ஸ்தல சபையின் ஐக்கியத்தை மாற்றிக் கொண்டாரா? தன் ஸ்தல சபையின் மேய்ப்பருடைய போதனையை அசட்டை பண்ணினாரா? அல்லது ஊழியக்காரனுக்கு கொடுக்க வேண்டிய தசம பாகத்தை நிறுத்திக் கொண்டாரா? அல்லது நாத்தான் தீர்க்கதரிசியை கொல்லும்படி அடியாட் களை அனுப்பினாரா? எதிர்மறையான இவைகள் ஒன்றையும் தாவீது ராஜா செய்யவில்லை.

அதற்குப் பதிலாக தன் பாவங்களையும், தன் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டு மனந்திரும்பினான். தன் மேய்ப்பன் மூலம் தன்னை நோக்கி வருகிற புத்திமதிகளை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டான். தன்னுடைய ஸ்தல சபையிலே தன் மேய்ப்பனின் கீழ் அடங்கியிருந்தார். இதைக் குறித்து தாவீது ராஜா சொல்வது என்ன?

**நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன். (சங் 141:5)**

உங்கள் ஆத்துமா வாழ வேண்டுமானால் உங்கள் ஸ்தல சபையில் உங்கள் மேய்ப்பரின் கீழ் அடங்கியிருங்கள். இவ்விதமாக கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிற ஸ்தல சபையில் அடங்கியிருக்கும் போது தான் உங்கள் ஆத்துமா வாழ்ந்து சுகமாயிருக்கும் என்று அறிகிறோம்.

## 5. ஆராதிக்கும் ஆத்துமா:

உங்கள் ஆத்துமா செழித்திருக்க வேண்டுமானால், வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமானால் நீங்கள் ஆராதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவனை ஆராதித்தல் என்ற சத்தியத்தை இந்த நாட்களில் தேவன் நன்றாகவே நமக்கு போதித்து வருகிறார். இருப்பினும் ஆராதனை குறித்து முழுமையான அறிவும் முழுமையான அனுபவமும் 90சதவீதமான மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

ஆராதனை இரண்டு வகைப்படும்.

1. தனிமனிதனின் ஆராதனை
2. சபையாரோடு சேர்ந்து ஆராதனை.

இந்த இரண்டு ஆராதனையும் நமக்கு மிகமிக முக்கியமாகும். தனி மனிதனின் ஆராதனை என்பது தானியேலின் ஆராதனையைப் போன்றது. அவர் தன்னுடைய மேல் வீட்டிலும் கர்த்தரை ஆராதித்தார். தன் அரன்மனையிலும் கர்த்தரை ஆராதித்தார். சிறையில் போடப்பட்ட போதும் ஆராதித்தார். சிங்கங்களின் மத்தியிலும் ஆராதித்தார். அதாவது அவர் இடைவிடாமல் தேவனை ஆராதித்தார். (தானி. 6:20 ; தானி:6:16)

சபையாரோடு சேர்ந்து ஆராதித்தல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்திலோ அல்லது நமது ஆலயத்திலோ கூடி ஆராதிப்பதாகும். இதற்கு குறிப்பிட்ட நேரம் நாம் ஒதுக்கியிருக்கிறோம். குறிப்பிட்ட நேரத்திற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னதாகவே நீங்கள் வந்து விட வேண்டும். உங்கள் வீட்டை விட்டு புறப்படும் போது துதியும் ஸ்தோத்திரமும் பாடலுமாக நீங்கள் வர வேண்டும். ஆலயத்திற்குள்ளே நுழையும் போதே நம்முடைய வாயில் பாட்டு இருக்க வேண்டும். (சங். 100:4)

**நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.(சங் 71:23)**

நமது ஆத்துமா வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமானால் நமது ஆத்துமா கர்த்தரை ஆராதிக்க வேண்டுமென்று இந்த வசனம் நமக்கு சொல்கிறது. எனவே பிரியமானவர்களே உங்கள் தனி ஆராதனை உங்கள் சபையின் ஆராதனை தான் உங்கள் ஆத்துமாவை செழிக்கச் செய்கிற நேரமாகும்.

ஆராதனையின் நேரங்களை முழுமையாக ஆராதிப்பதற்கென்றே பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆராதனையின் நேரத்தை வியாபாரத்தை விளம்பரம் செய்யும் காரியத்தில் வீணடித்து விடாதீர்கள். நமது ஆராதனை நமது கர்த்தருக்கே உரியதாகும். எனவே மனிதர்களை மகிமைப்படுத்துகிற சோதனைகளுக்கு நீங்கள் இடம் கொடாதிருங்கள். என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

சுகம் பெற்ற குஷ்டரோகி நன்றிப் பெருக்குடன் திரும்பி வந்தார். கர்த்தரை ஆராதித்தார். அவருடைய ஆராதனை நமக்கு நல்ல முன்மாதிரியாகும். (லூக்:17:13-16)

1. நன்றியுள்ள இருயத்துடன் அவர் ஆராதனைக்கு வந்தார்.
2. உரத்த சத்தத்தோடே ஆராதித்தார்.
3. தன் சாட்சியின் மூலம் தேவனை மகிமைப்படுத்தினார்.
4. ஸ்தோத்திரம் செலுத்தினார்.
5. முகங்குப்புற விழுந்து ஆராதித்தார்.

இவ்விதமாக நாம் சபையாருடன் கூடி ஆராதிக்க வேண்டும். இப்படி ஆராதிக்கிறவர்களை ஆண்டவருடைய உள்ளம் தேடுகிறது (லூக்:17:7). சுகமானவர்கள் 10 பேர் ஆனால் ஒருவனே இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கும்படி அவருடைய பாதத்துக்கு திரும்பி வந்தார். அதாவது 10 பேரில் ஒருவர் தான் ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இன்று நம்முடைய சபைகளிலும் இதேபோல் நடந்து கொண்டிருக்கிறது. உங்கள் ஆத்துமா வாழ வேண்டுமானால் உங்கள் தனி ஆராதனையிலும் உங்கள் சபை ஆராதனையிலும் முழு இருதயத்தோடு ஆராதனை செய்யுங்கள்.

6. அறிவுள்ள ஆத்துமா:

நமது ஆத்துமா செயல்படும் இடம் நமது தலை என்று நிதானிக்கலாம். நமது தலையில் தான் மனது மண்டலமும், அறிவு மண்டலமும் இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அறிவு மண்டலம் கர்த்தருடைய வேத வசனத்தை கற்று ஆத்துமா அறிவடைய வேண்டும். அறிவில் வளரும் ஆத்துமா செழிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல; கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான்.(நீதி 19:2)**

**நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். (மத் 11:29)**

நமது கரத்தில் இருக்கிற வேத புத்தகம் சகல அறிவையும் நமக்கு கற்றுக் கொடுக்கும் புத்தகமாகும். இந்த புத்தகத்தை தினமும் படிப்பவர்களின் ஆத்துமா சகல அறிவிலும் பூரணமாக நிறைவடைவார்கள் என்பது நிச்சயம். வேதத்துக்கு நிகரான புத்தகம் இதுவரை தோன்றியதில்லை. இனி தோன்றப் போவதுமில்லை. எனவே வேதப்புத்தகத்தை வாசித்து கர்த்தரை அறிகிற அறிவிலே உங்கள் ஆத்துமாவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர் தமது சபையை போஷித்து காப்பாற்றுகிறார் என்று எபே. 5:29

சொல்லுகிறது. அதாவது வேத வசனத்தையே நமக்கு ஆகாரமாக சத்துண வாக ஊட்டுகிறார். எனவே வேதத்தின் அறிவினால் உங்கள் ஆத்துமா செழிக்கட்டும் என்று கர்த்தர் கூறுகிறார்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையில் நாம் கேட்கிற பிரசங்கம் நம்மை உற்சாகமுட்டுகிற தேவனின் செய்தியாகும். ஆனால் தேவனைக் குறித்தும் தேவ நீதியைக் குறித்தும் கர்த்தரின் உபதேசங்கள் குறித்தும் தெளிவாக அறிய வேண்டுமானால் வேதபாட கூட்டங்களுக்கும் நமது வீடுகளில் நடக்கும் ஜெபக் கூட்டங்களுக்கும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். அங்குதான் நமது வாழ்க்கை நிலையை குறித்த வேதாகம அறிவை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

இவ்விதமாக நமது ஆத்துமா கர்த்தரைப் பற்றிய அறிவில் வளருமானால் நாம் செழிக்க முடியும். எனவே அறிவுள்ள ஆத்துமாவே வாழ்ந்து சுகமாயிருக்கும்.

## 7. உதாரகுணமுள்ள ஆத்துமா:

யாருடைய ஆத்துமா செழிக்கும்? யாருடைய ஆத்துமா வாழும்? என்று தியானிப்போமானால் கடைசியாக உதாரகுணமுள்ள ஆத்துமாவே செழிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சு கிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். (நீதி 11:25)**

உங்கள் ஆத்துமா வாழ வேண்டுமா? நீங்கள் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமா? உங்கள் ஆத்துமாவில் சந்தோஷமும் பூரிப்பும் அடைய வேண்டுமா? உங்கள் சரீரத்தில் சுகத்தோடு நீண்ட காலம் வாழ வேண்டுமா? அதற்காக நீங்கள் செய்ய வேண்டிய ஏழாவது சத்தியம் என்னவென்றால் நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் காரியத்திலும் ஏழைகளுக்கு தர்மம் செய்யும் விஷயத்திலும் உதாரகுணத்துடன் செயல்பட வேண்டும். ஏனென்றால் உதாரகுணமுள்ள ஆத்துமாவே செழிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு கொடுத்தல், ஏழைகளுக்கு கொடுத்தல் என்ற விசயத்தில் கஞ்சத்தனம், கருமித்தனம், லோகத்தனம் கூடாது என்று கர்த்தர் கூறுகிறார். (2 கொரி:9:5) உதாரத்துவமாக கொடுக்க வேண்டுமென்பதே கர்த்தரின் கட்டளையாகும்.

**ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தான தர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத் துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்து கிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது.(2கொரி 9:5)**

குறைந்த பட்சம் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய கட்டளையாகும். (எபி.7:8). கூடுதல் பட்சம் எவ்வளவு கொடுக்க வேணடும் என்று தியானிப்போமானால் உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும், உற்சாகமாய் கொடுக்க வேண்டும் என்பது தான் புதிய ஏற்பாட்டு உபதேசமாகும். அதாவது தசமபாகத்திற்கும் மேலாக அதிகமாக கொடுப்பது தான் உதாரத்துவமாக கொடுப்பதாகும். உதாரத்துவமாய் கொடுப்பவரின் ஆத்துமாவே செழிக்குமென்று கர்த்தர் கூறுகிறார்.

ஆபிரகாமின் விசுவாச வாழ்வின் 25 வருடங்களில் பக்திக்கடுத்த எத்தனையோ பரிசுத்த கற்பனைகளை கைக்கொண்டார். ஆகிலும் வாக்குத்தத்த புத்திரனாகிய ஈசாக்கு பிறக்கவில்லை. கர்த்தரின் வாக்குத் தத்தின் படி ஈசாக்கு கிடைக்கவில்லை. ஆனால் கர்த்தருக்கு உதாரத்துவமாக கொடுக்கும் சத்தியத்தை ஆபிரகாமும் சாராளும் புரிந்து கொண்டு செயல் பட்ட போது தான் ஈசாக்கு பிறந்தார். இதை ஆதி. 18: 1-10வரை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

1. ஆபிரகாம் தானாகவே முன்வந்து உபசரித்தார். (ஆதி. 18:2)
2. ஆபிரகாம் உற்சாகமாக உபசரித்தார். (ஆதி. 18:6)
3. ஆபிரகாம் தாராளமாக கொடுத்தார். (ஆதி. 18:6,7)

இவ்விதமாக ஆபிரகாமின் ஆத்துமா தாரளமாக கொடுக்கும் ஆத்துமா வாக இருந்தபடியால் அவர் செழித்தார். அவரின் மனைவியின் சரீரம் சுகம் பெற்று செழித்தது. ஒரு உற்பவகாலத்திட்டத்தில் ஈசாக்கு பிறப்பான் என்று கர்த்தர் சொன்னார். (ஆதி.18:10)

இன்று உங்கள் சரீரத்தில் சுகம் வேண்டுமா? பொருளாதாரத்தில் வாழ்ந் திருக்க வேண்டுமா? தேவனுடைய பரிபூரண ஜீவன் உங்கள் குடும்பத்தில் பாய்ந்தோட வேண்டுமா? இன்றே உதாரகுணத்துடன் செயல்பட உறுதியான தீர்மானம் எடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா வாழ்ந்து சுகமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

# 8 மூன்று வித மக்கள்

நமது ஆவி, ஆத்துமா, சரீரப் பாடத்தில் முக்கியமான நிலைக்கு வந்துள்ளோம். பவுல் அப்போஸ்தலன் ஊழியம் செய்த கொரிந்து பட்டணத்து சபையிலே மூன்று வித ஜனங்கள் இருந்ததாக அவர் எழுதுகிறார். அதாவது ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று பிரிவுகளில் ஏதாவது ஒன்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்ற பூரண நிலையை அடையாதவர்கள் அங்கிருந்ததாக அவர் எழுதுகிறார். அவர்களை மூன்றுவித மக்கள் என்று அவர் பிரிக்கிறார்.

1. மாம்சத்துக்குரியவர்கள் (குழந்தைதனமுள்ளவர்கள்)
2. ஜென்ம சுபாவத்தையுடைவர்கள் (அறிவு சார்ந்தவர்கள்)
3. ஆவிக்குரியவர்கள் (உணர்வுள்ளவர்கள்)

இந்த மூன்று பிரிவினரையும் சற்று கருத்தாய் தியானிப்போமாக. தியானத்திற்குப் பின்பு நாம் யார் என்பதைக் கண்டு கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் பூரணப்படுவோமாக.

## 1. மாம்சத்துக்குரியவர்கள்:

கொரிந்திய சபையிலே மாம்சத்துக்குரிய கிறிஸ்தவர்கள் ஏராளமான பேர் இருந்தார்கள். (1கொரி. 3:1,2) இவர்களை கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் என்று எழுதுகிறார். இவ்விதமாக மாம்சத்துக்குரியவர்களாக ஜீவிப்பவர்களை இனம் கண்டு கொள்வது எப்படி?

அவர்கள் கீழ்க்கண்;ட படி மூன்று வித குணங்களை உடையவர்களாக இருப்பார்கள்.

1. பொறாமையுள்ளவர்களாக இருப்பார்கள்
2. வாக்குவாதம் செய்பவர்களாக இருப்பார்கள்
3. பிரிவினை குணமுள்ளவர்களாக இருப்பார்கள்

என்று எழுதுகிறார். யோசேப்பின் சகோதரர்கள் நல்லவர்களாக இருந்தாலும் பொறாமையுள்ளவர்களாக இருந்தார்கள். (ஆதி:26:12 16). பொறாமையுள்ள

வர்கள் எவராயிருந்தாலும் அவர்கள் மாம்சத்துக்குரியவர்களே. அவர்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் தான். இவர்கள் சிறுசிறு விஷயத்திலும் கூட வாக்குவாதங்கள் செய்வார்கள். (1கொரி.3:4 ; 1கொரி:1:11,12). இவர்கள் கர்த்தர் மேல் பாசம் வைக்கிறதை விட்டுவிட்டு ஊழியக்காரர்கள் மீது அன்பு வைத்தார்கள். கர்த்தருடைய விசுவாசியாய் இராமல் ஊழியக்காரருடைய ரசிகர்களாய் இருப்பார்கள். இவர்கள் சுயநலவாதிகளாய் இருப்பார்கள். இவர்களுடைய சுயநலம் தான் இவர்களை பொறாமைக்காரர்களாக மாற்றி விட்டது. இவர்களுடைய சுயநலத்தில் தான் வாக்குவாதம் செய்பவர்களாக மாறிப்போனார்கள். இவர்களுடைய சுயநலத்தில் தான் பிரிவினை வாதங்கள் திருச்சபைக்குள் நுழைகிறது.

இப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் முதிர்ச்சி பெற்றவர்கள் அல்ல. இவர்கள் குழந்தைதனமானவர்களே. 1 கொரி:11:18ன்படி ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதகங்கள் உடையவர்களாய் இருப்பார்கள். இவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி ஆவிக்குரிய 9 வரங்களையும் பெற்று அப்பியாசித்தாலும் ஜாதி, துவேசம் உள்ளவர்களாய் இருப்பார்கள்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குழந்தைகளை மணவாட்டியாக சேர்த்துக் கொள்ள வரமாட்டார். ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சிப் பெற்ற பூரணப்பட்ட கற்புள்ள கன்னிகையே சேர்த்துக் கொள்ள வருகிறார். எனவே பிரியமானவர்களே நீங்கள் இப்பொழுதே குழந்தைக்கு ஏற்றவைகளை ஒழித்து விடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆவிக்குரரிய ஜீவியத்தில் குழந்தையாய் இருந்ததாக பவுல் தன்னைக் குறித்து சொல்லுகிறார். ஆனால் அவர் ஆவிக்குரிய வாழ்க்கையில் புருஷனாக வளர்ந்த போது குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன் என்று சொல்லுகிறார். (1 கொரி 13:11)

எனவே பிரியமானவர்களே நீங்கள் உங்கள் பொறாமைகளையும் வாக்குவாத குணங்களையும் பிரிவினை எண்ணங்களையும் ஒழித்து விட வேண்டும்.

## 2. ஜென்ம சுபாவத்துக்குரியவர்கள்:

ஜென்ம சுபாவத்தையுடைவர்கள் யார்? என்றால் ஆவியானவரின் வரங்களையோ ஆவியானவரின் கிரியைகளையோ விசுவாசியாமல் அறிவையே சாந்திருப்பார்கள். எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்பவர்களாக இருப்பார்கள். ஊழியக்காரருக்கு எதிராக புரட்சி செய்வார்கள். இப்படிப் பட்டவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற முடியாது. இவர்கள் ஜென்ம சுபாவத்துக்குரியவர்கள்.

ஜென்ம சுபாவத்துக்குரியவர்கள் வேதத்தின் உட்பொருளை விளங்கிக் கொள்ள மாட்டார்கள். பரிசுத்த வேத வசனங்கள் எல்லாம்

ஆவிக்குரியவைகளாக இருக்கிறது. (The Bible is spritual) ஆவிக்குரிய சத்தியங்கள் நிறைந்த வேத புத்தகத்தை வாசிக்கும் போதும் அதை கற்றுக் கொள்ளும் போதும் அதின் பிரசங்கங்களை கேட்கும் போதும் ஜென்ம சுபாவத்துக்குரியவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். எத்தியோப்பியன் தன் தோளையும் சிவிங்கி தன் புள்ளியையும் மாற்றக்கூடாதது என்பது போல ஜென்ம சுபாவத்துக்குரியவர்களின் பிறவிக் குணங்களை ஒருபோதும் மாற்ற முடியாது. இவர்களை மாற்றுவதற்காக எத்தனை கன்வென்ஷன்கள், எத்தனை காத்திருப்பு கூட்டங்கள், எத்தனை திருவிழாக்கள், எத்தனை பேரின்ப பெருவிழாக்கள் நடத்தினாலும் இவர்கள் மாற மாட்டார்கள்.

சிம்சோனை கட்டியிருந்த கட்டுகளை அறுக்கும் படி அவன் மேல் இறங்கின தேவ அக்கினி இவர்கள் மேல் இறங்கினால் தான் இவர்களின் ஜென்ம சுபாவங்கள் இவர்களை விட்டு நீங்கும். பரிசுத்த ஆவியானவர் வரும் போது பரிசுத்த அக்கினி சேர்ந்தே வருமல்லவா? (லூக்கா 12:49). எனவே அன்று சிம்சோன் தன் ஜனத்தாரால் கட்டப்பட்ட கட்டுகளிலிருந்து அவிழ்க்கப்பட்டது போல ஜென்ம சுபாவத்தவரின் குடும்ப குணங்களி லிருந்து பரிசுத்த ஆவியானவருடைய அக்கினியினால் விடுதலை வரும் போது இவர்கள் ஆவிக்குரியவர்களாக மாறுவார்கள்.

நீங்கள் அறிவை சார்ந்த கிறிஸ்தவரா? அல்லது ஆவியானவரால் போதிக்கப்படுகிற விசுவாசியா? நீங்கள் ஜென்ம சுபாவத்தை உடையவர்களா? அல்லது திவ்ய சுபாவத்தை உடையவர்களா? கர்த்தர் நம்மை ஆவிக்குரியவர்களாக மாற்றி அவருடைய மணவாட்டியாய் காணப்பட பூரணத்தை கட்டளையிடுவாராக.

## 3. ஆவிக்குரியவர்கள்:

ஆனால் ஆவிக்குரியவர்களோ பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிறைந்து வேத வசனத்தின்படி வாழ்வார்கள். வேத வசன சத்தியங்களை தங்கள் வாழ்க்கையில் பயிற்சி செய்து பார்ப்பார்கள். வேத வசனத்தை பயிற்சி செய்யும் போது தோல்வி ஏற்பட்டாலும் துவண்டு போகாமல் மீண்டும் முயற்சி செய்வார்கள்.

எனவே ஆவிக்குரியவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது எப்படி என்று அறிய கீழே உள்ள வசனத்தை வாசியுங்கள்.

**காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதே சிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தை யாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக் கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று**

**பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபி 5:12-14)**

இந்த மூன்று வசனங்களிலும் ஆவிக்குரியவர்களை நாம் அடையாளம் கண்டுபிடிக்கலாம்.

1. வசனத்தை கற்றுக் கொள்பவர்கள்.
2. வசனத்தை பயிற்சி செய்பவர்கள்.
3. நன்மை எது? தீமை எது என்று பகுத்தறியக்கூடியவர்கள்.

இப்படிப்பட்டவர்களே ஆவிக்குரியவர்களாகும். நீங்கள் மாம்சத்துக் குரியவர்களாகவும் இருக்கக் கூடாது. ஜென்மசுவாபத்திற்குரியவர்களாகவும் செயல்படக் கூடாது. நீங்கள் அபிஷேகத்தில் நிறைந்து வேத வசனத்தைக் கற்று வாழ்க்கையில் செயல்படுத்தி தேவ சாயலில் பூரணப்படுகிற ஆவிக்குரியவர்களாய் இருப்பீர்களாக. கர்த்தர் உங்களை அப்படியே நடத்துவாராக.

ஆதி அப்போஸ்தல காலத்தில் பவுல் அப்போஸ்தலன் பல பட்டணங்களிலும் கிராமங்களிலும் பயணம் செய்து அடிவாங்கி உதை வாங்கி கட்டுகளையும் காயங்களையும் பெற்று இரத்தத்தை சிந்தி ஊழியம் செய்தார். அவர் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டார்.

**மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.(அப் 16:7,8)**

பரிசுத்த ஆவியானவர் அவரை கட்டுப்படுத்தி நடத்தினார். பரிசுத்த ஆவியானவர் அவரையும் ;சபையாரையும் போதித்து நடத்தினார்.

**அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. (அப் 15:29)**

இப்படி ஆரம்பித்த ஆவிக்குரிய சபைகளுக்கு தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் மூலம் தூது பேசினார். ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று திருவுளம் பற்றினார். (வெளி. 2:7; வெளி 2:11; வெளி 2:17; வெளி 2:29; வெளி 3:6; வெளி 3:13; வெளி 3:22)

ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட அந்த எழு சபைகளும் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலை ஆளுகையை, போதனையை விட்டுவிட்ட படியால் இன்று அவைகள் பாழடைந்த மண்டபங்களாக சுற்றுலா பிரயாணிகள் பார்த்துச் செல்லுகிற அருங்காட்சியக

மாக மாறிப் போயின. இன்று அங்கு சபைகள் இல்லை. பாழடைந்த இடிபாடுகளுள்ள பழைய கட்டடங்களே மிஞ்சியிருக்கின்றன.

ஒரு காலத்தில் வரங்களாலும் கனிகளாலும் ஆவியானவராலும் நிறைந்திருந்த அந்த ஊழியம் ஆவிக்குரிய சபையாக இருந்தது. ஆனால் ஆவியானவரை இழந்த பின்பு இன்று அருங்காட்சியகங்களாக மாறிப் போயின. இதன் மூலம் கர்த்தர் நம்மோடு பேசுகிறார். நீங்கள் எவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை நடத்துகிறீர்கள் என்பது முக்கியமல்ல. உங்கள் ஸ்தாபனம் ஆவியானவரால் போதிக்கப்பட்டு ஆவியானவரால் நடத்தப்படுகிறதா?

உங்கள் சபையில் எவ்வளவு பேர் கூடிவருகிறார்கள் என்பது முக்கியமல்ல. உங்கள் ஆராதனையில் உங்கள் ஊழியங்களில் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதல் இருக்கிறதா? என்பதே முக்கியம். நீங்கள் எத்தனை வருட அனுபவமுள்ள விசுவாசி என்பது முக்கியமல்ல என்று பரிசுத்த ஆவியானவர் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையோடு பேசுகிறாரா என்பது தான் முக்கியம். நீங்கள் ஆவிக்குரியவர்களாக இருந்தால் ஆவியானவருடைய சத்தம் கேட்பீர்கள். ஆவியானவரால் வழிநடத்தப்படுவீர்கள்.

ஆவிக்குரியவன் வேத வசனத்தை பற்றிக்கொண்டு அதன்படியே வாழ்வார்கள். ஏனென்றால் ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான் என்று பவுல் எழுதுகிறார். (1கொரி 2:15) எனவே பிரியமானவர்களே நீங்கள் மாம்சத்தின்படி சிந்திக்காதீர்கள். மனுஷ யோசனையின்படி நடக்காதிருங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்;கையிலும், உங்கள் குடும்ப வாழ்க்கையிலும் உங்கள் ஊழியத்திலும் நிரந்திர வெற்றி வேண்டுமா? ஆவியானவருடைய ஆலோசனையை கேளுங்கள்.

நீங்கள் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தாலும், நீங்கள் எவ்வளவு நல்ல பராம்பரிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பரிசுத்த ஆவியானவருக்கு முற்றிலும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால் நமது தேவன் ஆவிக்குரியவர். நமது வேதம் ஆவிக்குரியது. நாமும் ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டும்.

நீங்கள் ஆவிக்குரியவர்களாக இருக்கும் போது உலகம் உங்களை பகைக்கும். உங்களை சூழ இருக்கிறவர்கள் உங்களை பரியாசம் பண்ணுவார்கள். உங்களை உள்ளபடியே புரிந்து கொள்ளமாட்டார்கள். நீங்கள் பிழைக்கத் தெரியாத முட்டாள் என்று சொல்லுவார்கள். உலக அறிவும் ஜென்ம சுபாவங்களும் ஆரம்பத்தில் சில நாட்களுக்கு உதவி செய்வது போல் தெரியும். ஆனால் அவர்கள் சீக்கிரத்தில் தோல்வியடைந்து வெட்கப்படுவார்கள்.

ஆனால் ஆவிக்குரியவனே நிரந்திர வெற்றியைப் பெறுவான். நிமிர்ந்து

நின்று களிகூறுவான். எனவே பிரியமானவர்களே நமது ஜீவியம் நமது குடும்பம் நமது ஊழியம் எல்லாமே ஆவிக்குரியதாக இருக்கட்டும். இன்றைய திருச்சபைகளில் ஆவியைப் பெற்றேன் என்று சொல்லிக் கொள்கிற பல இடங்களில் மாம்சத்துக்குரியவர்களும் ஜென்ம சுவாபவத்துக்குரியவர்களும் முக்கியமான இடங்களில் அமர்ந்து கொண்டு கொடி கட்டி பறக்கிறார்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட ஏழு சபைகளிலும் லவோதிக்கேயா சபை முற்றிலும் மாம்சத்துக்குரிய சபையாகும். லவோதிக்கேயா என்றால் மக்களாட்சி என்பது அதின் அர்த்தமாகும். அதாவது அங்கே ஆவியானவருடைய ஆட்சி கிடையாது. மக்கள் அநேகர் ஒன்று கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் அது வேத வசனத்துக்கு புறம்பானதாக இருந்தாலும் அது செயல்படுத்தப்படுகிறது.

ஆவியானவரால் நடத்தப்படாத லவோதிக்கேயா சபையை குறித்து கர்த்தர் சொல்வது என்ன? உன்னை நான் வாந்திப் பண்ணி போடுவேன் என்றார். (வெளி. 3:16)

பிரியமானவர்களே இன்று நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? ஒருகாலத்தில் ஆவிக்குரியவர்களாய் இருந்து இன்று மாம்சத்துக்குரியவர்களாய் மாறிப் போனீர்களோ? முந்தின காலத்தில் ஆவியானவரால் நடத்தப்பட்ட நீங்கள் இன்று ஜென்ம சுபாவத்திற்குரியவர்களாய் மாறிப் போனீர்களோ? அல்லது உங்கள் சூழ்நிலை உங்களை மாம்சத்துக்குரியவர்களாய் மாற்றி விட்டதோ?

இப்போழுதே உபவாசததுடனும் ஜெபத்துடனும் வேத வசனத்தை வாசித்து உங்கள் ஆதி பிரதிஷ்டைகளை புதுப்பித்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை மீண்டும் பெற்று அனல் மூட்டுவீர்களாக. ஜென்ம சுபாவங்களும் மாம்சத்திற்குரிய குணங்களும் உங்களை விட்டு நீங்கிப் போவதாக. பவுல் அப்போஸ்தலனைப் போல பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலுக்குள் இருக்கிற ஆவிக்குரியவர்களாய் வாழ்வீர்களாக.

# 9 மூன்று வித நிறைவுகள்

மனிதனுக்குள் மூன்று வித பகுதிகள் உண்டென்று நாம் தெளிவாய் கற்றுக் கொண்டோம். அவைகள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று வகை உண்டு. இவைகள் மூன்று பகுதியும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தால் நிரம்புவதையும் அதின் அனுபவங்களையும் இந்த அத்தியாயத்தில் தியானிக்கப் போகிறோம்.

**1. பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்படுதல்**

**2. பரிசுத்த ஆவியானவரால் நிரம்புதல்**

**3. பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழிதல்**

ஆகிய அனுபவங்களாகும்.

**1. நமது ஆவியில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்:**

கொர்நெலியு வீட்டார் தேவனுடைய வார்த்தையை கேட்டு விசுவாசித்த போது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார் என்று வாசிக்கிறோம் (அப். 10:44).

இவர்கள் மேல் ஆவியானவர் இறங்கியதை குறித்து பேதுரு அப்போஸ்தலன் எப்படி விவரிக்கிறார்? என்று கவனிப்போமானால்

**பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். (அப் 10:46)**

பரிசுத்த ஆவியானவர் புதிய விசுவாசிகள் மீது பொழிந்தருளப்பட்டார் என்று விளக்குகிறார். அதாவது ஒரு பெரிய குடத்தில் இருக்கிற தண்ணீரை ஒரு சிறிய டம்ளரில் ஊற்றுவதை போன்ற அனுபவமாகும். அந்த சிறிய டம்ளர் சிறிது நேரத்தில் நிரம்பிவிடும். இதுதான் நமது ஆவியின் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுகிற முதல் அனுபவமாகும்.

நமது ஆவியில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதின் அடையாளம் என்ன?

அவர்கள் அந்நிய பாஷைகளை பேசினார்கள். தேவனைப் புகழ்ந்தார்கள் என்று வாசிக்கிறோம் (அப்.10:44). பெந்தெகோஸ்தே நாளில் மேலறையில் கூடியிருந்த 120 பேர் மேலும் ஆவியானவர் இறங்கினார் என்று வாசிக்கிறோம். ஆவியினால் நிரப்பப்படுவதில் முதல் அனுபவம் இதுதான். அதாவது நமது ஆவி முழுவதையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்பும் போது அதுதான் ஆவியில் நிரப்பப்படுதல் என்ற முதல் அனுபவமாகும் (அப். 2:4). அதன் அடையாளமாக நாம் அந்நிய பாஷைகளை பேசுகிறோம். நாம் அந்நியபாஷைகளை தினந்தோறும் ஜெப நேரத்தில் பேசிக்கொண்டே இருக்கிற போது நமது ஆவி முழுவதும் தெய்வீக பிரசன்னத்தினால் நிரம்பிவிடும். அப்போது பொல்லாத ஆவிகள் நமது ஆவியை கெடுக்க முடியாது. ஏனென்றால் கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவரோடு ஒரே ஆவியாய் இருக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது. (1கொரி 6:17)

**2. ஆத்துமாவில் பரிசுத்த ஆவியினால் நிரம்புதல்:**

ஒருமுறை பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட நாம் தொடர்ந்து அபிஷேகத்தில் நிரம்பி ஜெபித்துக் கொண்டேயிருக்கும் போது நமது ஆவியில் நிரம்பி வழிந்து நமது ஆத்துமாவில் ஆவியானவர் ஊற்றப்படுகிறார். இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கூறுவது என்ன?

**துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து (எபே 5:18)**

இந்த வசனத்தின்படி நமது ஆவியில் நிரம்பி, அது நிரம்பி வழிந்து நமது ஆத்துமாவாகிய உள்ளான மனுஷனை நிரப்பும் போது அதுதான் நமது ஆத்துமாவில் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு என்ற அனுபவமாகும். இதற்காக சில நாட்களோ அல்லது சில மாதங்களோ தொடர்ந்து ஆவியில் நிரம்பி ஜெபம் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும்.

நமது ஆத்துமாவில் ஆவியின் நிறைவு வரும் போது நமது விசுவாச வாழ்வில் ஆவிக்குரிய அதிகாரங்கள் செயல்படும். நமது ஜீவியத்திற்கெதிராய் எழும்புகிற பிசாசுகளையும், பில்லிசூனியங்களையும் எதிர்த்து நின்று அவைகளை ஓடஓட நாம் விரட்டிவிடக்கூடிய ஆவிக்குரிய அதிகாரமுள்ளவர்களாய் இருப்போம். இதற்கு பவுல் அப்போஸ்தலன் அனுபவத்தை கீழே வாசிப்போமாக.

**அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து:**

**எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின்மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?**

**இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.(அப் 13:9-11)**

இவ்விதமாக நமது ஆத்துமாவில் பரிசுத்த ஆவியினால் நிரம்பி அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பிப்போமாக. நமது ஆத்துமாவில் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு வரும்போது நமது வாழ்க்கையிலும் நமது ஊழியத்திலும் நம்மை எதிர்கின்ற எப்படிப்பட்ட மனிதர்களையும் பிசாசுகளையும் பில்லி சூனியங்களையும் ஓடஓட விரட்டியடித்து துரத்தியடிக்கிற வல்லமை உடையவர்களாக காணப்படுவோம். இதுதான் நமது ஆத்துமாவில் உண்டாகிற பரிசுத்த ஆவியின் நிறைவாகும்.

ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்த போது தரிசனம் கண்டான். (அப். 7:56). இன்று நாமும் நமது ஆத்துமாவில் உள்ள மனது மண்டலத்தையும் அறிவு மண்டலத்தையும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பி விடுவோமானால் தேவன் நமக்காய் வைத்திருக்கிற எதிர்காலத்தை குறித்த தரிசனங்களை காண முடியும். ஸ்தேவானை சுற்றிலும் இருந்த வேதபாதகரும் பரிசேயரும் தங்கள் பல்லைக் கடித்தார்கள். ஆளுக்கொரு கல்லை எடுத்துக் கொண்டார்கள்.

ஆவியில் நிறைவுள்ளவன் பரலோகத்தை காண்கிறான். தேவனுடைய குமாரனைக் காண்கிறான். தனக்காக தேவன் வைத்திருக்கிற தரிசனங்களை காண்கிறான். ஆனால் ஆவியின் நிறைவைப் பற்றிய அறிவில்லாதவர்கள் பல்லைக் கடிக்கிறார்கள். கல்லை எடுக்கிறார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள். உங்கள் ஆத்துமாவிலே பரிசுத்த ஆவியானவரின் நிறைவை உடையவர்களா? அல்லது பல்லைக் கடித்து கல்லை எடுப்பவர்களா?

### 3. சரீரத்தில் பரிசுத்த ஆவியினால் நிரம்புதல்:

முதலாவது நமது ஆவி நிரம்பி வழிந்து, இரண்டாவதாக நமது ஆத்துமா நிரம்பி வழிந்து, மூன்றாவதாக நமது சரீரத்தில் ஆவியின் நிறைவு வரும் போது நமது அனுபவம் தாவீது ராஜாவின் அனுபவம் போல் இருக்கும். தாவீதின் அனுபவம் என்ன?

**என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப் படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.(சங் 23:5)**

என்று பாடுகிறார். இந்த சங்கீதத்தின் அனுபவங்கள் ஆழ்ந்த ஆவிக்குரிய அனுபவங்களாகும். இந்த சங்கீதத்தை சிறுப்பிள்ளைகள் படித்து மனப்பாடம் செய்து ஞாயிறு பள்ளி ஆண்டுவிழாவில் மனப்பாடமாகச் சொல்லி பரிசு

வாங்குகிற சங்கீதமாக இருக்கிறதே தவிர அதின் ஆழமான ஆவிக்குரிய அனுபவங்களை உற்று கவனித்து அதை தனக்கு சொந்தமாக்குகிற விசுவாசிகள் மகிவும் குறைந்து போய் விட்டார்கள்.

அன்பானவர்களே உங்கள் சரீரத்தில் ஆவியின் நிறைவு வரும் போது முதலாவதாக நீங்கள் பரிசுத்தமாக இருப்பீர்கள். உங்கள் சரீரத்தில் இருக்கிற மாம்சத்தின் கிரியைகள் முற்றிலும் அழிந்து போகும். (ரோமர் 8:13) அதைத் தொடர்ந்து நீங்கள் விசுவாச வீரர்களாக மாறிவிடுவீர்கள். உங்கள் நாவு விசுவாச வார்த்தைகளை பேசுகிற நாவாக அபிஷேகம் பெற்றுவிடும்.

சங்கீதகாரனாகிய தாவீதின் வாய் விசுவாச வார்த்தைகளை பேசிற்று. அவர் பேசின விசுவாச வார்த்தையின் படியே அவருக்கு காரியங்கள் சம்பவித்தது. அவர் பேசிய விசுவாச வார்த்தை என்ன?


**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்றார். (சங். 23:6)**

இவ்விதமாக நமது சரீரம் பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழியும் போது விசுவாசத்தின் சிகரத்தை நாம் அடைவோம். அன்பானவர்களே நீங்கள் அபிஷேக நிறைவில் எந்த அளவில் நின்று கொண்டுயிருக்கிறீர்கள்? உங்கள் ஆவியின் நிறைவு வளரட்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். தாவீது ராஜாவைப் போல உங்கள் பாத்திரம் நிரம்பி வழிவதாக. இந்த நிமிடம் முதல் உங்கள் நாவு விசுவாச வார்த்தைகளைப் பேசுவதாக. இப்படி மூன்றுவித நிறைவும் உங்களுக்குள் நிறைவேறும் போது உங்கள் வாழ்க்கையிலும் உங்கள் ஊழியத்திலும் ஆசீர்வாதமான காரியங்கள் ஜீவ காலமுதல் நடந்து கொண்டேயிருக்கும். அதுமாத்திரமல்ல உங்கள் சரீரத்திலும் தீர்க்காயுசு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இப்படி நீங்கள் வாழும் போது இப்புத்தகத்தில் சொல்லப்பட்ட அனைத்து ஆவிக்குரிய சத்தியங்களையும் நீங்கள் கைக்கொள்ளும் போது உங்கள் வாழ்க்கையில் நடக்கப் போவது என்ன?

**சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (1தெச 5:23)**

என்ற ஆவியானவருடைய கட்டளை உங்கள் வாழ்க்கையில் நிறைவேறி நீங்கள் முற்றிலும் பரிசுத்தம் அடைந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுவீர்கள். ஆமென்.



## இந்நூலைப் பற்றி...

சிலர் தங்கள் வீட்டின் முற்றத்தைப் பெருக்கி, சுத்தம் செய்து, தண்ணீர் தெளித்து, கோலமிட்டு அழகு படுத்துவார்கள். ஆனால் வீட்டின் உள்ளறைகளை சுத்தமாக்க மாட்டார்கள். விசுவாசிகளின் வாழ்க்கையில் அந்தரங்கத்தையும், வெளியரங்கத்தையும் பரிசுத்தப் படுத்துவதுதான் இப்புத்தகம்.

Dr. செல்வின் M.B.B.S.,
ஒட்டன்சத்திரம்

ஊழியர்களும், விசுவாசிகளும் தூய்மையானவர்களாக வாழ ஏவப்படுகிற சத்தியங்கள் நிறைந்தது தான் இப்புத்தகம் - எளிமையான முறையில், தெளிவான விதத்தில் ஆத்தும ஆதாயம் செய்யத் தூண்டுவதுதான் இப்புத்தகம்.

*பாஸ்டர் ஜோசப் பாலசந்திரன்*
மதுரை

நீங்கள் ஆவிக்குரியவர்களா?
நீங்கள் உணர்ச்சி வசப்படுகிறவர்களா?
நீங்கள் அறிவை சார்ந்தவர்களா?
நீங்கள் மாம்சத்திற்குரியவர்களா?

என்று உங்களை நீங்கள் புரிந்து கொண்டு பரிசுத்தவான்களாக வாழ பல சத்தியங்களை ஆக்கியோன் எழுதியுள்ளார்.

*பாஸ்டர் ஓவின் ராபர்ட்ஸ்*
சென்னை

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்**
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209